DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1381
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday September 23, 2022


# Thousands of police officers gathered at Toronto Congress Centre to pay respects to slain officer Andrew Hong



# கொல்லப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் அன்ட்ரூ ஹோங்கிற்கு ஆயிரக்கணக்கான பொலிஸார் ஒரே மண்டபத்தில் கூடி 'பிரியாவிடை' வழங்கினர்

கடந்த வாரம் மிசிசாகா மாநகரில் திடீரென மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட அன்ட்ரூ ஹோங் என்னும் ரொறன்ரோ பிரதேச பொலிஸ் அதிகாரியின் இறுதி ஊர்வலத்திலும் அஞ்சலி நிகழ்விலும் பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டு தங்கள் மரியாதையை செலுத்தினர்.

நேற்று முன்தினம் 21ம் திகதி புதன்கிழமை நடைபெற்ற இந்த உருக்கமான இறுதி அஞ்சலி நிகழ்வில் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் மற்றும் ரொறன்ரோ மாநகர மேயர் ஜோன் ரோரி ஆகியோரும் கலந்து கொண்டனர். அத்துடன் மரணமடைந்த அதிகாரி அன்ட்ரூ ஹோங் அவர்களின் மனைவி ஜென்னி மற்றும் இரண்டு பிள்ளைகள் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர்.

வீதிப் போக்குவரத்துப் பொலிஸ் பகுதியில் ஒரு பயிற்றுனராகப் பணியாற்றி அன்ட்ரூ ஹாங்கின் இயல்பான குணங்கள், அவரது குழந்தைகள் மற்றும் போலீஸ் படையின் மோட்டார் சைக்கிள் பிரிவில் பயிற்சி பெற்றவர்கள்,ஆகியோர் ரொறன்ரோ காங்கிரஸ் அரங்கில் துப்பாக்கிதாரி ஒருவரினால் கொல்லப்பட்ட அன்ட்ரூ ஹோங் என்னும் பெயருடைய ரொறன்ரோ பிராந்திய பொலிஸ் அதிகாரிக்காக பலர் கண்ணீர் வடிததனர்.

அவரது மனைவி ஜென்னி தனது அஞ்சலி உரையில்,

"இந்த ஆண்டு நாங்கள் எமது திருமண நாளை ஒன்றாகக் கொண்டாடாத முதல் ஆண்டு" என்று கண்ணீர் விட்ட வண்ணம் கூறி தொடர்ந்து . "ஆண்ட்ரூ, நான் பேசுவதை நீங்கள் செவிமடுக்க முடியும் என்றால், கவனியுங்கள். நாளை மறுநாள் எமது திருமண நாளை கொண்டாட திட்டமிட்டோம். ஆனால் ஆத இடம்பெறவில்லை. ஆனால். நீங்கள் எப்போதும் என் வாழ்க்கையின் மிகப்பெரிய அன்பு செலுத்துகின்றவராக இருப்பீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்."

தனது இரண்டு குழந்தைகளுக்கு அருகில் மேடையில் நின்று கொண்டு, ஜென்னி ஹாங் தனது கணவரை "வாழ்க்கையை விட பெரியவர்" என்று விபரித்தார், அவரை அறிந்த அனைவராலும் நேசிக்கப்பட்டார். வழக்கமான விடுமுறை நாட்களில் ஒன்றாகப் பயணம் செய்யும் குடும்பத்துடன் நேரத்தைச் செலவிடுவதை அவர் விரும்பினார், மற்றவர்களுக்கு உதவுவதில் மகிழ்ந்தார்.



48 வயதான இந்த அதிகாரி அன்ட்ரூ அன்றை தினம் பதுங்கியிருந்த கொலையாளி ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு வாரத்திற்குப் பிறகு, கனடா மற்றும் அமெரிக்கா முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான காவல்துறை அதிகாரிகள், உயரதிகாரிகள் மற்றும் அன்புக்குரியவர்கள் ரொறன்ரோவில் அமைந்துள்ள காங்கிரஸ் அரங்கில் கூடி அஞ்சலி செலுத்தினர்.

அந்த ரொறன்ரோ காங்கிரஸ் அரங்கானது இராணுவ அம்சங்கள் நிறைந்த தீவிரம் இருந்தது, சீருடை அணிந்த அதிகாரிகள் தங்கள் மறைந்த தோழரைக் கௌரவிப்பதற்காக மூன்று மணி நேரத்திற்கும் மேலாக அங்கு இடம்பெற்ற பிரார்த்தனைகள் மற்றும் அஞ்சலி உரைகள் ஆகியவற்றை செவிமடுத்து வண்ணம் மிக அமைதியாகவும் இருந்தனர்.

இறுதி அஞ்சலி மற்றும் உரைகள் நிறைவுற்ற பின்னர் தொடர்ந்து ஹாங்கின் உடல் தாங்கிய பெட்டியை வெளியே காவிச் சென்ற பிறகு, கலந்து கொண்ட அனைவரும் பல நிமிடங்கள் நின்றுகொண்டிருந்தனர்.


தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX REALTRON BLUE & FORCE
கவாஸ். சோம சச்சிதானந்தன்



VOTE FOR

பிரம்ரன் நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்படக் கூடிய பிராந்திய வேட்பாளரான

(Regional Councilor- Ward 7 & 8)

# சிந்தியா ஸ்ரீ பிரகாஸ்

(Cynthia Sri Pragash) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்

bramptonmatters@outlook.com
Tel: 416-575-9569

பிரம்ரன் நகரசபையின் 7ம் 8ம் வட்டாரங்களுக்கான பிராந்திய கவுன்சிலருக்கான தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள இளைய தலைமுறை வேட்பாளரான சிந்தியா ஸ்ரீ பிரகாஸ் அவர்கள் பூக்களின் நகரம் என வர்ணிக்கப்பெறுகின்ற பிரம்ரன் நகரத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்து வருகின்றார்.

தனது கணவரோடும் இரண்டு பிள்ளைகளோடும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வரும் இவர் தனது 11வது வயதில் கனடாவில் குடியேறியவராவர். இவருக்கு சிறுவயதிலிருந்தே சமூகத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு வாழ்வதே விருப்பமான ஒன்றாகத் தோன்றியது. ஆதனால் தொண்டராக பல நிறுவனங்களில் பணியாற்றத் தொடங்கினார்.

பின்னர் தகவல் தொழில்நுட்பத்துறையில் பட்டம் பெற்ற சிந்தியா. புல பதவிகளை வகித்து பாராட்டுக்களைப் பெற்றவர். தான் சார்ந்த சமூகத்திற்கு சேவையாற்றும் வகையில் தற்போது. பிரம்ரன் நகரசபையின் பிராந்திய கவுன்சிலர் பதவி ஒன்றுக்கு வேட்பாளராக தன்னை நிறுத்தியுள்ளார். தான் பிராந்திய கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பெற்றால். பல முக்கிய தேவைகளை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக அயராது பாடுபடுவேன் என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிரம்ரன் நகரசபையின் 7ம் 8ம் வட்டாரங்களில் உள்ள மக்களுக்கான பூங்காக்களை மேம்படுத்துதல் மற்றும் சமூகங்கள் சார்ந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தி பயனுள்ள வகையில் தங்கள் ஓய்வு நேரங்களில் ஈடுபடும் வகையில் பணியாற்றவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**பிரம்ரன் வாழ் மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வேட்பாளரான சிந்தியா ஸ்ரீ பிரகாஸ் (Cynthia Sri Pragash- Ward 7-8 Brampton Municipal Council) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்**


# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Cleaning வேலைக்கு ஆட்கள் தேவை

Keele And hwy7 சந்திப்புக்கு அருகில் Cleaning வேலைக்கு ஆட்கள் தேவை
மாலை **3 - 11 (evening)**
இரவு **11 - 7 (midnight)**
**Full time work**

அழைக்க வேண்டியவர் -சங்கர்
**416-305-0264**

### CLEANING JOB

Major Mackenzie / Markham பகுதியில் துப்பரவுப் பணிக்கு ஒருவர் தேவை. 7 நாட்கள் வேலை. வேலை நேரம் அதிகாலை 5 மணி முதல் 8 மணிவரை. அனுபவமுள்ள machine operator தேவை.

தொடர்புகளுக்கு:
**(647) 701-9809**

### வேலை வாய்ப்பு

**Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை.
ஸ்காபுறோவில் காலை நேரத்தில் தினமும் 3 மணி நேரம் வேலை செய்ய **Cleaning** வேலையாட்கள் உடன் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
**416 858 6316**

### Room for Rent

ஸ்காபுறோவில் Ellesmere & Meadowvale சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொான்றில் மேல் தளத்தில் உள்ள அறை ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு. அனைத்து வசதிகளும் உண்டு. வாகனத் தரிப்பிடமும் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு-
**416 858 6316**

### Tutor Available

Math, Physics and Chemistry ஆகிய பாடங்கள்

Experienced Tutor is available for online tutoring in the subjects of Math, Physics and Chemistry.

For further details contact Sethu:
(416) 858-4259
Sedumadavan@hotmail.com

### Renovation Workers Wanted

**Workers needed for the following jobs:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva 416-706-8160**

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இந்தியாவிற்கும் சீனாவிற்கும் சற்று 'ஓய்வு' கொடுத்துள்ள ரணில்

தற்போது இலங்கையின் கழுத்தை இறுக்கமாகப் பிடித்திருக்கும் அண்மைக்கால பொருளதார நெருக்கடி தோன்றுவதற்கு முன்பதாகவே. பலவருடங்களாகவே முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ச மற்றும் கோட்டாபாய ராஜபக்ச ஆகியோர எதற்கு இந்தியாவை அல்லுத சீனாவை நாடிச் செல்வதே வழக்கமாக இருந்தது.
இலங்கைப் பிரதிநிதிகள் அவசர அவசரமாக இந்தியாவிற்கும் சீனாவிற்கும் மாறி மாறி அனுப்பி வைக்கப்பெறுவதும். அவர் குறைந்த பட்ச உதவிகளைப் பெற்றுக்கொண்டு இலங்கை திரும்பி, பாரிய உதவிகள் பெற்று வந்துள்ளதாக 'ஊதிப் பெருத்த' அறிக்கைகளை விடுவதிலும் பெயர்பெற்றவர்கள் இருந்தார்கள் மகிந்தா கோத்தாபாய போன்ற பகற் கொள்ளையர்கள்.
ஆனால். தற்போது உள்ள மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் வெளிநாட்டு தூதுவர்களிடம் ஆலோசனைகளைப் பெறுவதற்காக ரணில் விக்கிரமசிங்க என்னும் 'குள்ள நரி' பல மாதங்களாக 'கள்ளத்தனமான' திட்டங்களை இரகசியமாகவே வைத்திருக்கின்றது என்பது நிச்சயம் செய்யப்பட்டுள்ளது.
இந்த சந்திப்பில் கலந்து கொண்ட நாடுகளின் தூதுவர்கள் இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதி ரணிலிடம் உறுதியளித்துள்ளனர் என்ற ஒரு வழமையோன்ற செய்தியும் வெளியாகியுள்ளது.

இலங்கை தற்போது எதிர்நோக்கும் பிரச்சனைகளையும். கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெறுவது தொடர்பில் ஜனாதிபதி வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளித்தார். இச்சந்திப்பின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறுவதற்கும், கடன் மறுசீரமைப்பிற்கும் தமது ஒத்துழைப்பை வழங்குவதாக வெளிநாட்டுத் தூதுவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர். இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான முன்னேற்றம் குறித்து நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் இதன்போது விளக்கமளித்தனர். இதனையடுத்து, வெளிவிவகார தூதுவர்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, எதிர்கால சந்ததியினருக்காக தற்போதைய நெருக்கடியை , வெற்றிகொள்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். இதற்காக அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடனும், சமத்துவத்துடனும் பணியாற்றும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.
ரணில் விக்கிரமசிங்க என்னும் இலங்கைக்கு பொருத்தமும் தகுதியும் அற்ற ஒரு தலைவராக விளங்கும் மனிதர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மிக விரைவில் ஏமாற்றப்படுவார் என்று கொழும்பில் செய்தி ஒன்று காற்றில் தொடர்ந்து பறக்கும் ஒன்றாகவே உள்ளது.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டு காணிக்கு வல்வெட்டித்துறை நகரசபையினால் சிவப்பு எச்சரிக்கை



யாழ். வல்வெட்டித்துறையில் உள்ள தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டு காணிக்கு வல்வெட்டித்துறை நகரசபையினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.
காணியில் இருந்த வீடு முற்றாக அடித்து அழிக்கப்பட்ட நிலையில் காணி பராமரிப்பின்றி கைவிடப்பட்டுள்ளமையால் அப்பகுதியில் பற்றைகள் வளர்ந்துள்ளன.



பற்றைகளினால் டெங்கு நுளம்புகள் பரவும் அபாயம் உள்ளது என சுட்டிக்காட்டி, குறித்த காணியினை துப்புரவு செய்து 22ம் திகதிக்கு முன் தமக்கு அறியத்தரவேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் குறித்த ஆவணம் தங்களால் கையேற்கப்படும் எனவும் வல்வெட்டித்துறை நகரசபை சிவப்பு எச்சரிக்கையினை காட்சிப்படுத்தியுள்ளது.
இது குறித்து வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர் இராமச்சந்திரன் சுரேன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், பிரதேச மக்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
உடனடியாக துப்புரவு செய்ய முயற்சித்தால் பொலிஸ், இராணுவம் என பிரச்சினைகள் வரும் என்பதால் சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.
பின்னர் நகரசபை தொடர்ச்சியாக அந்த வளாகத்தை துப்புரவு செய்யும் எவரேனும் அதற்கு உரிமைகோரினால் பராமரிப்பு செலவுடன் மீள வழங்கப்படும் என்றார்.
இந்த காணி நீண்டகாலமாக துப்பரவு செய்யப்படவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.
இது குறித்து எம்.கே.சிவாஜிலிங்கம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், வல்வெட்டித்துறையில் எத்தனை இடங்களில் கடுகளாக பற்றைகள் வளர்ந்துள்ளது. அனைத்துக்கும் சிவப்பு எச்சரிக்கை ஒட்டியுள்ளார்களா? அந்த காணியை நானே பொறுப்பேற்று துப்புரவு செய்வேன் என்றார்.

# இலங்கை கடற்படையினரின் அராஜக போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்க ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் வெளியிட்ட அறிக்கையில், புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 8 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்திருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டிணத்தை சேர்ந்த 8 மீனவர்கள் கோடியக்கரையில் மீன் பிடித்துக்கொண்டு இருக்கும் போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் அதோடு அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது மீனவர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒருசில நாட்களுக்கு முன்னர் தான் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் மீண்டும் கைது செய்து இலங்கை கடற்படையின் அத்துமீறலுக்கு அளவே இல்லாமல் போய்விட்டது. ஒன்றிய, மாநில அரசுகள் இவற்றிற்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலே உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தங்கள் வாழ்வாதாரத்திற்காக மீன் பிடிக்க செல்லும் மீனவர்களுக்கு தொடந்து அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் இலங்கை கடற்படையினரின் அராஜக போக்கு மிகவும் கண்டிக்கதக்கது. மத்திய மாநில அரசுகள் மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பை அளித்து, இனிமேலும் இதுபோன்ற நிகழ்வுகள் தொடராமல் தடுக்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

# குருந்தூர்மலை: அத்துமீறிய பிக்குமார்களும் கண்டுகொள்ளாத அரசும்

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



உலகின் பல நாடுகளில் மத உரிமை அடிப்படை உரிமைகளில் ஒன்று. இதை ஐ நா மன்றமும் ஏற்றுக்கொண்டுள்ளது. வழிபாட்டு நிலங்கள் அபகரிக்கப்படுவது மனித உரிமை மீறல் செயலாகும் என்று ஐ நாவின் மனித உரிமைகள் பேராயம் பலமுறை வலியுறுத்தியுள்ளது.

தற்போது இலங்கை தொடர்பாக ஐ நா மனித உரிமைகள் பேராயத்தில் விவாதம் நடைபெற்றுவரும் வேளையில், இலங்கையில் தொடர்ச்சியாக தமிழர்களின் தனிப்பட்ட காணிகளும், பாரம்பரிய நிலங்களும் அபகரிக்கப்படுவது தொடர்கதையாகியுள்ளது. இம்மாதம் 12 ஆம் திகதி ஐ நா மனித உரிமைகள் ஆணையத்தின் 51 ஆவது அமர்வில், தலைமைப் பொறுப்பை தற்காலிகமாக ஏற்றிருந்த துணை ஆணையர் நாடா அல் நஷீ்.ப் அம்மையார், இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அனைத்து மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டு வாழ்வாதாரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று கூறினார். மேலும் மக்களிடமிருந்து வலிந்து கைப்பற்றப்பட்ட காணிகள் மற்றும் தொல்லியல் காரணங்களை மேற்கோள் காட்டி நிலங்கள் அபகரிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். அப்படி வலியுறுத்தப்பட்டும், தமிழர்கள் பாரம்பரிய பூமி பறிபோவது தொடர்வதற்கு இந்துக்களின் புனித பிரதேசங்களில் ஒன்றான குருந்தூர்மலைப் பகுதி அண்மைக் காலத்தில் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

இப்போது முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர்மலைப் பகுதியில் இந்துக்களின் நிலத்தையும் அங்குள்ள ஆதிசிவன் அய்யனார் கோவிலையும் பாதுகாக்க போராடியவர்கள் இலக்கு வைக்கப்பட்டு கைது செய்யப்படுவது போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களிடம் மேலும் பதற்றத்தை ஏற்படுத்துகின்றது.

நீதிமன்ற உத்தரவு ஒன்றையும் மீறி, சாந்திபோத தேரர் என்ற பிக்கு ஒருவரின் தலைமையில் அங்கு விகாரை கட்டும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு எதிராக போராடிய தமிழர்கள் இன்று அச்சுறுத்தப்பட்டு கைது செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலைப் பகுதியில் இடம்பெறும் அத்துமீறிய நில அபகரிப்பிற்கு எதிராக 2022-09-21 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கப்பட்டது. இதனை முன்னெடுத்த பலர் இலக்கு வைத்து தற்போது கைது செய்யப்படுகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஒழுங்கமைத்த இரத்தினராஜா மயூரன், அதிக பங்களிப்பு செய்த துரைராசா ரவிகரன் போராட்டத்தில் முனைப்பில் ஈடுபட்ட கனகரட்ணம் சுகாஸ் எனப் பலரும் தற்போதுவரை இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு இலக்கு வைக்கப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் கைதுகள் இடம்பெறுமா என்ற அச்சமும் நிலவுகிறது.

முல்லைத்தீவு நீதிமன்றில் குருந்தூர்மலை தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் 612 ஏக்கர் காணியை பிக்குகளுக்கும் விகாரைக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் துறை சார்ந்த அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளனர்.



இருந்தபோதும் காணி அளவீடு தொடர்பில் அமைச்சர் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் தமிழர்களின் பூர்வீக நிலத்தில் நீதிமன்ற தடையினையும் மீறி பிரம்மாண்டமான விகாரை அமைக்கப்பட்டு முடிவுறும் நிலைக்கு கொண்டு வருவதற்கு இராணுவம் தமிழர்களை அப்பகுதிக்கு செல்லவிடாது தடுத்ததே முக்கியக் காரணம் என்று அப்பகுதி நில உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குருந்தூர்மலை தண்ணிமுறிப்பு பகுதியில் தமிழ்மக்களின் பூர்வீக 632 ஏக்கர் நிலம் குருந்தூர்மலை பௌத்த பிக்குவின் பங்கேற்போடு கடந்த 11 ஆம் திகதி தொல்பொருள் திணைக்களத்தினால் எல்லைப்படுத்தப்பட்டு நில ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட முனைப்புகள் இடம்பெறுகின்றது. இவற்றிற்கு எதிராகவே போராட்டம் நடாத்த தண்ணிமுறிப்பு கிராம பொது அமைப்புக்களால் அழைப்பு விடுக்கப்பட்டது. இதன்போது குமுழமுனை கிராம அபிவிருத்தி சங்க தலைவர் இ.மயூரன் மற்றும் தண்ணிமுறிப்பு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் கலைச்செல்வன், தண்ணிமுறிப்பு கமக்கார அமைப்பு தலைவர் ச.சசிகுமார் ஆகியோர் இந்த அழைப்பை விடுத்தனர்.

இதில் குமுழமுனை கிராம அபிவிருத்தி சங்க தலைவரும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இ.மயூரன் கனடா உதயனிடம் கருத்து தெரிவிக்கையில், "1953 ஆம் ஆண்டு டி.டிஸ். சேனநாயக்க காலத்தில் புனரமைக்கப்பட்ட தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நெற்செய்கை காணிகள் வழங்கப்பட்டு 70 ஆண்டுகள் கடந்தும் இன்றுவரைக்கும் காணிகள் வன வளத் திணைக்களத்தினால் விடுவிப்பு செய்யப்பட்டு விவசாய காணிகளாக பதிவுகள் எங்கும் இல்லை இதன் அடுத்த கட்டமாக 1932 ஆம் ஆண்டு நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை செய்யப்பட்ட வரைபடத்தில் குருந்தூர்மலை தொல்லியல் இடம் என்ற




பெயரில்தான் வரைபடம் ஆக்கப்பட்டுள்ளது. அந்த பதிவுகள் ஆவணங்கள் எல்லாம் திரிபு படுத்தப்பட்டு விகாரை தொல்லியல் இடம் என்ற பெயரில் இன்று படம் வெளியிடப்பட்டுள்ளது தமிழர்களின் உயிர்நாடியான திருகோணமலை திரியாய், வெலிஓயா என்ற சொல்லப்படுகின்ற எமது மணலாற்று பகுதியிலும் இதே நடவடிக்கையினைத்தான் செய்துள்ளார்கள்" என்றார்.

இன்று 632 ஏக்கர் நிலத்தினை தொல்லியல் திணைக்களத்திற்குரிய நிலமாக இரவோடு இரவாக யாருடைய அனுமதியும் இன்றி அதாவது பிரதேச செயலம், மாவட்ட செயலகமோ விவசாய திணைக்களத்தின் அனுமதிஇன்றி ஒரு ஞாயிற்றுக்கிழமை கடந்த 11 ஆம் திகதி அதிகாலை வேளை நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையினை தொல்லியல் திணைக்களம் செய்துள்ளது.

நாட்டில் இன்று அரிசி இல்லை, மாவு இல்லை கஞ்சி குடிக்கும் நிலையில் மக்கள் இருக்கும் போது 632 ஏக்கர் நிலத்தில் அரசாங்கம் செய்யப்போகின்றது என்ற கேள்வியும் தமிழர் தரப்பில் எழுப்பப்படுகிறது.

நாட்டில் பொருளாதாரம் நலிவுற்று மக்களுக்கு எந்த விதமான விமோசனும் இல்லாத நிலையில் நாலு லீற்றர் பெற்றோலுடன் நாம் அலைகின்றோம் இந்த நிலையில் 632 ஏக்கர் காணி பிக்குமார்களுக்கு எதற்கு? இது வெளிப்படையான நில ஆக்கிரமிப்பும் இனசமத்துவத்தினை அழிக்கும் நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வாதிடுகின்றனர். நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் பிக்குமார்களுக்கு எவ்வித கவலையும் இல்லையா என்ற கேள்வியும் இங்கு எழுகிறது.

"நீதிமன்ற கட்டளைகளையினை கூட புறந்தள்ளுகின்றார்கள் ஒரு காவி உடை தரித்த தேரரால் மாவட்ட நீதிமன்ற கட்டளையினை புறம்தள்ளி தொடர்ச்சியாக இராணுவத்தினை வைத்து கட்டுமானங்களை மேற்கொள்ளமுடியும் என்றால் நீதி எங்கே இருக்கின்றது".

இதனை சம்மந்தப்பட்ட தரப்புக்கள் உடனடியாக கருத்தில் எடுப்பதுடன் எமது தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் இது தொடர்பில் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்துவதுடன் சர்வதேச ரீதியாக வெளிக்கொண்டு வருவதற்கான தார்மீகமான வேலையினை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று மயூரன் அழைப்பு விடுத்துள்ளார்.


அம்பாறையில் பட்டிப்பளை ஆற்றில் தொடங்கி இன்று முல்லைத்தீவு மாவட்டம் தாண்டிய நிலையில் இருக்கின்றோம் முல்லைத்தீவில் குள ஆக்கிரமிப்பு நிறைவடைந்து விட்டது. வெகுவிரைவில் வடமராட்சியிலும் தென்மராட்சியிலும் வலிகாமத்திலும் இந்த நடவடிக்கைகள் தொடரும் அப்போதாவது தமிழ் தலைமைகள் விளித்தெழுகின்றனவா என்பதை சிறிது காலம் பொறுத்திருந்தால் விளங்கிக்கொள்ளமுடியம் என்றும் அவர் கூறினார்.



நில ஆக்கிரமிப்பு செய்வதற்காக தொல்லியல் திணைக்களத்தினால் சுயாதீனமாக தான்தோன்றித்தனமாக அடையாளம் இடப்பட்ட 632 ஏக்கர் எல்லைக்கற்கள் இருக்கின்றன அந்த எல்லைக்கற்களை அளந்து வரைபடமாக வெளியிடுவதற்கு நில அளவைத்திணைக்களத்தின் நில அளவையாளர்கள் வருகை தருவார்கள் அந்த நேரத்தில் இருந்து தொடர்ச்சியான போராட்டம் ஆரம்பமாகவும் எமது இந்த போராட்டத்திற்கு அனைத்து தமிழ் உள்ளங்களும் திரண்டு வந்து எமது வாழ்வியலையும் எமது நிலத்தினையும் பாதுகாக்க நடடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தண்ணிமுறிப்பு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் கலைச்செல்வன் கருத்து தெரிவிக்கையில், "1984 ஆம் ஆண்டு தண்ணிமுறிப்பு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இதுவரைக்கும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. இது தொடர்பில் பிரதேச செயலகத்திலும் மாவட்ட செயலத்திலும் முறையிட்டும் இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை இன்று தொல்பொருள் திணைக்களம் எல்லைக் கற்களை நடுவதற்கு காரணம் இவர்கள்தான் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்திருக்கவேண்டும். ஆனால் செய்யவில்லை எங்கள் மக்களுக்கான காணியினை வழங்குங்கள் என்று கோரியிருந்தோம் எதுவும் செய்து தரப்படவில்லை குருந்தூர்மலைக்கு செல்லும் முதலாவது காணி எங்களின் காணி இன்று எங்கள் காணியில் தென்னம்பிள்ளை, கிணறு என்பன இருக்கின்றதோடு பழை கட்டடங்கள் என்பனவும் இருக்கின்றது".

மக்கள் வாழ்கின்ற குடியிருப்பு இடமான தண்ணிமுறிப்பு 51 ஆம் ஆண்டு கண்டோம். இந்த இடத்திலும் தொல்பொருள் திணைக்களம் கல்லு நாட்டி காணியினை அபகரித்துள்ளார்கள் என்று கூறிய கலைச்செல்வன் அதோபோல் குருந்தூர் குளத்தினையும் குளத்தின் கீழ் உள்ள தனியார் வயல் காணிகளையும் அபகரித்து தொல்பொருள் திணைக்களம் கல்லு நாட்டியுள்ளது. இதனை யாரிடம் சொல்வது, அதிகாரம் மிக்க அதிகாரிகள் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார்.


THE
CEYLON GOVERNMENT
GAZETTE
PART I.—GENERAL

நேற்றைய (21) ஆர்ப்பாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட மக்களுடன் யாழில் இருந்து சென்ற பலரும் பங்குகொண்டனர்.

இவ்வாறெல்லாம் இடம்பெறும் ஆராஜக செயலிற்கு வெறுமனே ஒரு நாள் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் நில அபகரிப்பை தடுத்து விட முடியுமா என்ற கேள்வியும் ஒரு தரப்பால் எழுப்பப்படுகிறது. அதேவேளை இடம்பெறவிருந்த நில அளவீடு நிறுத்தப்பட்டுள்ளது.

வலிந்த நில அபக்ரிப்பு என்பதற்கு அப்பாற்பட்டு, நீதிமன்ற உத்தரவையும் மீறி பிக்கு ஒருவரால் ஒரு விகாரையை தமிழர்கள் நிலப்பரப்பில் கட்ட முடியுமென்றால் இலங்கையில் பௌத்தர்களுக்கு ஒரு சட்டம், தமிழர்களுக்கு ஒரு சட்டமா என்கிற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பொருட்களின் விலையை உடனடியாகக் குறைக்க கோரி ஹட்டனில் பெண்கள் போராட்டம்



## பொருட்களின் விலையை உடனடியாகக் குறை என்பது அரசே பயங்கரவாதம் அல்ல!

“பொருட்களின் விலையை உடனடியாகக் குறை” என்ற தொனிப்பொருளில் ஹட்டனில் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடைபெற்றது. இதில் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், தோட்டத் தொழிலாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் எனப் பெருமளவானோர் பங்கேற்றனர்.

“கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசணம் எங்கே?”, “பால், முட்டை, இறைச்சி, மீன் ஆகியன அமைச்சர்களுக்கு மாத்திரமே”, “மக்கள் வீதியில் சொகுசு வாகனம் அமைச்சர்களுக்கு”, “நாட்டுக்குப் பாரமான அமைச்சர்களின் வரப்பிரசாதங்களை இல்லாதொழி” போன்ற பதாதைகளை ஏந்திய வண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



# மன்னார் வங்காலையை சேர்ந்த சிற்பி மெரின் ஜெரோமி மார்க் என்பவரால் உருவாக்கப்பட்ட கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்காரவின் சிலை

மன்னார் வங்காலையை சேர்ந்த இலங்கையின் பிரபல ஓவியரும், சிற்பியுமான யோ. மெரின் ஜெரோமி மார்க் என்பவரால், மூன்றரை அடியில் குமார் சங்கக்காரவின் சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் குமார் சங்கக்காரவின் சிலை குறித்த புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வேகமாக பரவி வருகின்றன.

இந்த அழகிய சிலையை வடிவமைப்பு செய்து நேர்த்தியாக உருவாக்கியது இலங்கையின் பிரபல ஓவியரும், சிற்பியும் மன்னார் வங்காலையை சேர்ந்த கலைஞர் யோ. மெரின் ஜெரோமி மார்க் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வைக்கப்படுவதற்காக குமார் சங்கக்காரவின் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளதாக முதல் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது குறித்து பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் உட்பட நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்ட போது, பல்கலைக்கழகத்தினுள் குமார் சங்ககாரவுக்கு சிலை அமைப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. என எமது மன்னார்ச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

**- மன்னார் நிருபர்**

# திலீபனின் நினைவேந்தலுக்கு பொதுக் கட்டமைப்பு



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை மேற்கொள்வதற்காக 15 பேர் கொண்ட பொதுக் கட்டமைப்பு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுக் கட்டமைப்பு குழுவை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்திலுள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திங்கட்கிழமை (19) நடைபெற்றது. யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த பொதுக் கட்டமைப்பு குழுவில் பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9 (Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் குருதி சுத்திகரிப்பு பிரிவில் புதிய இயந்திரங்களுடன் குருதி சுத்திகரிப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வினோதன்





மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள குருதி சுத்திகரிப்பு பிரிவில் புதிதாக 4.6 ரூபாய் மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இரு இறுதிநிலை சிறுநீரக நோயாளர்களின் குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டு சேவைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

தற்போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள குருதி சுத்திகரிப்பு பிரிவில் 7 குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள் மூலம் குறித்த பிரிவில் சேவை வழங்கப்பட்டு வருகிறது.

போதிய இயந்திரங்கள் இன்மையால் செட்டிகுளம், வவுனியா வைத்தியசாலையில் குருதி சுத்திகரிப்பு மேற்கொள்ளும் மன்னார் மாவட்ட நோயாளிகள் மேலும் புதிய இயந்திரங்களின் வருகையால் இனிமேல் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள குருதி சுத்திகரிப்பு பிரிவில் தமது சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# திருகோணமலை மாவட்ட பெண் எழுத்தாளர்கள் ஆளுமைகளின் ஒன்றுகூடல்



திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளை ஒருங்கிணைத்து கலைத்துறைசார் வாண்மையை மேலும் முன்னோக்கி நகர்த்தும் நோக்கில் "ஒரு பொழுதில் ஒன்று கூடுவோம்" எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட பெண் எழுத்தாளர்கள் ஆளுமைகளின் ஒன்றுகூடல் 03.09.2022 அன்று மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார மண்டபத்தில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி. சரண்யா சுதர்ஷனின் தலைமையில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய கவிஞரும் திருகோணமலை வரோதய நகர் பாரதி வித்தியாசாலை அதிபருமான திருமதி. சுஜோதினி யுகராஜா (கவிஞர் சம்பூரணி) தனது உரையில் "இந்நிகழ்வில் எழுத்தாளராகக் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு, நிகழ்விற்கு பேச்சாளராக வருகை தந்திருந்த திருமதி. ஸ்ரீதேவி அம்மணி ஆசிரியை அவர்களை கௌரவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அத்தடன் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசாரப் பணிப்பாளர் திருமதி. சரண்யா சுதர்ஷன் அம்மணி அவர்களுக்கும், கலாசார உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

பிரபல எழுத்தாளர் திருமலை நவம் அவர்களும் உரையாற்றினார்.

**செய்தி - கவிஞர் நல்லை அமிழ்தன்**





# குருந்தூர்மலையில் ஆர்ப்பாட்டம் ரவிகரன் மற்றும் மயூரன் கைது

இலங்கை செய்திகள் Sri Lanka News




முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632 ஏக்கர் பூர்வீக காணிகளை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும், நீதிமன்ற கட்டளையைப் புறந்தள்ளி பௌத்த கட்டுமானம் மேற்கொள்ளப்படுகின்றமை என்பவற்றைக் கண்டித்து தண்ணிமுறிப்பு மற்றும் குமுழமுனை பகுதி மக்களால் 21.09.2022 அன்று குருந்தூர்மலையில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் மக்களோடு கலந்துகொண்ட முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவரும், சமூகசெயற்பாட்டாளருமான இரத்தினராசா மயூரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிலையில் இவ்வாறு ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டமைதொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக து. ரவிகரன் மற்றும், இ. மயூரன் ஆகியோரை முல்லைத்தீவு போலீசார், பொலிஸ் நிலையம் வருமாறு அழைப்பு விடுத்திருந்தனர்.



இந்நிலையில் பொலிஸ் நிலையம் சென்ற இருவரையும் போலீசார் கைதுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

# தியாக தீபம் திலீபனின் ஊர்தி பவனி மன்னாரை வந்தடைந்தது





தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு "திலீபன் வழியில் வருகிறோம்" என்று முன்னெடுக்கப்படுகின்ற ஊர்தி பவனியானது கிழக்கு மாகாணத்தின் பொத்துவிலில் ஆரம்பித்து புதன்கிழமை (21) மாலை மன்னார் நகர பகுதியை வந்தடைந்தது.

5 ஆம் மற்றும் ஆறாம் நாட்களான 19ஆம் 20 ஆம் திகதிகளில் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வவுனியா வின் பல்வேறு கிராமங்களுக்கு சென்றிருந்தது.

இதன்போது மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

07 நாளான புதன்கிழமை காலை மடு வீதியூடாக பயணித்து புதன்கிழமை (21) மாலை மன்னார் நகர் பகுதியை வந்தடைந்தது.

அதனைத்தொடர்ந்து மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

**- மன்னார் நிருபர்**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யா/ வட்டு இந்துக் கல்லூரி

## திறன் வகுப்பறைத் திறப்பு நிகழ்வு



யா/ வட்டு இந்துக் கல்லூரியில் 15.09.2022 திகதி வியாழக்கிழமை கல்லூரி அதிபர் திரு. அப்புத்துரை ஆனந்தராசா அவர்கள் தலைமையில் விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கான திறன் வகுப்பறை திறப்பு விழா நடைபெற்றது. இத் திறன் வகுப்பறைக்கான பொருட்கள் இரத்தினம் அறக்கட்டளை நிறுவுனர் திரு. இ. நித்தியானந்தன் அவர்களினதும் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினரதும் நிதி அனுசரணையுடன் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினரான திரு அருளம்பலம் ஆனந்தராசா அவர்களும், சிறப்பு விருந்தினரான திரு சி.மதியழகன் பிரதிக் கல்விப்பணிப்பாளர், திட்டமிடல் பிரிவு, வலிகாமம் கல்வி வலயம் அவர்களும் திறன் வகுப்பறைக்கான பெயர்ப் பலகையினை திரை நீக்கம் செய்து வைத்ததோடு இத் திறன் வகுப்பறையை நாடா வெட்டி உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தனர்.







அதனைத் தொடர்ந்து பிரதி அதிபர் திருமதி. வதனி தில்லைச்செல்வன் அவர்களது வரவேற்பு உரையும், பாடசாலை மாணவனது திறன் பலகையைப் பயன்படுத்தி தாவரக்கலம் பற்றிய விளக்கமும் அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அதிபர் உரையாற்றிய போது இரத்தினம் அறக்கட்டளை நிறுவுனர் திரு. இ. நித்தியானந்தன் அவர்களுக்கும் லண்டன் பழைய மாணவர் சங்கத்துக்கும் இத் திறன் வகுப்றையை விஞ்ஞான பாடம் கற்கும் மாணவர்களது கற்றலை ஊக்குவிக்கும் முகமாகாக அன்பளிப்பாகத் தந்துதவியமைக்கு நன்றி தெரிவித்தார். பிரதிக் கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்) வலிகாமம் கல்வி வலயம் திரு. சி. மதியழகன் அவர்கள் தனது உரையில் யா/ வட்டு இந்து கல்லூரி பல வரலாற்று சாதனைகளை பதிந்து வருகின்றது எனவும், இம் முறை க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சகல பிரிவுகளிலும் சிறந்த பேறுபேறுகளை பெற்றுள்ளது எனவும் பாராட்டுக்களை தெரிவித்தார். பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திரு. அருளம்பலம் ஆனந்தராசா புதிய தொழில் நுட்ப மாற்றத்துக்கேற்ப மாணவர்கள் தொழில்நுட்ப சாதனங்களை கையாண்டு கற்கும் திறனை மேம்படுத்த வேண்டும் எனவும் அதற்கு தங்களது உதவிகள் எப்பொழுதும் இருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக அனுராதபுரத்தில் கையெழுத்துப் போராட்டம் - மூவின சமூகத்தினரும் பங்கேற்பு

இலங்கையில் மக்களை வதைக்கும் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை அனுராதபுரம் பகுதியில் திங்கட்கிழமை 19-09-2022 அன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், மதகுருமார்கள், மூவின மக்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் ஊர்தி வழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ்நாடு "நந்தவனம்" சந்திரசேகரனுக்கு இலங்கையில் வழங்கப்பெற்ற மொழிக் காவலர் விருது



இலங்கை கொழும்புத்தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற இனிய நந்தவனம் வெள்ளி விழா மலர் அறிமுக விழாவில் கடந்த 25 ஆண்டுகளாத இலக்கியப்பணியும் இதழியல் பணியும் ஆற்றிவரும் இனிய நந்தவனம் இதழின் பிரததசிரியர் நந்தவனம் சந்திரசேகரனுக்கு "மொழிக்காவலர்" என்ற விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார்.

ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் விருதினை வழங்கிச் சிறப்பித்தார் ஊடகவியலாளர்கள் விரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், தினக்குரல் பிரதம ஆசிரியர் கே.பி.ஆர் ஹரன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

உடுவை எஸ். தில்லை நடராஜன், சாகித்ய ரத்னா முருகன் சிவலிங்கம் இருவரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர் மருத்துவர் ரஞ்சனி சுப்பிரமணியர் ஆண்டு மலர் குறித்து விமர்சனம் செய்ய தமிழகத்திலிருந்து வருகை தந்த பேராசிரியர் முனைவர், பூ அ. அன்பு சிவா சிறப்புரையாற்றினார்.

முன்னதாக கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் ஆழ்வார் பிள்ளை கந்தசாமி அனைவரையும் வரவேற்க செல்வி இனியவள் காண்டீபன் தமிழ் வாழ்த்து பாட கலைஞானச்சுடர் ஸ்ரீ சுபாஷினி பிரணவன் நிகழ்ச்சியை சிறப்பாக தொகுத்து வழங்கினார்.





நிறைவாக நந்தவனம் சந்திரசேகரன் ஏற்புரையாற்றி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார் கலாபூஷணம் பொன்னுதுரை நிகழ்வை ஏற்பாடு செய்து உதவினார்.

# கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான போராட்டம் திருகோணமலை மாவட்டத்தில் முன்னெடுப்பு

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" என்னும் தொனிப்பொருளில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் முன்னெடுக்கப்படும் 100 நாட்கள் செயல்முனைவின் 51 வது நாள் கவனயீர்ப்பு போராட்டம் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பிரதேசத்தில் ஆலங்கேணி கிராமத்தில் செவ்வாய்கிழமை (20.09.2022) நடைபெற்றது.




"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவு தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில், 51ம் நாள் போராட்டம் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேசத்தில் ஆலங்கேணி கிராமத்தில் இடம்பெற்றது.




இப் போராட்டமானது திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும். எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, என கோசங்களை எழுப்பியவாறு தங்களின் உரிமை கோரிக்கையினையும் முன் வைத்தனர்.

- மன்னார் நிருபர்

இந்தியா செய்திகள்
India News

# எழுதாத பேனாவிற்கு 80 கோடியில் சிலை எதற்கு?

## தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் கேள்வி



சென்னை மெரினா கடற்கரையில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பேனா சிலை வைப்பதற்கு பதிலாக பெரியார் சிலை வைக்கலாம் என தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார். செங்கல்பட்டு மாவட்ட தேமுதிக சார்பில் முப்பெரும் விழா நடைபெற்ற நிலையில் தேமுதிக பொருளாளர் விஜயகாந்த் கலந்து கொண்டு பேசினார். அப்போது பேசிய அவர், கேப்டனின் இரண்டு கண்கள் எப்படி இருக்கின்றதோ, அதே போல் தான் கேப்டன் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று கூறியுள்ளார். எந்த நோக்கத்திற்காக தேமுதிக கட்சி தொடங்கப்பட்டதோ அதை நிச்சயம் நிறைவேற்றுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் சென்னை மெரினாவில் கருணாநிதியின் பேனா சிலை வைப்பதற்கு பதிலாக பெரியார் சிலை வைக்கலாம் என்று தமிழக அரசுக்கு தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் கோரிக்கை வைத்துள்ளார்.

மேலும், எழுதாத பேனாவிற்காக 80 கோடி ரூபாய் மதிப்பில் சிலை வைப்பதற்கு பதிலாக மக்களுக்கு சாலை வசதி குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை செய்யலாம் என்றும் ஆனால் இப்போது தேவையா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.



# அமைச்சருக்கு தரணும்! மதுப் போத்தலுக்கு கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கும் அரச மதுக்கடை ஊழியர்கள்



சேலம் மாவட்டத்தில் 200க்கும் மேற்பட்ட அரச மதுபானக் கடைகள் (டாஸ்மாக் கடைகள்) இயங்கி வருகிறது. இந்த கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபோத்தல்களுக்கு கூடுதல் பணம் வசூலிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சேலம் செவ்வாய்பேட்டை பகுதியில் இயங்கும் டாஸ்மார்க் கடைகளில் போத்தல் ஒன்றுக்கி பத்து ரூபாய் கூடுதலாக வைத்து விற்பனை செய்வதாக புகார் எழுந்துள்ளது. ஒவ்வொரு போத்தல்களுக்கும் தலா பத்து ரூபாய் கட்டாயமாக கேட்டு வசூலிக்கும் டாஸ்மார்க் ஊழியர்கள் அதனை அதிகாரிகளுக்கும் அமைச்சருக்கும் தருவதற்க்கு வசூலிப்பதாக தெரிவித்துள்ளனர். இதனை கண்டித்து மதுபிரியர்கள் திடீரென கடை முன்பு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர், தினந்தோறும் கூலி வேலைக்கு சென்று ஐநூறு ரூபாய் கூலி பெற்றுக் கொண்டு, அதில் சிறு தொகையை மது அருந்த வந்தால் போத்தலுக்கு 10 ரூபாய் அதிகம் கொடுக்க வேண்டும் கட்டாயப்படுத்துவதாகவும், இதுகுறித்து விளக்கம் கேட்டால் தான் அதிகாரிகளுக்கும் அமைச்சருக்கும் தருவதற்காக கட்டாய வசூலிப்பதாகவும் யார் இடம் வேண்டுமென்றாலும் புகார் தெரிவிக்கலாம் எனும் அலட்சியத்துடன் பதில் அளிப்பதாக ஊழியர்கள் மீது குற்றம் சாட்டி உள்ளனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

சேலம் செவ்வாய்பேட்டை பகுதியில் உள்ள டாஸ்மாக் கடை ஒன்றில் மது பிரியர்கள் ஆவேசத்துடன் அன்றாட கூலி வேலை செய்யும் தங்களிடம் தினமும் பத்து ரூபாய் கூடுதலாக வசூலிப்பதாகவும் இதே போல சேலத்தில் உள்ள அனைத்து கடைகளிலும் ஊழியர்கள் கூடுதல் பணம் வசூலித்து கொள்ளையடிப்பது எந்த விதத்தில் நியாயம் என்று கேள்வி எழுப்பினர். எனவே மாவட்ட நிர்வாகம் இந்த விஷயத்தில் தலையிட்டு அரசு நிர்ணயம் செய்த விலைக்கு மது போத்தல்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். மது பிரியர்களின் இந்த திடீர் வாக்குவாததால் பரபரப்பு ஏற்பட்டது.

# தமிழ்நாடு ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் பகவதி சேவையுடன் குருதி பூஜை





வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில், ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர். ஸ்ரீ முரளிதரஸ்வாமிகள் ஆக்ஞைப்படி, இன்று புரட்டாசி மாதம் 20.9.2022ம் தேதி செவ்வாய்க்கிழமை தசமி திதி முன்னிட்டு ஸ்ரீதன்வந்திரி பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீ பஞ்சமுகவராஹி, ஸ்ரீ பாலா திரிபுரசுந்தரி, ஸ்ரீ ராஜமாதங்கி, ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி, ஸ்ரீ சப்த கன்னிகள், ஸ்ரீ மகா ப்ரத்யங்கிரா தேவி ஆகிய தெய்வங்களை வேண்டி, ஷேத்ர ஆகாஷ்ணம் வேண்டியும், தெய்வ கடாட்சங்கள் கூடவும், பக்தர்கள் கோரிக்கை நிறைவேறவும் சிறப்பு பூஜைகளுடன் பகவதி சேவை மற்றும் குருதி பூஜை கேரளமுறைப்படி நடைபெற்றது.

இதனை தொடர்ந்து நாளை 21ம் தேதி புதன்கிழமை ஏகாதசி முன்னிட்டு மூலவர் ஸ்ரீ தன்வந்திரி பகவானுக்கு நெல்லிப்பொடி திருமஞ்சன அபிஷேகமும், ஸ்ரீதன்வந்திரி ஹோமமும், வராஹி ஹோமம், காலபைரவர் ஹோமம், அஸ்வாரூட ஹோமம், ஆவகந்தி ஹோமம், ருத்ர ஹோமம், ப்ரத்யங்கிரா ஹோமம், துர்கா ஹோமம் போன்ற ஹோமங்களும் கால பைரவருக்கு குருதி பூஜையும் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ தன்வந்திரி குடும்பத்தினர் செய்துள்ளனர்.

# ஜனநாயகத்தின் 4வது தூணான பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல்:

## பள்ளி நிர்வாகத்தின் அத்துமீறிய செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது - வேல்முருகன்

தமிழ்நாடு கள்ளக்குறிச்சி பள்ளி மாணவி மரணம் தொடர்பான விவகாரத்தில், செய்தி சேகரிக்க சென்ற நக்கீரன் இதழின் மூத்த பத்திரிகையாளர் பிரகாஷ் மீது பள்ளி நிர்வாகத்தினர் தாக்குதல் நடத்தியிருப்பது வன்மையாக கண்டிக்கதக்கது. ஒரு நாட்டில் பத்திரிகைகள் சுதந்திரமாக செயல்படும்போது, அதன் வாயிலாகவே அந்நாட்டில், அனைவருக்குமான பாதுகாப்பு என்பது தீர்மானிக்கப்படுகிறது என்பது அமெரிக்காவின் மூன்றாவது அதிபர் தாமஸ் ஜெபர்சனின் கூற்று.

உள்நாட்டுப் போர், கொரோனா வைரஸ் தொற்று எனப் பல இக்கட்டான சூழலில், பத்திரிகையாளர்கள் உயிரையும் பொருட்படுத்தாது தங்களது பணியினை சிரத்தையுடன் மேற்கொண்டனர். ஆனால், பத்திரிகையாளர்கள் மீதான விரோதப் போக்குகள் என்பது தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

கள்ளக்குறிச்சி கனியாமூர் சக்தி பள்ளியில், மாணவி மரணம் தொடர்பாக பல்வேறு தகவல்களை வெளியிட்டு வந்தார் நக்கீரன் இதழின் மூத்த பத்திரிகையாளர் பிரகாஷ். இந்நிலையில், பள்ளி மாணவியின் மரணத்தில் நீடிக்கும் மர்மம் குறித்து, செய்தி சேகரிக்க சென்ற மூத்த பத்திரிகையாளர் பிரகாஷ், புகைப்பட கலைஞர் அஜித்குமார் ஆகிய இருவரின் மீது, ரவுடி கும்பலை ஏவி கொலை வெறித் தாக்குதலை நடத்தியுள்ளது பள்ளி நிர்வாகம். தலைவாசல் அருகே பிரகாஷ் சென்ற காரை பின் தொடர்ந்து வந்த கும்பல், பிரகாஷ் மற்றும் புகைப்படக் கலைஞர் அஜித்குமார் ஆகியோர் மீதும் கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர். உண்மை சுடும் என்பது பெரியோர் வாக்கு. தான் தொடர்ந்து எழுதி வந்த உண்மைகளால் அச்சமடைந்த பள்ளி நிர்வாகம், இப்படியான தாக்குதலை நடத்தியுள்ளது. மாணவர்களுக்கு கல்வியை போதிக்க வேண்டிய பள்ளி நிர்வாகம், அதற்கு பதிலாக மாணவர்களையும், பொதுமக்களையும், பத்திரிகையாளர்களையும் மிரட்டி வருவது ஏற்புடையதல்ல. பத்திரிகையாளர் பிரகாஷ், புகைப்பட கலைஞர் அஜித்குமார் மீது தாக்குதல் நடத்திய குண்டர்களை காவல்துறை கைது செய்யப்பட்டிருப்பது வரவேற்கதக்கது.



இந்த தாக்குதலை நடத்த காரணமான பள்ளி நிர்வாகத்தை, நீதியின் முன் நிறுத்துவதற்கு தமிழ்நாடு அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆத்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மூத்த பத்திரிகையாளர் பிரகாஷ், அஜித்குமாருக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும்.

மேலும், பத்திரிகையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அவர்கள் தங்கள் பணிகளை, எந்த அச்சமும், இடையூறுமின்றி, மேற்கொள்ள தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக்கொள்கிறது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "கோத்தாபாய மாத்திரமல்ல. ஒட்டு மொத்த ராஜபக்ச குடும்பமுமே நாட்டின் செல்வத்தை கொள்ளையடித்த மோசடி அரசியல்வாதிகளே"

## சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டுகின்றார்



பொராட்டக்காரர்களால் நாட்டை விட்டு துரத்தப்பட்ட கோத்தாபாய மாத்திரமல்ல ஒட்டு மொத்த ராஜபக்ச குடும்பமுமே நாட்டின் செல்வத்தை கொள்ளையடித்த மோசடி அரசியல் வாதிகளே. இவர்களுள் மகிந்த ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோரே மோசமான கொள்ளைக்காரர்கள். இவற்றை மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு இலங்கைப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய முன்னாள் இராணுவத்தளபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டும் வகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தேர்தல் நடத்தினால்,மட்டும் இந்தஊழல் அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்ப முடியாது போராட்டத்தின் மூலம் மட்டுமே ஊழல் அரசியல்வாதிகளை வீட்டுக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

போராட்டம் நடத்தி ஊழல் அரசியல்வாதிகளின் பிடியில் இருந்து நாட்டை மீட்க வேண்டும். எதிர்காலத்தில் முழு நாடும் போராட்டத்தில் குதித்த வேண்டும். .நாட்டை கொள்ளையடிக்கும் அரசியல்வாதிகளால் தான் தற்பொழுது நாடு மோசமான பொருளாதார நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

போராட்டம் என்ற வார்த்தையை நீக்கி விட்டு, நிராயுதபாணிகளான அப்பாவி மக்களின் எழுச்சி என்ற வார்த்தையை பயன்படுத்த வேண்டும். நாட்டு மக்களுக்கு உண்பதற்கு உணவு இல்லை என்றால், அரசாங்கம் ஒன்று இருந்து என்ன பயன்.

கீழ் மட்டத்திற்கு சென்ற மக்களின் பிரச்சினைகளை புரிந்துக்கொள்ள வேண்டும் இல்லையென்றால், போராட்டங்கள் நடப்பதை நிறுத்த முடியாது.

அதேவேளை ஸ்ரீலங்கன் விமான சேவை என்பது நாட்டு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைய மிகப் பெரிய பங்களிப்பை செய்த நிறுவனம். அரசாங்கங்கள் மாறினாலும் இந்த நிறுவனம் நாட்டிற்கு நன்மையை செய்ததை விட தீமையையே செய்தது.

வருடத்திற்கு 6 ஆயிரத்து 500 கோடி நஷ்டத்தில் இயங்கும் காலமும் இருந்தது. 5 ஆயிரத்து 500 கோடி ரூபா நஷ்டத்தில் இயங்கிய காலமும் இருந்தது. ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் நடந்தவை உலகில் ஒழுக்கமான செயல்கள் நடக்கும் நாடுகளிலும் நடந்ததில்லை.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவராக அன்றைய ஜனாதிபதியின் மைத்துனர் கடமையாற்றினார். மனைவியின் சகோதரர். அந்த காலத்தில் 5 ஆயிரத்து 500 கோடி ரூபா நஷ்டத்தில் இயங்கினாலும் நிறுவனத்தின் தலைவரது சம்பளம் 50 லட்சம் ரூபா.

அடுத்ததாக நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. அந்த அரசாங்கம் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்திற்கு தலைவர் ஒருவரை நியமித்தது அவரது சம்பளம் 100 லட்சம் ரூபா.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் பணிப்பாளர் ஒருவர் இருந்தார். அவர் இராணுவத்தில் 20 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.

ஓய்வுபெற்ற அவருக்கு வேறு தகுதிகள் எதுவும் இருக்கவில்லை. ஓய்வூதியம் 15 ஆயிரம் ரூபா. ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் பணியாற்றியவர்களை அழைத்து அவர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் பற்றி விசாரித்தோம்.

அப்போது அந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி வீரனை போல் கைகளை கட்டிக்கொண்டு, நான் நிறுவனத்தில் சம்பளத்தை பெறுவதில்லை எனக் கூறினார். நீங்கள் பணிப்பாளர் எப்படி சம்பளத்தை பெறாமல் வேலை செய்கிறீர்கள் என்று நான் கேட்டேன்.

இல்லை நான் கொடுப்பனவை மாத்திரம் பெறுகிறேன் என்றார். கொடுப்பனவு எவ்வளவு என்று கேட்டபோது 30 லட்சம் ரூபாய" என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஸ்ரீலங்கன் விமான சேவையின் விமானப் பணிப்பெண் ஒருவரை தனது அலுலகத்தில் பணிக்கு அமர்த்தி இருந்தார். அவர் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் சம்பளத்தையும் விமான கொடுப்பனவுகளை பெற்றார்.

எனினும் நாமல் ராஜபக்சவின் அலுவலகத்தில் ஊழியராக பணிப்புரிந்தார். 2010-2015 அரசாங்கத்தின் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச தனக்கு பயன்படுத்த ஸ்ரீலங்கன் விமானம் ஒன்றில் விசேட மல கூடம் அமைக்க 6 பில்லியன் ரூபா பணம் ஒதுக்கினார்.

600 கோடி ரூபா. மலகூடத்தில் தங்கம், வைரம் பதிக்கப்பட்டிருக்குமோ தெரியாது. அவற்றை நாங்கள் இரத்துச் செய்தோம். அத்துடன் எயர் பஸ் விமானங்களை கொள்வனவு செய்ய கபில சந்திரசேன என்ற ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி 20 மில்லியன் டொலர் இலஞ்சம் பெற்றார்.

அந்த இலஞ்ச பணம் யாருடைய வங்கிக் கணக்குக்கு சென்றது என்ற தகவலும் வெளியாகியது. நாமல் ராஜபக்சவின் வங்கிக்கணக்கிற்கும் அந்த பணம் சென்றமை சாட்சியங்களுடன் ஒப்புவிக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் நாட்டுக்கு கேடாக அமைந்தது. அரசியல் தலைவர்கள், முன்னாள் அரச தலைவர்கள் அவற்றின் ஊடாக மக்களின் பணத்தை கொள்ளையிட்டனர் எனவும் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார்.



Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Sunday by Appointment only




Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

# கட்சிசாரா நினைவு கூர்தல் சாத்தியமா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



திலீபனின் நினைவுநாளை முன்னிட்டு தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கிடையே பிடுங்குப்படத் தொடங்கிவிட்டார்கள். குறிப்பாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் ஏற்பட்ட பிளவு திலீபனின் நினைவு நாட்களை யார் அனுஷ்டிப்பது என்பதில் முரண்பாடுகளை தோற்றுவித்திருக்கிறது.

கஜன் அணியானது தாங்கள் ஏற்கனவே நினைவு கூர்தலுக்கான ஒரு கட்டமைப்பை பொன் மாஸ்டரின் தலைமையில் உருவாக்கியிருப்பதாக கூறுகிறது. அதேசமயம் மணிவண்ணன் அணியானது கடந்த வாரம் நினைவு கூர்தலுக்கான ஒரு பொதுக் கட்டமைப்பை புதிதாக உருவாக்கியிருக்கிறது. திலீபனின் நினைவுத்தூபி மாநகர எல்லைக்குள் வருகிறது. எனவே மேயர் மணிவண்ணன் தலைமையிலான மாநகர சபை நினைவு கூர்தலுக்கான ஏற்பாடுகளை தன் கையில் எடுக்க முயற்சித்தது. ஆனால் அதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜன் அணி ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் மணிவண்ணனை டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவோடு மாநகர சபை முதல்வராக வந்தவர் என்று குற்றம் சாட்டுகின்றார்கள். எனவே தேவானந்தாவின் ஆதரவை பெற்ற ஒருவருக்கு திலீபனை நினைவு கூரும் தகுதி இல்லை என்று அந்த அணி குற்றச்சாட்டுகிறது.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் ஏற்பட்ட உடைவு திலீபனின் நினைவு நாளை பாதிக்க கூடாது என்ற அக்கறையோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சாராத சிலர் இரண்டு தரப்புக்கும் இடையே உரையாட முற்பட்டார்கள். மணிவண்ணன் வெளிநாட்டிலிருந்து வர முன்னரே இது தொடர்பாக அவர்கள் மாநகர சபையோடு உரையாடத் தொடங்கி விட்டார்கள். எனினும் மோதல்கள் தொடங்கிய பின்னர்தான் அதாவது திலீபனின் நினைவு நாள் தொடங்கிய பின்னர்தான் மணிவண்ணனின் ஏற்பாட்டில் ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்த உரையாடல்களில் முதன்மை வகித்தது பஷீர் காக்கா என்று அழைக்கப்படும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் ஆகும். அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் என்பதோடு அவருடைய ஒரு மகளையும் போரில் இழந்திருக்கிறார். அவர் இதற்கு முன்னரும் நினைவுகூர்தல் தொடர்பான உரையாடல்களில் சம்பந்தப்பட்டிருக்கிறார். குறிப்பாக முள்ளிவாய்க்கால் நினைவுகூர்தல் தொடர்பாக அவர் ஏற்கனவே தன்னால் இயன்ற பல முன்முயற்சிகளை எடுத்திருக்கிறார். ஆனால் அவை யாவும் அவருக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையே முரண்பாட்டை தோற்றுவித்தன. இப்பொழுது திலீபனின் நாட்களிலும் அதுதான் நடந்திருக்கிறது.

பஷீர் காக்கா உள்ளிட்ட சிலர் இது தொடர்பாக கஜன் அணியோடும் மணிவண்ணன் அணியோடும் உரையாடி இருக்கிறார்கள். கஜேந்திரனை தொலைபேசியில் அழைத்தபோது அவர் மட்டக்களப்புக்கு சென்று கொண்டிருந்தார். எனவே தன்னுடைய பதில் ஆளாக கட்சியின் பேச்சாளர் சுகாஷ் உடன் உரையாடுமாறு கேட்டிருக்கிறார். அதேசமயம் பஷீர் காக்கா தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முன்னணிச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான பொன் மாஸ்டரிடம் இது தொடர்பாக உரையாடியிருக்கிறார். பசீர் காக்காவைப் போலவே பொன் மாஸ்டரும் திலீபன் உயிருடன் இருந்த காலங்களில் அவரோடு நெருக்கமாக பழகியவர். எனவே இந்த விடயத்தில் பொன் மாஸ்டருக்கு ஊடாக அக்கட்சியை அணுகுவது பொருத்தமாக இருக்கும் என்று பசீர் காக்கா நம்பியிருக்கக்கூடும். ஆனால் அவர் எதிர்பார்த்தது போல நிலைமைகள் இருக்கவில்லை.

திலீபனின் நினைவு நாட்களின் தொடக்க நாளில் சட்டத்தரணி சுகாஷ் ஆற்றிய உரையில் பஷீர் காக்காவின் வேண்டுதலை மீறி மணிவண்ணனை மறைமுகமாகச் சாடியுள்ளார். பஷீர் காக்கா அதற்கு எதிர்ப்பு காட்டியிருக்கிறார். ஆனால் பொன்மாஸ்டரும் அதை பொருட்படுத்தவில்லை. சுகாசும் பொருட்படுத்தவில்லை. இதனால் பஷீர் காக்கா பகிரங்கமாக ஓர் அறிக்கையை விட்டார். காணொளியும் விட்டார்.

சர்ச்சைகளின் பின்னணியில் திலீபன் தீசன் என்று அழைக்கப்படும் கஜேந்திரகுமார் அணியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்த கருத்துக்களை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். யாழ்ப்பாணத்தில் இருந்து ஒளிபரப்பாகும் டான் ரிவியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் திலீபன் தீசனும் பார்த்திபனும் கலந்துகொண்டார்கள். திலீபன் தீசன் கஜன் அணியைச் சேர்ந்தவர். பார்த்திபன் மணிவண்ணன் அணியை சேர்ந்தவர். திலீபன் தீசன் பின்வருமாறு கூறுகிறார்.... "போராளிகள் என்ற போர்வையில் நீங்கள் எங்களுக்கு வகுப்பெடுக்க கூடாது. காரணம் என்னவென்றால், இந்தப் போராட்டம் வளர்ந்ததே மக்கள் ஆதரவினால்தான். மக்கள் ஆதரவு இல்லாமல் போராட்டம் வளர்ந்திருக்குமா? எனவே போராட்டம் தொடர்பாக நாங்கள் தான் தியாகம் செய்தோம் எங்களுக்குத்தான் உரிமை இருக்கு என்று யாரும் கதைக்கேலாது...".

இவ்வாறான சர்ச்சைகளின் பின்னணியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் நாவலர் மண்டபத்தில் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள், பல்கலைக்கழக மாணவ அமைப்பினர் போன்றவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் எவரும் வந்திருக்கவில்லை. சிறீதரன் தனது பிரதிநிதியாக கிளிநொச்சி பிரதேச சபைத் தலைவரை அனுப்பியிருந்தார். சித்தாந்தன் தனது பிரதிநிதியாக யாழ். மாநகர சபை உறுப்பினரை அனுப்பியிருந்தார். விக்னேஸ்வரனும் தனது பிரதிநிதி ஒருவரை அனுப்பியிருந்தார். மதத்தலைவர்கள் அங்கே வந்திருக்கவில்லை. மேலும் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கணேசலிங்கன், அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் போன்றோர் வந்திருந்தார்கள்.

நினைவு கூர்வதற்குரிய ஒரு பொதுக் கட்டமைப்புக்குள் கட்சிகளை இணைக்க வேண்டாம் என்று பெரும்பாலானவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். குறிப்பாக பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது அதற்குள் இணைத்துக் கொள்ளப்பட்ட ஐங்கரநேசன், சிவாஜிலிங்கம் போன்றவர்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. எனவே கட்சிசாரா செயற்பாட்டாளர்கள் ஆறு பேர்களைக் கொண்ட கொண்ட ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கட்டமைப்புக்கு ஏற்பாட்டளராக மாநகர சபை உறுப்பினர் பார்த்திபன் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதையும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் பார்த்திபன் மணிவண்ணனின் அணியைச் சேர்ந்தவர். நினைவு கூர்தலை முன்வைத்து மணிவண்ணன் அணியும் கஜேந்திரக்குமார் அணியும் மோதும் நிலைமைகள் அதிகரித்து வருவதனால், அதை தவிர்ப்பதற்கு அரசியல்வாதிகள் யாரும் அப்பொதுக் கட்டமைப்பில் இருக்க வேண்டாம் என்று கேட்கப்பட்டது. அந்த அடிப்படையில் கடந்த திங்கட்கிழமை நடந்த இரண்டாவது சந்திப்பில் சிவில் சமூக பிரதிநிதிகள், மதத் தலைவர்களை உள்ளடக்கிய ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

நினைவு கூர்தல் பொறுத்து உருவாக்கப்பட்ட குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு பொதுக் கட்டமைப்பு இது. ஆனால் இது தொடர்ந்து இயங்குமா இல்லையா என்பதனை பொறுத்திருந்து பார்க்கவேண்டும். முள்ளிவாய்க்கால் நினைவு கூர்தல் உட்பட எல்லா நினைவு கூர்தல்களுக்குமான ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று கடந்த சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக சிந்திக்கப்பட்டு வருகிறது. அதற்குரிய சந்திப்புகள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு மட்டங்களில் நடந்தும் இருக்கின்றன. ஆனால் அவை எவையும் பிரயோசனமான முடிவுகளைத் தரவில்லை. இம்முறை உருவாக்கப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பு எவ்வளவு தூரம் தொடர்ந்து செயல்படும் என்று இப்பொழுது சொல்ல முடியாது. ஏனென்றால் ஏற்கனவே இது போன்று உருவாக்கப்பட்ட பொதுக் கட்டமைப்புகள் பொதுவானவைகள் ஆக இருக்கவில்லை என்றும் மிகச் சிலர் அதை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முற்படுவதாகவும் விமர்சனங்கள் உண்டு.

இப்போது உருவாக்கப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பில் உள்ள விசேஷம் என்னவென்றால், முன்னாள் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள், போரில் தியாகிகளாகிய பிள்ளைகளின் பெற்றோர், மதத்தலைவர்கள், பாதிக்கப்பட்ட தரப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் குடிமக்கள் அமைப்புகள் போன்றவற்றின் பிரதிநிதிகள் இதில் அங்கம் வகிப்பதுதான்.

எனினும், இது மணிவண்ணனின் வேலை என்றே கஜேந்திரகுமார் அணி கூறப்போகிறது. அந்த அணியைச் சேர்ந்த பொன் மாஸ்டர் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி மணிவண்ணன் உருவாக்கிய அணிக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். எனவே, கஜேந்திரகுமாருக்கும் மணிவண்ணனுக்கும் இடையிலான முரண்பாட்டை இப்பொதுக்கட்டமைப்பு பிரதிபலிக்குமா இல்லையா என்பதை பொறுத்துத்தான் இக்கட்டமைப்பின் அடுத்த கட்டம் எது என்பது தெரியவரும். அதாவது திலீபனின் நினைவுகள் கட்சி அரசியலுக்குள் சிக்குப்படத் தொடங்கிவிட்டன என்று பொருள்.

## ஈழமண்ணின் ஈசுவரங்கள்

**(இன்னிசை வெண்பா)**

கீரி மலையில் கிழக்குத் திசைபார்த்து
பாரியார் பார்வதி பக்கத் துணையுடன்
சூரியன் போன்றே சுடர்தரும் ஈசுவரா
பாரினில் உள்ளோரைப் பார்.

திருக்கே சுவரத்தில் தேவியுடன் தங்கி
வருந்தும் அடியார்க்கு வாழ்வுதரும் ஈசுவரா
மூட்டு வலியாலே வாட்டும் உடலினை
மீட்டுத் தருவாயே மாற்று.

கோணேசர் குன்றில் குடியிருக்கும் கோணநாதா
சாணேறி ஆழம் சறுக்கும் விதியகற்றி
கோலமான வாழ்வைக் குறையின்றித் தந்திட
சாலவே வேண்டுகிறேன் சாற்று.

சிலாபம் நகரிலே சீருடன் தோன்றி
கலாப மயில்போலக் காட்சியைத் தந்துமே
காண வருவோர் கவலையைப் போக்கிடும்
காணக மேனியனைக் காண்.

காலிப் பதியின் கடற்கரைப் பக்கமாய்
மாலிகை தாங்கியே மன்மதனாய்க் காட்சிதரும்
தொண்டீ சுவரச் சுவாமியின் சன்னிதியில்
மண்டி மனதால் மயங்கு.

**ஆக்கம் ... மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

கனடிய செய்திகள் Canadian News

# "தியாகி திலீபன்" அவர்களின் 35வது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் நினைவுரையாற்றிய தமிழ்நாட்டின் பேச்சாளர் வா. மு. சே. திருவள்ளுவர்

கனடா ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் "பைரவி" நுண்கலைக் கூடத்தின் நிறுவனர் திரு. தியாகராஜா ரவிச்சந்திரன் தனது குழுவினர் மற்றும் பெற்றோர் மாணவ மாணவிகள் சகிதம் ஏற்பாடு செய்த "தியாகி திலீபன்" அவர்களின் 35வது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு கடந்த வியாழக்கிழமை தொடக்கம் மாலை நடைபெறுகின்றது.

முதல்நாள் நிகழ்வில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் நினைவுரையும் கவிதையும் சமர்ப்பித்தார்.

வெள்ளிக்கிழமை (16) நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் நினைவுரையாற்ற தமிழ்நாட்டின் பேச்சாளர் வா.மு.சே. திருவள்ளுவர் அழைக்கப்பெற்றிருந்தார். அவரது உரையும் அஞ்சலிக் கவிதையும் சபையோர் மனங்களை உருகச் செய்தன.





அத்துடன் நேற்றைய நிகழ்வின இறுதியில் வா.மு.சே. திருவள்ளுவர் அவர்களது நூலான "உலகவன்" சிறப்புப் பிரதிகளை அவர் தனது கரங்களால் வழங்க. "பைரவி" நுண்கலைக் கூடத்தின் சார்பில் நான்கு பெற்றோர்கள் பெற்றுக்கொண்டனர். தாயக நினைவு பாடல்கள் அங்கு உணர்வோடு இசைக்கப்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 22ஆவது வருடமாக நடத்தும் திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு நடைபெறும் திருமுறை விழா சிறார்களுக்கான போட்டிகள்**

**திருமுறை மனனப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி**

விண்ணப்ப முடிவுத் திகதி ஒக்டோபர் 31, 2022

மேலதிக விபரங்களுக்கு:
416-724-6240
416-278-7445





# மலையகம் அடுத்து என்ன?

- வி.தேவராஜ் (மூத்த ஊடகவியலாளர்)

- இனிவரும் காலத்தையாவது "மக்களுக்கான அரசியலாக" செய்ய வாருங்கள். மலையகத்தின் தலைவிதியை மாற்றி எழுதப் புறப்பட்ட "மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளை" நிர்வாணமாக நிற்க வைத்துள்ளது ஜநா மனித உரிமைப் பேரவை அறிக்கை.

மலையக மக்கள் இலங்கையில் குடியேறி இரு நூற்றாண்டை தொட்டு நிற்கின்ற அதாவது 200 வருடங்களை எட்டியுள்ள இவ் வேளையில் ஜநா மனித உரிமைப் பேரவை "மலையக மக்கள் நவீன அடிமைத்தனத்தின் சின்னமாக" உள்ளதை வெளி உலகுக்குப் பறைசாற்றி நிற்கின்றது.

இது ஒன்றும் பரம ரகசியமில்லை. காலம் காலமாக பேசப்பட்ட விடயம்தான். சர்வதேசரீதியில் பேசப்பட்டபோதும் ஜநாவில் முதன் முறையாக மலையக விவகாரம் வந்துள்ளது.

மலையக மக்களின் "பிச்சைக் காசில்" வயிறு வளர்க்கும் ஒரு இளம் தொழிற்சங்க அரசியல்வாதி "நாட்டை நாம் காட்டிக் கொடுப்பதா எனக் கூறி மலையகம் குறித்து காண முயன்ற விடயங்களைத் திசை திருப்பிவிட முயன்றதாகத் தகவல். சிங்கள தேசமே அணிதிரண்டு ஜநா வாசலில் நிற்கும்போது மலையக நிலையை அறிக்கையிட வந்தவர்களை திசைதிருப்பிவிட முயன்றதை மலையக மக்கள் மன்றத்தின் முன்
வைக்கின்றேன். "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதுபோல் மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகளில் இது ஒரு உதாரணம். துரதிஷ்டவசமாக மலையக தொழிற்சங்க அரசியலில் இன்று பதம் பார்க்காமலே நிலைமையைக் கூறிவிடலாம்.

மலையக தொழிற்சங்க அரசியலில் இன்று ஒரு நடேச ஜயரைப் பார்க்க முடியாதுள்ளது. ஒரு வெள்ளையனையோ அல்லது ராஜலிங்கத்தையோ தேடிப் பார்க்க முடியாதுள்ளது துரதி'டமே.!

- நீங்கள் யார்? என்று ஒரு மலையக மகனையோ அல்லது மகளையோ கேட்டால்
• எங்களை மலையகத் தமிழர்கள் என்பர்.
• இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர் என்பர்
• சிங்கள மொழியில் நாம் "வத்தே தெமழ."
• வடக்கு கிழக்கு மொழியில் நாம் "வடக்கத்தையான்"
• எமக்கு "தோட்டக்காட்டான்" என்ற பெயரும் உண்டு.
• அன்று எமது வறுமை விலை போனது. அதனால் பல தொண்டர்களின் வாழ்வு வளமாகியது. இன்று எமது வாக்குகள் விலைபோகின்றன.சிங்களத் தேசியக் கட்சிகளுக்கு வாக்குகளை விற்று எமது மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகள் சுகபோகத்தில் திளைக்கின்றனர்.
• முன்பு வேலை செய்து வயிறு கழுவ தோட்ட வேலை இருந்தது. இன்று அது பறிபோய்க் கொண்டிருக்கின்றது.
• நாம் கொஞ்சம் கொஞ்சமாக அன்றாட காய்ச்சிகளாக மாற்றப்பட்டு நிச்சயமற்ற வாழ்க்கையுடன் வீதியில் வீசப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.
• கொரனா அதனைத் தொடர்ந்து இன்றைய பொருளாதார நெருக்கடி எங்கள் வாழ்க்கையையே புரட்டிப்போட்டுவிட்டது.
• கொரனாவும் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளும் எல்லோருக்கும் பொதுவானதுதான். இவைகளில் இருந்து மீண்டெழ மற்றவர்களால் முடியும். இதற்கென கொஞ்சகாலம் எடுக்கலாம். ஆனால் நாம் அரசியல் அநாதைகள். எமக்கென யார் இருக்கின்றனர். மீண்டெழ முடியாத அற்ப ஜீவன்கள் நாம்.
• எமது வாழ்க்கையே அன்றாடம் போராட்டமாகவே போய்க் கொண்டிருக்கின்றது.
• எமது சந்ததியினர் தொழிற்சங்க உரிமைகளுக்காகப் போராடினர்.
• சுதந்திர இலங்கை எம்மை அரசியல் அநாதைகளாக்கியது.
• அரசியல் உரிமைகளுக்காக பிரஜா உரிமைக்காக எமது போராட்டம் தொடர்ந்தது.
• 1977 இல் சௌமியமூர்த்தி தொண்டமானை நாடாளுமன்றத்திற்கு பிரதிநிதியாக அனுப்பினோம்.
• பிரஜா உரிமைப் பிரச்சனைக்கு இறுதியாக 1988 இல் கொண்டுவரப்பட்ட நாடற்றோருக்கு பிரஜா உரிமை வழங்கும் சட்டம் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
• ஆனால் நாம் இன ஒடுக்குமுறை மனித உரிமை மீறல் மட்டுமல்ல நாம் இன்றும் இரண்டாந்தரப் பிரஜைகளே.
• எமது நிகழ்கால எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாக நிற்கின்றது.
• இவ்வேளையில் ஜநாவில் நாம் பேசு பொருளாக வந்துள்ளோம். இது எமது விடியலை நோக்கிய பயணத்தின் முதல்படி என நினைக்கின்றோம்.
• மலையக மக்களை ஜநா அறிக்கையாவது விழித்தெழ வைக்கட்டும் என்றே கூறுவர்.
மலையகத்தைப் பொருத்து மேலோட்டமாக மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கலாம்
• சுதந்திரத்துக்கு முந்தைய காலம்
• சுதந்திரத்துக்கு பிந்தைய காலம்
1. சௌமிய மூர்த்தி தொண்டமான் காலம்
2. சௌமிய மூர்த்தி தொண்டமானுக்குப் பிந்தைய காலம்.

மூன்று நான்கு மலையக தலைமுறையை தின்ற வரலாறு இது. இன்றும் அதே வரலாறுதான்.கொஞ்சம் மாற்றத்துடன் தொடர்கின்றது.

இப்போது இந்தச் சமுதாயம் சமத்துவத்திற்கும் கௌரவத்திற்காகவும் போராடி வருகின்றது. வாழ்க்கை நிலைமைகள் முன்னேறியிருந்தாலும் செம்மையான சமத்துவம் எனும் அந்தஸ்தினை இம்மக்கள் அனுபவிப்பதற்கு இன்னும் அதிக விடயங்கள் செய்யப்படவேண்டியுள்ளன. மிகவும் முக்கியமான முதல் விடயமாக மனித உரிமைகள் மீறல்கள் தொடர்ந்து இடம்பெறுவது குறிப்பிடப்படவேண்டும் என்று The plight of Tamils of Indian origin in Sri Lanka என்ற தலைப்பில் "த நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ்" தளத்தில் வி.சூர்யநாராயணன் எழுதிய கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

மலையக மக்களின் பிரச்சனைகளை ஸ்தலத்தில் கண்டறிவதற்காக ஐ.நா. விசேட தூதுவரான டொமொயா ஒபொகடா 2021 நவம்பர் 26 இற்கும் டிசம்பர் 3 இற்கும் இடையில் இலங்கைக்கு விஜயம் செய்தார். விஜயம் செய்த தூதுவர் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களையும் அரசாங்க
அதிகாரிகளையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களையும் சந்தித்தார். தான் கண்டறிந்த விடயங்களின் பூர்வாங்க அறிக்கையினைத் தூதுவர் 2021 நவம்பர் 26ஆம் திகதி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சமர்ப்பித்தார். இறுதி அறிக்கையானது தற்போது 2022 செப்டெம்பரில் ஜநாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
இதுபற்றி.
• இலங்கையர்களிலுள்ள மலையக மக்கள் என்றுமே வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்ந்த வந்த சூழ்நிலையில் இன்று
பொருளாதார நெருக்கடி அவர்களை எழுந்து பார்க்க முடியாத அளவிற்கு தாக்கத்தை செலுத்தியுள்ளமையை காண முடிகின்றது
• தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்களாவர். தனிநபர் வருமானம் வாழ்க்கை நிலைமைகள் நீண்ட ஆயுள் கல்வி அடைவுகள் மற்றும் பெண்களின் நிலை - இவற்றைக் கணிப்பிட எந்த அளவுகோலையும் பிரயோகியுங்கள் - அவர்கள் ஏணியின் அடியிலேயே இருக்கின்றனர்.
• ஐ.நா. விசேட தூதுவர் பின்வருமாறு கோடிட்டுக்காட்டியுள்ளார்:
"நவீன அடிமை முறைகள் இனத்துவப் பரிமாணங்களைக் கொண்டுள்ளன. குறிப்பாக 200 வருடங்களுக்கு முன்னர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழர்கள் அவர்களின் வம்சாவளியின் அடிப்படையில் பல்வேறு வடிவிலான பாகுபாடுகளுக்கு இன்னும் முகங்கொடுத்து வருகின்றனர்".
• 2017ஆம் ஆண்டில் இலங்கை தேயிலைத் தொழிற்துறையின் 150ஆவது வருடப் பூர்த்தியினைக் கொண்டாடியது. பொருளாதாரத்தில் தேயிலைத் தொழிற்துறையின் வகிபாத்திரத்தினைக் கோடிட்டுக்காட்டுவதற்கும் துறையின்
உற்பத்தியினை எவ்வாறு உயர்த்துவது என்பது பற்றியும் துறையினை எவ்வாறு நவீனமயப்படுத்துவது என்பது பற்றியும் அரசாங்கமும் தோட்ட உரிமையாளர்களும் பல கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஏற்பாடு செய்திருந்தனர்.
• ஆனால் கண்டியிலுள்ள சமூக அபிவிருத்தி நிறுவனம் மட்டுமே உலகம் முழுவதிலும் பல லட்சக்கணக்கானவர்களுக்கு அதிகாலைக் களிப்பினை வழங்கும் இரண்டு இலைகளையும் ஒரு கொழுந்தினையும் (கலாநிதி முல்க் ராஜ் ஆனந்தினால் எழுதப்பட்ட நாவல்) உற்பத்திசெய்பவர்கள் பற்றிய ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்தது. தோட்ட உரிமையாளர்களினதும் தொழிலாளர்களினதும் மாறுபடும் வாழ்க்கைகள் கட்டாயம் கோடிட்டுக்காட்டப்பட வேண்டும்.
என்றும் வி.சூர்யநாராயணன் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகள் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் சகாப்தத்திற்கு பிற்பட்ட இன்றைய மலையக வரலாற்றுடன் தொடர்புபட்டவர்கள். இவர்களில் பலர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் பாசறையில் வளர்ந்தவர்களும் உள்ளனர். தொண்டமன் அவர்கள் என்ன செய்தார் என்று உங்களில் பலர் கேள்வி எழப்பலாம்.

- இலக்கின்றி மலையகத் தலைமைகள்.

நடேச ஜயர் ராஜலிங்கம் வெள்ளையன் அஸீஸ் தொண்டமான் இவ்வாறு பலர் அங்குலம் அங்குலமாக செதுக்கிய மலையகத்தில் இன்றைய தெழிற்சங்க அரசியல்வாதிகள் சுகமாக அமர்ந்து தொழிற்சங்க அரசியலை செய்கின்றீர்கள். மலையகம்குறித்த எதிர்காலப் பார்வை பயணிக்க வேண்டிய இலக்கு என்பன நடேச ஜயர் ராஜலிங்கம் வெள்ளையன் அஸீஸ் தொண்டமான் போன்றவர்களுக்கு இருந்தது.

மலையகம்குறித்த இன்றைய தொழிற்சங்க அரசியல் தலைவர்களின் இலக்கு என்ன? எதிர்காலப் பார்வை என்ன? துரதிஷ்டவசமாக இன்றைய மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளிடம் மலையகம்குறித்த எதிர்காலச் சிந்தனை இலக்கு என்பன இன்றியே தெழிங்சங்க அரசியலை செய்கின்றனர்.

- வாக்கு சேகரிக்கும் முகவர்கள்

"கட்சித் தலைகள்" பிரிந்து நின்று தேசியக் கட்சிகளில் போட்டியிட்டுவது. சில சந்தர்ப்பங்களில் ஒரே கட்சியில் பிரிந்த நின்று ஒரு சின்னத்தில் போட்டியிடுவது. நாடாளுமன்ற உறுப்பினாகளாவது அமைச்சர்களாவது தமது "ஆலவட்டங்களுக்கு" உயர்பதவிகளைப் பெற்றுக் கொடுப்பது போன்றவைகளைத் தவிற பெரிதாக சாதித்ததாக இல்லை.

உண்மையில் இவர்கள் தேசியக் கட்சிகளுடன் இணைந்தோ பிரிந்து நின்றோ போட்டியிட்டு மலையக வாக்குகளை தேசியக் கட்சிகளுக்கு வாரி வழங்கும் முகவர்களாகவே செயற்படுகின்றனர். இதற்கான கையூட்டே அமைச்சர் பதவிகள்.

- மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகளிடம் சில கேள்விகள்..!
• நீதிமன்ற தீர்ப்பை நிராகரித்து நிற்கும் பெருந் தோட்டக் கம்பெனிகளை வழிக்குக் கொண்டுவர உங்களால் முடிந்ததா?
• தோட்டத் தொழிலாளர்கள் அன்றாடம் காய்ச்சிகளாக மாற்றப்படுகின்றனர்.உங்களால் தடத்து நிறுத்த முடிந்ததா?
• இதனால் அவர்களுக்கான நீகு மற்றும் சலுகைகள் மறுக்கப்படுகின்றனவே.
• 2015 ஆம் ஆண்டில் இருந்து பேசப்படும் 1000 ரூபாவை பெற்றுக் கொடுக்க முடியாமற் போனதேன்?.
• மலையகம் குறித்த பொது வேலைத்திட்டம் உள்ளதா?
• மலையக மக்களை சொந்தக் காலில் நிற்க வைக்கும் திட்டங்கள் உள்ளனவா?
• தொழிற்சங்கங்களுக்குள் போட்டி ஏன். தோழிலாளர்களுக்காக ஒற்றுமைப்பட முடியாதா?
• சந்தா இல்லாததால் பொது வேலைத்திட்டம் குறித்து தொழிற்சங்கங்கள் தற்போது பேசுகின்றன.உண்மைதானே?
• தீப் பிடிக்கும் தோட்டக் குடியிருப்புகள். தொடர்ச்சியாக இது தொடர்பான செய்திகள் வெளிவருகின்றன. சுமார் 300க்கும் மேற்பட்ட தோட்ட வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிகின்றது.
• எரிந்து நாசமாகியது நூற்றாண்டு கால பழமையான காலணித்துவ சின்னங்கள் மாத்திரமல்ல 300க்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கையும் சிறுக சிறுக சேர்த்த உடமைகளும் கஷ்டப்பட்டுத் தேடிவைத்த ஆவணங்களும்தான் என்பது உங்களுக்குத் தெரியாதா?
• பாலங்கள் இன்றி ஆற்றில் அடித்துச் செல்லப்படும் மக்கள்.
• மண்சரிவு அபாயத்தில் இடம் பெயர்ந்தோர். மீரியபத்தை மக்களை நோக்கி வந்த உதவிகளுக்கு என்ன நடந்தது?
• நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் 25 ஆயிரம் ஹெக்டர் தோட்டக் காணிகள் காடாக்கப்பட உள்ளன. இந்தத் தோட்டங்களில் வாழும் தோட்டத் தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பத்தவர்களினதும் எதிர்காலம் கேள்விக் குறியாக நிற்கின்றது.

- "சிஸ்டம் சேன்ஜ்"பற்றி பேசும் தலைமைகள்

இன்னும் பேசலாம் ஆனால் நீங்களோ இலங்கையின் அரசியல் "சிஸ்டம் சேன்ஜ்"பற்றி பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். இது பற்றி பேசும் மலையக தொழிங்சங்க அரசியல்வாதிகளே இந்த மாற்றத்தால் மலையகத்தில் ஏற்படப்போகும் மாற்றம் என்ன என்று கூறுவீர்களா?

கடந்த 74 வருடங்களுக்கு மேல் தமது அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் வடக்குக் கிழக்கு மக்களே "சிஸ்டம் சேன்ஜ்" தமக்கு ஒன்றும் கொண்டு வந்துவிடாது என ஒதுங்கி இருக்கும் போது நீங்கள் மலையக மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முயல்வது என்ன?

- ஆற்றைக் கடக்க முயன்ற தொழிலாளர்களும் அவர்களது பிள்ளைகளும் அள்ளுண்டு போனதை தெலைக்காட்சிகள் உங்கள் கண் முன் காட்டியபோது நீங்கள் இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்களாக அமைச்சர்களாக இராஜாங்க அமைச்சர்களாக இருப்பது மக்கள் ஆற்றிலும் மண்சரிவிலும் அள்ளுண்டுபோவதைப் பார்த்துக் கொண்டிருப்பதற்கா என மக்கள் எழுப்பும் கேள்விகளுக்கப் பதில் கூறுங்கள்.

சில வேளைகளில் உங்களில் பலருக்கு அமைச்சுப் பதவிகளுக்கான கதவுகளைத் திறப்பதாக இருக்கலாம். பதுளை மாவட்டத்தில் ஒரு தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய ஒரு மலையக தொழிற்சங்க அரசியல்வாதி கூறிய வார்த்தை இது.

"இப்பொழுது நான் ஒரு எம்பியாக உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கின்றேன் அடுத்த முறை நான் ஒரு அமைச்சராக உங்கள் முன் நிற்பேன்" என்று கூறியதை இங்கு பதிவு செய்கின்றேன்.

மொத்தத்தில் மலையக தொழிற்சங்க வரலாற்றில் நடேச ஜயர் காலம் ஒரு சகாப்தம். வெள்ளையன் ராஜலிங்கம் காலம் அப்பழுக்கற்ற அரசியலின் சின்னம். சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் பலம் பலவீனம் இதற்கப்பால் ஒரு சகாப்தம். "கிங் மேக்கர்" அரசியலை உருவாக்கியவர்.

- தங்கத்தை உரசலாம் கோதை?

இந்த வரிசையில் இன்றைய மலையக தொழிங்சங்க அரசியலின் சாதனை என்ன? தங்கத்தை உரசிப் பார்த்து அறியலாம். துரதிஷ்டவசமாக உரசிப் பார்த்து அறியும் நிலையில் இல்லை. ஒன்றும் இல்லா "கோது" என்பதை மக்கள் அறிவர். இதனை வெளிப்படையாக மக்கள் கூறுகின்றனர். தொலைக்காட்சிகளில் கோபக் கனல் கக்க" மக்கள் மலையக அரசியல்வாதிகள் மீது கொப்பளிக்கும் வார்தைகளே இதற்குச் சான்று".

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் அரசியல் "சிஸ்டம்" மலையக மக்களை எவ்வாறு வைத்திருக்கின்றது என்பதை தோலுரித்துக் காட்டுவதே ஜநா அறிக்கை. இன்று தென்னிலங்கை கோரி நிற்கின்ற "அரகலயா சிஸ்டம் சேன்ஜ்சில்" வடக்குக் கிழக்கு மக்கள் பற்றியோ முஸ்லிம் மக்கள்பற்றியோ பேசவில்லை. மலையக மக்களை ஆர்ப்பாட்டத்தில் இறக்கிய மலையக தொழிற்சங்க அரசியல்வாதிகளிடம் மலையக மக்கள்பற்றி "அரகலயா" தமது நிகழ்ச்சி நிரலில் என்ன கூறி இருக்கின்றதென தெளிவுபடுத்த வேண்டும்.

ஆதற்காக "அரகலயா சிந்தனை" தேவையில்லை என்பதல்ல அர்த்தம். இந்த சிந்தனைமூலம் தென்னிலங்கை தமக்கான அரசியல் ஒழுங்கை ஏற்படுத்திக் கொள்ள முயல்கின்றது. ஜனநாயகத்தின் குறைந்தபட்ச இந்தக் கோரிக்கைக்கே இன்று பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு "அரகலயா போராட்டக்காரர்கள்" பயங்கரவாத தடைச் சட்டத்தின்மூலம் வேட்டையாடப்படுகின்றனர்.

மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளே மலையக மக்களை வைத்து அரசியல் செய்து உங்களுக்காகவும் உங்களைச் சார்ந்தோருக்கும் "அறுவடையாக்கியது" போதும். நீங்கள் மலையகத்திற்கு போதிக்கின்ற "சிஸ்டம் சேன்ஜில்" ஊழல் மோசடி என்பன முக்கிய அம்சமாக உள்ளது.
இனிவரும் காலத்தையாவது "மக்களுக்கான அரசியலாக" செய்ய வாருங்கள்.

Email : vathevaraj@gmail.com

# இந்துக்கள் குறித்து கருத்துகள் எதிர்ப்பு வலுத்தும் ஆ.ராசா மன்னிப்பு கேட்க மறுப்பதால் சர்ச்சை



இந்துக்கள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா, மன்னிப்புக் கேட்க மறுப்பதால் எதிர்ப்பு வலுப்பெறுவதுடன், சர்ச்சையும் நீடிக்கிறது.திமுக துணைப் பொதுச் செயலரான ஆ.ராசா, ஏற்கெனவே சர்ச்சைக்குரிய கருத்துகளைத் தெரிவித்து, விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளார்.கடந்த சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது, திமுக தலைவர் ஸ்டாலின் மற்றும் அப்போதைய முதல்வர் பழனிசாமி ஆகியோரின் பிறப்பை ஒப்பிட்டுப் பேசியது சர்ச்சையானது.

பின்னர், தனது பேச்சு தவறாக சித்தரிக்கப்பட்டதாகவும், மனதைப் புண்படுத்தியிருந்தால் வருத்தம் தெரிவிப்பதாகவும் ஆ.ராசா கூறினார்.சில மாதங்களுக்கு முன் திமுக தலைவர் ஸ்டாலின் முன்னிலையிலேயே, ''அண்ணா வழியில் முதல்வர் பயணிக்கிறார். எங்களை பெரியார் வழிக்குத் தள்ளாதீர்கள். தனிநாடு கேட்க எங்களைத் தூண்ட வேண்டாம். மாநில சுயாட்சி தாருங்கள்'' என்று பேசி, பாஜகவின் எதிர்ப்பை சம்பாதித்தார். அதேபோல, மாட்டிறைச்சி தொடர்பாக பாஜகவை விமர்சித்த ராசா, ''ஆர்.எஸ்.எஸ்.,மோகன் பகவத், மோடி, அமித் ஷாவுக்கு தைரியம் இருந்தால், முஸ்லிம்கள் தவிர்த்து மாட்டுக்கறி சாப்பிடுவோர் யாரும் இந்துக்கள் இல்லை என்று சொல்லுங்கள்'' என்று சவால் விட்டார்.

இந்தப் பேச்சு பாஜகவினரை பாதித்தாலும், பெரிய அளவில் எதிர்ப்பு கிளம்பவில்லை.இந்நிலையில், கடந்த 6ம் தேதி பெரியார்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய ஆ.ராசா, ''நீ கிறிஸ்தவனாக இல்லை என்றால், இஸ்லாமியனாக இல்லை என்றால், பார்சியனாக இல்லை என்றால், நீ இந்துவாகத்தான் இருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் சொல்கிறது. இப்படிப்பட்ட கொடுமை வேறு எந்த நாட்டிலாவது உண்டா?இந்துவாக இருக்கிற வரை நீ சூத்திரன். சூத்திரனாக இருக்கிற வரை நீ விபச்சாரியின் மகன். இந்துவாக இருக்கிற வரை நீ பஞ்சமன். இந்துவாக இருக்கிற வரை நீ தீண்டத்தகாதவன். எத்தனை பேர் விபச்சாரி மகனாக இருக்க விரும்புகிறீர்கள்? எத்தனை பேர் தீண்டத்தகாதவனாக இருக்க விரும்புகிறீர்கள்? என்ற கேள்வியை உரக்கச் சொன்னால்தான், அது சனாதனத்தை முறியடிக்கிறது என்பதை விடுதலையும், முரசொலியும், திமுகவும், திராவிடர் கழகமும் எழுப்ப வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்து மதத்தின் வர்ணாசிரம தர்மத்தில் 4வது வர்ணமாகிய சூத்திரர்கள் மனு ஸ்மிருதியில் இழிவுபடுத்தப்பட்டது ஏன்?'' என்று கேள்வி எழுப்பி பேசினார்.ஆ.ராசாவின் இந்தப் பேச்சு தொடர்பான வீடியோ வெளியானதும், பாஜக மற்றும் இந்து அமைப்பினர் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து, ராசாவுக்கு எதிராக கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.அதேசமயம், ஆ.ராசா தனது ட்விட்டர்பக்கத்தில், ''சூத்திரர்கள் யார்? அவர்கள்இந்துக்கள் இல்லையா? மனு ஸ்மிருதி உள்ளிட்ட நூல்களில் ஏன் இழிவுபடுத்தப்பட்டு, கல்வி, வேலைவாய்ப்பு, கோயில் நுழைவு மறுக்கப்பட்டது? அரசியல் அதிகாரம், பரப்புரையால் 90 சதவீதம் இந்து மக்களின் இவ்வுரிமைகளை மீட்ட திராவிட இயக்கம் எப்படி இந்துக்களுக்கு எதிரியாகும்'' என்றும் பதிவிட்டு, தனது கருத்துகளுக்கு வலு வேற்றினார்.இதையடுத்து, ராசா மீது பல்வேறு அமைப்புகள் சார்பில் புகார்கள் அளிக்கப்படுவதுடன், கோவை, நீலகிரியில் போராட்டங்களும், கடையடைப்பும் நடத்தப்பட்டு வருகிறது. அத்துடன், அவர் தனது கருத்தை திரும்பப் பெற வேண்டும், மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் தெரிவித்து வருகின்றனர்.இந்த விவகாரத்தில் பாஜகவுடன், அதிமுகவும் சேர்ந்து கொண்டது. பாஜக தலைவர் அண்ணாமலை, அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர்கள் பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரும் கண்டனம் தெரிவித்தனர்.

அதேநேரம், இவ்வளவு எதிர்ப்பு கிளம்பினாலும், திமுக தலைமையோ, மூத்த நிர்வாகிகளோ எந்த ஆதரவோ, எதிர்ப்போ தெரிவிக்கவில்லை. இதுகுறித்து அமைச்சர் சேகர்பாபுவிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, அவர் கேள்வியே புரியாததுபோல அங்கிருந்து சென்றுவிட்டார்.இதற்கிடையே தனது கருத்து தொடர்பாக இதுவரை மன்னிப்பு கேட்காத ஆ.ராசா, சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தனது பேச்சுக்கு விளக்கம் அளித்துப் பேசும்போது, ''மன்னிப்பு கேட்க வேண்டும் என்கிறார்கள். மன்னிப்பு கேட்பது பெரிய விஷயம் இல்லை. மன்னிப்பு கேட்பது என்பது மனித மாண்பு. நான் மன்னிப்பே கேட்க மாட்டேன் என்றால், அவனைவிட முட்டாள், அயோக்கியன் வேறு யாரும் இல்லை.

நான் மன்னிப்பு கேட்கத் தயார். என்ன மன்னிப்புன்னு சொல்லுங்க. இந்திய அரசியல் சட்டப்படி உறுதிமொழி எடுத்த ஆளுநர் அவ்வாறு நடந்து கொண்டாரா? நாங்கள் இந்து மதத்துக்கு எதிரானவர்கள் இல்லை. இந்து மதத்தின் பெயரால் சொல்லப்படும் சனாதானத்துக்கு எதிரானவர்கள்'' என தெரிவித்துள்ளார்.திமுகவின் கொள்கைகளை உயர்த்திப்பிடிக்கும் ஆ.ராசா, பாஜக எதிர்ப்புக் கொள்கையின் அடிப்படையில் இந்துக்கள் குறித்து இவ்வாறு பேசுவதும், அதற்கு மன்னிப்புக் கோர மறுப்பதும், ராசா மட்டுமின்றி, திமுக மீதான இந்து எதிர்ப்புக் கொள்கையை மேலும் வலுப்படுத்தி வருகிறது. இந்துக்களுக்கு எதிரி இல்லை என்று கூறிவரும் திமுக, வெறுப்புணர்வைத் தூண்டும் இதுபோன்ற கருத்துகள் வெளியாவதை தவிர்க்க வேண்டும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

# பாரதியார் சொல்படி வாழ்ந்தவர் கவிஞர் தமிழ்ஒளி: பேராசிரியர் பர்வீன் சுல்தானா புகழாரம்



பாரதியார் சொல்படி வாழ்ந்தவர் கவிஞர் தமிழ்ஒளி என பேராசிரியர் பர்வீன் சுல்தானா புகழாரம் சூட்டினார். சென்னை தேனாம்பேட்டையில் உள்ள ஜஸ்டிஸ் பஷீர் அஹமத் சையீத் மகளிர் கல்லூரியில் தமிழ் இலக்கிய மன்றத் தொடக்க விழா மற்றும் கவிஞர் தமிழ்ஒளியின் 98 வது பிறந்தநாள் கருத்தரங்கம் நேற்று நடந்தது. கல்லூரியின் தமிழ்த் துறை மற்றும் கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டு விழாக் குழு இணைந்து நடத்திய இந்த கருத்தரங்கத்தில் கல்லூரியின் முதல்வர் அம்துல் அஜீஸ், பேராசிரியர் இ.சா. பர்வீன் சுல்தானா, தமிழ்நாடு பொதுப்பள்ளிக்கான மாநில மேடை பொதுச்செயலாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு, கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக் குழுவின் தலைவர் ச.செந்தில்நாதன், செயலாளர் இரா.தெ.முத்து, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவன பேராசிரியர் மணிகோ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கருத்தில் இருந்து மாறியதில்லை: கருத்தரங்கத்தில் பேராசிரியர் பர்வீன் சுல்தானா பேசியதாவது: பாரதியார் மற்றும் பாரதிதாசனின் பாடல்களில் ஏதாவது ஒரு இடத்தில் தங்களது கருத்தில் இருந்து மாறுபட்டு, வேறு சிந்தனைகளில் பாடல்களை எழுதியிருப்பார்கள். ஆனால், கவிஞர் தமிழ்ஒளி பாடல்களில் ஒருபோதும், தான் எடுத்த கருத்தில் இருந்து மாறியது இல்லை. 10 ஆண்டுகளுக்கு முன்பு, கவிஞர் தமிழ்ஒளியின் மாதிரி காவியத்தை ஜஸ்டிஸ் பஷீர் அஹமத் சையீத் மகளிர் கல்லூரியின் பாடத்திட்டத்தில் வைக்கப்பட்டது.

புகழ், படைப்பை பரப்ப வேண்டும்: 'நமக்கு தொழில் என்பது,கவிதை, நாட்டுக்கு உழைத்தல்,இமைப்பொழுதும் சோர்வடையாமல் இருத்தல்' என பாரதியார் சொன்னதற்கு இணங்க வாழ்ந்தவர் கவிஞர் தமிழ்ஒளி. தமிழ்ஒளியின் வாழ்க்கை, பொருளாதாரத்தில் பின்னடைவு கொண்டது. நம்முடைய வாழ்வியலுக்கான பல பதிவுகளை செய்த, அவருடைய புகழ், படைப்பு தமிழ் சமூகத்தில் பரப்பப்பட வேண்டும். கவிஞர் தமிழ்ஒளி குறித்து எழுதப்படும் ஆய்வுக் கட்டுரைகள், நூற்றாண்டு விழா கொண்டாடுகிறபோது நூலாக வெளியிடப்படும். தமிழ்ஒளியின் நூற்றாண்டு விழாவை தமிழக அரசு முக்கிய விழாவாகக் கொண்டாட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். சென்னை பல்கலைக்கழகத்தில் நிறுவ இருக்கும் கவிஞர் தமிழ் ஒளி நினைவு அறக்கட்டளைக்கு பேராசிரியர் பர்வீன் சுல்தானா நன்கொடையாக ரூ.25 ஆயிரத்துக்கான காசோலையை, தமிழ் ஒளி நூற்றாண்டு விழாக்குழுவின் தலைவர் செந்தில்நாதன், செயலாளர் இரா.தெ.முத்துவிடம் வழங்கினார்.

# சித்த மருத்துவ பல்கலை.,க்கு ஆளுநரின் துரித அனுமதியை எதிர்பார்க்கிறோம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன்



ஆளுநர் விரைந்து சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி அளிப்பார் என்று எதிர்பார்க்கிறோம் என்று அமைச்சர் மா.சுப்பிர மணியன் தெரிவித்தார், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் செய்தியாளர்களை சந்தித்த மருத்துவதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ''தமிழகத்தில் ஏற்கனவே இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதா, ஹோமியோபதி, யுனானி மற்றும் யோகா ஆகியவற்றோடு இணைந்து சித்த மருத்துவ பல்கலைக்கழகம் ஒன்றும் அமைக்கப்பட வேண்டும் என்ற வகையில் 2021 22 ஆம் ஆண்டு மக்கள் நல்வாழ்வுத்துறை நிதிநிலை அறிவிப்புகள் வெளியிடப்பட்டது.

அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைகழக மசோதா 2022 ஏப்ரல் மாதம் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டு பேரவையின் ஒப்புதலும் பெறப்பட்டது. ஒப்புதல் பெறப்பட்டு பிறகு மே 2022 இல் சட்டத்துறையின் மூலமாக ஆளுநரின் ஒப்புதலை வேண்டி அனுப்பி வைக்கப்பட்டது.25 .7.2022 அன்று ஆளுநரின் முதன்மைச் செயலாளர், சட்டத்துறைக்கு அனுப்பிய கடிதத்தில் தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக்கழக மசோதாவில் மாணவர்களின் சேர்க்கை சம்பந்தப்பட்ட சில பிரிவுகள் இந்திய மருத்துவ தேசிய ஆணையச் சட்டம் 2020 இல் உள்ள சட்டப் பிரிவுகளுக்கு முரண்பாடாக உள்ளதா என்பதை ஆராய்ந்து குறிப்புரை வழங்க கடிதம் எழுதி இருந்தார்.

இதற்கு அளித்த பதிலில் தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக்கழக சட்ட மசோதாவின் பிரிவுகளுக்கும் , இந்திய மருத்துவ தேசிய ஆணையச் சட்டம் 2020 மற்றும் ஹோமியோபதி தேசிய ஆணைய சட்ட பிரிவுகளுக்கும் முரண்பாடு ஏதும் இல்லை என விரிவான விளக்கங்களுடன் தெரிவிக்கப்பட்டது. இந்த பதில் ஆளுநரின் முதன்மைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது. எனவே ஆளுநர் விரைந்து தமிழகத்தில் உருவாக இருக்கிற சித்த மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அனுமதி அளிப்பார் என்று எதிர்பார்த்து இருக்கிறோம்'' இவ்வாறு அமைச்சர் கூறினார்.



# மாவீரர்களின் தியாகங்களில் அரசியல் இலாபம் வேண்டாம்: பி 2 பி இயக்கம் கோரிக்கை


- எமது யாழ் செய்தியாளர்

மாவீரர்களின் தியாகங்களில் அரசியல் இலாபம் தேட வேண்டாம் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது.

"தியாக தீபம்" திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் கருத்து மோதல்கள் எழுந்துள்ள நிலையிலேயே அந்த அமைப்பின் இந்த வேண்டுகோள் வந்துள்ளது. திலீபனின் நினைவேந்தலை ஒரு பொதுக் கட்டமைப்பின் மூலம் அவரது நினைவுத்தூபி உள்ள இடத்தில் முன்னெடுக்கலாம் என்று யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்த கருத்திற்கு எதிர்ப்பு எழுந்த நிலையில், உன்னதமான அந்த நிகழ்வை அரசியல் மயமாக்க வேண்டாம் என்று சர்வ சமைய அமைப்புகளை உள்ளடக்கிய பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனால் பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. யாழ் மாநகர சபையை ஆட்சி செய்யும் தரப்புக்கள் அரசாங்கத்தின் முகவரான ஈ.பி.டி.பியின் தயவில் உள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணி அப்படியானவர்களிடம் நினைவேந்தல்களைக் கையளிக்கும் வரலாற்றுத் தவறினை நாம் ஒருபோதும் செய்யப்போவதில்லை. என்று தெரிவித்துள்ளனர்.

"ஆரம்பம் முதலே தியாக தீபத்தின் நினைவேந்தலைத் திட்டமிட்டுக் குழப்பி, எம்மீது சேறு பூசல்களைச் செய்ய முயலும் முகவர் அமைப்புக்களே, நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு என்னும் போர்வையில் தியாக தீபத்தின் நினைவேந்தலைத் தொடர்ச்சியாகக் குழப்ப முற்படுகிறார்கள். இத்தகைய கபட நோக்கத்துடன் உருவாக்கப்படும் "பொதுக் கட்டமைப்பு" என்னும் சதிமுயற்சிக்கு நாம் துணைபோகமாட்டோம்" என்று அக்கட்சியின் ஊடக அறிக்கை கூறியுள்ளது.


யாழ் மாநகர சபை
JAFFNA MUNICIPAL COUNCIL

16 – 09 – 2022

தியாக தீபம் திலீபனை அவர்களின் நினைவேந்தலுக்கான பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவது தொடர்பாக

யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட நல்லூர்ப் பகுதியில் அமைந்திருக்கும் தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவுத்தூபியில் திலீபன் அவர்களின் 35 ஆவது நினைவேந்தலை ஒரு பொதுக் கட்டமைப்பினை உருவாக்கி சிறப்பாக நடாத்துவது தொடர்பில், சமயத் தலைவர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றோம்.

அக் கலந்துரையாடல் நாளை (17.09.2022) மாலை 3.00 மணியளவில் யாழ்.நாவலர் மண்டபத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் தங்களை அல்லது தங்கள் சார்பில் பிரதிநிதி ஒருவரை பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முதல்வர்,
யாழ்.மாநகர சபை
யாழ்ப்பாணம்.

எனினும். நல்லை ஆதீனத்தின் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தையடுத்து தியாகதீபம் திலீபனை நினைவேந்தலைச் சிறப்பாக முன்னெடுக்க, மதகுருமார்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், அரசியல் கைதிகளுக்கான அமைப்பின் பிரதிநிதிகள், சமூகப் பிரதிநிதிகள், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர் என 15 பேரைக் கொண்ட பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இப்படியான சூழலில், திலீபனின் நினைவேந்தலை இதயசுத்தியுடன், உளப்பூர்வமாக முன்னெடுக்க வேண்டுமென்றும், அதற்கு அரசியல் சாயம் பூசி அதன் புனிதத்தன்மையை நீர்த்துப்போகச் செய்ய வேண்டாம் என்று பி 2 பி அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

"தமிழீழ விடுதலை போராட்ட வரலாற்றில் மிக முக்கிய திருப்பத்தை ஏற்படுத்திய அகிம்சை போராட்டத்தின் உச்சத்தினை தொட்டவர் தியாகி திலீபன். பன்னிரெண்டு நாட்களாக நீர், ஆகாரம் எதுவுமின்றி தன்னையே உருக்கி தமிழ் இனத்தின் விடுதலை தீயை ஏற்றி வைத்தவர். காந்திய தேசத்திற்கே அகிம்சையை போதித்த தலைமகன். இவ்வாறாக தியாகத்தின் சிகரமான திலீபன் அவர்களின் 35 ஆவது ஆண்டு நினைவு நாட்களின் ஆரம்ப தினமான 15.09.2022 அன்றும் அதற்கு முன்பாக நடைபெற்ற ஒழுங்குபடுத்தல் நிகழ்வுகளின் போதும் இடம்பெற்ற கட்சி அரசியல் ரீதியான முறுகல் நிலை, தமிழ் தேசியத்தின் பால் பற்றுறுதி கொண்ட அனைவருக்கும் அதிர்ச்சியையும் கவலையினையும் ஏற்படுத்தியுள்ளது. தியாகி திலீபன் அறப்போரினை நடத்தி ஆகுதியான நல்லூர் மண்ணிலேயே இச்சம்பவங்கள் நடைபெற்றது மிக வேதனை அளிப்பதாக உள்ளது. அளவிட முடியாத தியாகத்தினை எவருமே தமது வாக்கு அரசியலுக்கு பயன்படுத்துவதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது" என்று வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் நினைவு நிகழ்வின் போது ஒரு மாவீரரின் தந்தையும், தியாகி திலீபன் அவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்தில் கூட இருந்தவரும், நீண்ட நெடிய போராட்ட வரலாற்றைக் கொண்ட மூத்த போராளியுமான ஒருவர் அவமதிக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் ஒரு மாவீரரின் வணக்க நிகழ்வில் இன்னொரு மூத்த போராளியை அவமதிப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் பி 2 பி அமைப்பினரின் அறிக்கை கூறியுள்ளனர்.

"இராசையா பார்த்திபன் இன்னமும் பசியுடனேயே இருக்கின்றான். 35 வருடங்கள் கடந்தும் தியாகி திலீபன் அவர்களின் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில், எமது உரிமைகளை இழந்து, எமது நிலங்கள் எங்கள் எதிரியினால் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்படும் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் உள்ளோம். தமிழினமே ஓரணியாக அணிதிரண்டு போராடவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் உள்ளோம்.




ஆகவே அனைவரும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான விரும்பத்தகாத சம்பவங்களைத் தவிர்த்து, அனைவரும் நினைவெழுச்சி நிகழ்வுகளின் புனிதத்தைக் களங்கப்படுத்தாத வகையில் நடந்து கொள்ளுமாறு உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம். நினைவெழுச்சி நிகழ்வுகள் எந்தவொரு அரசியல் கட்சியினதும் தனியுரிமை சொத்தல்ல. இந்நிகழ்வுகள் மக்கள் மயப்படுத்தப்பட்டு மக்களின் முன்னெடுப்பில் நடைபெறுவதாகவே அமைய வேண்டும்".

தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவெழுச்சி நிகழ்வுகள், அதற்கான பொதுக்கட்டமைப்பு என்பன கட்சி அரசியலைக் கடந்து பொது சமூகமாகிய மாவீரர்களின் பெற்றோர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர்கள், மத தலைவர்கள், புத்திஜீவிகள், மாணவர்கள், சிவில் சமூகத்தினர், பொது மக்கள் அடங்கியவர்களின் முன்னெடுப்பிலேயே கட்டமைக்கப்படவேண்டும் என்றும் பி 2 பி அமைப்பினர் கோரியுள்ளனர்.

"இவ்விடயத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சிகளைத் தீர்த்துக்கொள்ளும் களமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என அனைத்துத்தரப்பினரிடமும் உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்".

"தியாக தீபம்" தீலீபனின் நினைவேந்தல் நிகழ்ச்சி அரசியலாக்கப்படுகிறதா என்பது தொடர்பில் உதயனில் திலீபனின் தியாகத்திலும் அரசியல் ஆதாயம் தேடப்படுகிறதா? என்ற கட்டுரை கடந்த வாரம் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "தமிழ்க் காங்கிரஸ் அலுவலகம் முற்றுகையிடப்படும்": முன்னாள் போராளிகள் எச்சரிக்கை




- எமது யாழ் செய்தியாளர்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரின் அலுவலகங்கள் முன்னாள் போராளிகளினால் முற்றுகையிடப்படும் நிலை ஏற்படும் என ஜனநாயகப் போராளிகள் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

யாழில் இன்றையதினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அக்கட்சியின் செயலாளர் கதிர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தியாக தீபம் திலீபனின் வரலாறு என்பது தமிழ் ஈழ விடுதலை போராட்டத்தின் வரலாறாக இருக்கின்றது. இவர் மக்களுடைய விடுதலைக்காக ஜனநாயக வழியிலே அகிம்சை போராட்டத்தினை ஆரம்பித்து வீர மரணத்தை தழுவிக்கொண்டவர்" என்றார்.


களத்தில் மடிந்த மாவீரர்களை அரசியல் ரீதியான தேவைகளுக்குப் பயன்படுத்துவது இதுவரை தவிர்க்கப்பட்டு வந்தது. அவர்களின் தியாகங்கள் என்பது போற்றப்பட வேண்டியது. எனவே அவர்களை குலதெய்வங்களாக கௌரவித்து பூஜித்து வந்திருக்கின்றோம் என ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் மேலும் தெரிவித்துள்ளார்.

"இன்றைய சூழலில் போராளிகளை நினைவுகூருவது என்பது விடுதலைப் புலிகளாகிய எங்களின் கடமையாகும். இதனை எங்களது தாயக மண்ணிலே செய்வதற்கு அரசியல் கட்சிகளுடைய தலையீடு எங்களுக்கு இடையூறாக இருக்கின்றது. அண்மையில் திலீபனின் நினைவுத்தூபி அமைந்திருக்கின்ற இடத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலையீடு என்பது மிக மோசமான, கீழ்த்தரமாக இருந்தது. தங்களின் கட்சி அரசியலுக்காக பயன்படுத்துவதற்காக தீவிரமான முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். தாயகப் பகுதியில் இருக்கின்ற உங்களின் அலுவலகங்கள், வாழ்விடங்கள் அனைத்தும் ஆயிரக்கணக்கான போராளிகளால் முற்றுகை இடப்பட்டு வெளியேற்றப்படுவீர்கள் என எச்சரிக்கின்றேன்" என்று அவர் கூறினார்.

போராட்டம் என்பது மக்களின் விடுதலைக்காக, தமிழீழ விடுதலைப் புலிகளால் முற்று முழுதாக தலைமைத்துவம் வழங்கப்பட்டு வழிநடத்தப்பட்டது. தமிழ் தேசியக் குழுக்கள் போன்ற குழுக்களால் இன்று தலைமைத்துவம் சிதைவுற்று இருக்கின்றது. போராளிகள் எடுத்த வகுப்பில் தான் இன்று நீங்கள் நிற்கிறீர்கள். இதனைத் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். உங்கள் அரசியலுக்காக தமிழ் தேசியத்தை விற்றுப் பிழைக்காதீர்கள் என்றும் அவர் அரசியல்வாதிகளைக் கடுமையாகச் சாடினார்.

எதிர்காலத்தில் எங்கள் மக்களுக்காக உண்மையான, நேர்மையான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு நாங்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றோம். விடுதலைப் புலிகள் அழிந்துவிட்டார்கள், நாங்கள் தான் இனி தமிழ் தேசியவாதிகள் என்று தலை தூக்கிக்கொண்டு வர கூடாது. ஒரு போதும் தாங்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டோம் என்றும் அவர் ஊடகவியாலாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

இன்று தமிழ்த் தேசியம் பற்றி பேசுபவர்கள் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் மற்றும் போர்க்காலத்தில் ஓடி ஒளிந்து தமது உயிருக்குப் பயந்து சட்டத்துறையில் கல்வி கற்றபதற்காச் சென்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிய கதிர் தாங்கள் தம்மைப் போன்ற போராளிகள் போராடியதால் தான் இன்று தமிழ் தேசிய அரசியல் பேசுபவர்கள் அரச அங்கீகாரம் பெற்று வந்து நிற்கிறார்கள் என்றும் வலியுறுத்தினார். தமக்கு தேசத்தின் அங்கீகாரம் இருக்கிறது அதை அரசியல் கட்சிகள் தட்டிப் பறித்துக்கொண்டு அவர்கள் அரசியலுக்குக் கொண்டு போவதனை தாங்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் கதிர் மேலும் தெரிவித்தார்.



# மார்க்கம் நகரசபையில் வாக்களிக்கக்கூடிய 4 பிராந்திய கவுன்சிலர்களில் நல்லதோர் வேட்பாளரான

# ஜிம் ஜோன்ஸ் (Jim Jones) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்

தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் மார்க்கம் பிராந்தியத்தில் பிராந்தியக் கவுன்சிலராக (Regional Councilor) மீண்டும் போட்டியிடும் ஜிம் ஜோன்ஸ் அவர்கள் இந்த நகரசபை எல்லைக்குள் தனது கடந்த சேவைக் காலங்களில் நல்ல போக்குவரத்து, மற்றும் மார்க்கம் நகரத்தில் அமைய உள்ள யோர்க் பல்கலைக்கழகம், விளையாட்டு மையம், சமூக மையங்கள், நிலையான வளர்ச்சி ஆகியவற்றிற்காக கடுமையாக உழைத்து வருகின்றார். தொடர்ந்தும் அவர்கள் உழைப்பதற்கு தயாராக உள்ளார். ஜிம் ஜோன்ஸ் அவர்கள் ஒரு அனுபவமிக்க அரசியல்வாதி ஆவார், மேலும் தற்போது ஒன்றாரியோ மாகாண அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுரங்கப்பாதையை வடக்கு நோக்கி விஸ்த்தரிக்கும் திட்டத்தைத் தொடங்கியவரும் இவரே.

மேலும், தமிழ் இனப்படுகொலையின் காரணத்தால் தங்கள் உயிர்களை இழந்த தமிழ் மக்களை ஞாபகப்படுத்தும் வகையில் நினைவுச் சின்னம் ஒன்றை அமைப்பதற்க்காக போராடியதன் காரணமாக கனடா வாழ் தமிழ் சமூகத்தால் நன்கு அறியப்பட்டவர்.

நமது குழந்தைகள் சிறந்த வாழ்க்கை மற்றும் கல்வியைப் பெற அயராது உழைக்கும் கடின உழைப்பாளியான ஜிம் ஜோன்ஸ் அவர்கள் தற்போதைய பிராந்திய கவுன்சிலர்களில் சிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்குத. ஜிம் ஒரு நியாயமான அங்கத்தவர்கள் கொண்ட மாநகர சபையை விரும்புகிறார், மேலும் மார்க்கம் நகர சபையிலும் பிராந்தியத்திலும் உங்களை பிரதிநிதித்துவப்படுத்த ஜிம் ஜோன்ஸ் அவர்களுக்கு வாக்களிக்க உங்களுக்கு வாய்ப்பு கிட்டி உள்ளது.

நீங்கள் வாக்களிக்கக்கூடிய 4 பிராந்திய கவுன்சிலர்கள் உள்ளனர், எனவே தயவு செய்து நல்லதோர் வேட்பாளரான ஜிம் ஜோன்ஸ் அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.

**அவரது தொலைபேசி இலக்கம்: (416) 725-5930**



**RE-ELECT**

**JIM JONES: MARKHAM REGIONAL COUNCILLOR**

jimjones | @jimjones2022 | www.jimjones.ca







## மார்க்கம் நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்படக் கூடிய நல்ல வேட்பாளரான தீபக் தல்ரேஜா (Deepak Talreja- Ward-8) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்



தீபக் தல்ரேஜா அவர்கள் சிறுவயதிலிருந்தே ஒரு விளையாட்டு வீரனாகத் திகழ்கின்றார். விளையாட்டு அனைவரையும் ஒன்றிணைக்கிறது மற்றும் வேறுபாடுகளைக் குறைக்க உதவுகிறது, நம்மைச் சுற்றியுள்ள பலரின் வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கிறது. மிக முக்கியமான விடயம், விளையாட்டு வீரர்கள் மற்றவர்களை கைவிட மாட்டார்கள். ஒரு சிறந்த தடகள வீரராக, பல்வேறு விளையாட்டுகளில் பல பதக்கங்கள் மற்றும் உலகக் கோப்பைகளில் வெற்றி பெற்றுள்ள இவர் ஒரு மனித நேயமிக்க ஒருவர்.

சிட்னி நோவா ஸ்கோசியாவில் சிட்னி நகரில் உள்ள கேப் பிரெட்டன் பல்கலைக்கழகத்திற்கான மாணவர் சங்க சர்வதேச மாணவர் ஆலோசகராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் எமது வேட்பாளர் தீபக் தல்ரேஜா அவர்கள். அத்துடன் அவர் பல்வேறு இலாப நோக்கற்ற மற்றும் தன்னார்வ நிறுவனங்களில் தலைமைப் பாத்திரங்களில் பணியாற்றி வருகின்றார்.

மேலும், தீபக் தல்ரேஜா அவர்கள கடந்த பத்து ஆண்டுகளாக யோர்க் பிராந்திய காவல்துறையில் ஒரு சிறப்பு நிகழ்வுகள் மற்றும் சின்னமாக தன்னார்வத் தொண்டு செய்து வருகின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்குத.

**நல்ல வேட்பாளரான தீபக் தல்ரேஜா (Deepak Talreja- Ward-8 Markham Council) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்**

அவரது தொலைபேசி இலக்கம்: **(416) 452-0206**

REGISTER TO CONFIRM YOUR VOTER IDENTIFICATION NUMBER :
1.) Confirm the accuracy of the information.
2.) Update your residence address information.
3.) Add your name to the Municipal Voters List.



# மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

# சரஸ்வதிபூஜை ஆரம்பம்

80(E), Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario
(416) 436-9647



25-09-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று
அமாவாசை காலை 9:00 மணி தொடக்கம்
சிறப்பு பூஜையுடன் மகேஸ்வரபூசையும் நடைபெறும்.
அன்றுடன் மஹாளய பட்ஷமும் முடிவடைகின்றது.

26-09-2022 திங்கட்கிமை அன்று
மாலை 5:00 தொடக்கம் துர்க்கை பூஜை ஆரம்பம்.

27-09-2022 செவ்வாய்கிழமை
மாலை அகண்டம் ஏற்றப்பட்டு,
01-10-2022 சன்க்கிழமை
மாலை அகண்டம் இறக்கப்படும்.
04-10.2022 செவ்வாய் காலை
விஜயதசமியுடன் முடிவடைகின்றது.





9 நாட்களும் நடனம், இசைநிகழ்ச்சி, சொற்பொழிவு,
பஜனை நிகழ்ச்சிகள் நடைபெற்று தொடர்ந்து சிறப்பு
பூஜையும் நடைபெறும்.
அனைத்து சக்திகளும் அன்னையின்
அருளைப்பெற்றுய்யுமாறும் வேண்டப்படுகின்றது.
அத்துடன் தேசிக்காய், வேப்பிலை, பூக்கள்
அன்புடன் அன்னைக்கு சமர்ப்பிக்கலாம்.
வேண்டுவோர்க்கு வேண்டியதைக் கொடுக்கும்
கருணை உள்ளம் கொண்ட அன்னை ஆதிபராசக்தி
அருள் என்றும் கிடைக்க வேண்டிக்கொள்வோம்.



Tasty தமிழா ™

# தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...



பனை வெல்லம்



தேன் நெல்லி

மரச்செக்கு எண்ணெய்கள்



சுக்கு மல்லி காபி தூள்

யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

**Tasty** தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

*MAHAANS PICK & PRESS OIL MILL INC*
*Organic Bulk Store & Water Filling Station*
*5635 Finch Ave East,*
*Unit 5, Scarborough M1B 5K9.*

Call: 416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC

# Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# அம்பலப்படுத்திய பண்டோரா ஆவணங்கள்: இலங்கையில் நடந்தது என்ன?

சிவா பரமேஸ்வரன் - மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்




அண்மைக் காலத்தில் உலகளவில் நடைபெற்ற ஊழல்களை வெளிக்கொண்டு வந்ததில் பனாமா பேப்பர்ஸ் மற்றும் பண்டோரா பேப்பர்ஸ் ஆகியவை முக்கியமானவை. சர்வதேச புலனாய்வு செய்தியாளர்கள் கூட்டமைப்பால் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் மூலம் பல நாடுகளில் அரசியல்வாதிகள், ஆட்சியில் இருப்பவர்கள், அவர்களின் உறவினர்கள், தொழிலதிபர்கள், குற்றக்குழுக்கள் போன்ற பல்தரப்பினர் எப்படி அரச பணத்தை கையாடல் செய்து, அதை பல நாடுகளில் முதலீடு செய்து அதன் மூலம் ஆதாயம் அடைந்து வருகின்றனர் என்று அம்பலப்படுத்தியது.

அப்படி நாட்டு மக்களை ஏமாற்றி, வரி ஏய்ப்புச் செய்து, கையூட்டின் மூலம் பல்லாயிரம் மில்லியன் டாலர்களை கள்ளமாக பதுக்கி வைத்து வேறு வழியில் முதலீடு செய்வதற்காக சட்டரீதியாக வழிகளைக் கொண்டுள்ள கரீபியன் தீவு நாடுகள், மொரிஷியஸ், ஐக்கிய அரபு அமீரகம், மால்டா, மொனாக்கோ போன்ற பல்வேறு நாடுகளில் பல வழிகளில் முதலீடு செய்யப்படுவதை ஐ சி ஐ ஜே (சர்வதேச புலன் விசாரணை செய்தியாளர் கூட்டமைப்பு) அம்பலப்படுத்தியுள்ளது. நாட்டு மக்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட அந்த பணம் மாட மாளிகைகள், சொகுசு படகுகள், தனி விமானங்கள், உல்லாச விடுதிகள், மிகவும் விலையுயர்ந்த ஓவியங்கள் உட்பட கலைப்பொருட்கள், தங்கக் கட்டிகள், பெரும் மதிப்பு வாய்ந்த ரத்தினக் கற்கள் போன்றவைகளில் முதலீடு செய்யப்படுகிறது.

பண்டோரா பேப்பர்ஸ் மூலம் வெளியாகியுள்ள நிதி மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளின் அண்மைய நிலவரத்தை கேட்டு, வெளிப்படைத்தன்மைக்காக சர்வதேச அமைப்பு (Transparency International) அந்தந்த நாடுகளிலுள்ள இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை ஆணைக்குழுவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அவ்வகையில் பண்டோரா ஆவணங்களில் அம்பலப்படுத்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் அத்துடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான நடவடிக்கைகள் குறித்து அந்த அமைப்பு இலங்கை அரசுக்கும் எழுதி விளக்கம் கேட்டது.

"பண்டோரா ஆவணங்கள் வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா, முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ச, அவரது கணவர் மற்றும் முன்னாள் அரச அதிகாரி ஆர். பாஸ்கரலிங்கம் ஆகியோரின் சொத்துக்கள் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் 2 முறைப்பாடுகளை அண்மையில் தாக்கல் செய்தது". மேலும் குறித்த நபர்களின் சொத்துப் பிரகடனங்களை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அழைத்துப் பரிசோதித்திருந்தால் அது தொடர்பில் அறிவிக்குமாறு ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா சமீபத்திய கடிதத்தில் கோரியுள்ளது.

சொத்துக்கள் வேண்டுமென்றே குறிப்பிடப்படவில்லையா என்பதைப் புரிந்துகொள்வதற்கு இந்தத் தகவல் இன்றியமையாதது என டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா மேலும் கூறுகிறது.

ஆனால் இலங்கை அரச தரப்பு இதுவரை அந்த கேள்விக்கு பதிலளித்ததாகத் தெரியவில்லை. பொதுவெளியில் இருக்கும் ஒரு விடயம் தொடர்பில் கேட்கப்படும் ஒரு கேள்விக்கு பதிலளிக்காமல் இருப்பது குறிப்பிட்ட ஊழல் இடம்பெற்றுள்ளது என்பதற்கு சான்றாகவே உள்ளது என்பதாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

### ஆணைக்குழுவின் தோல்வி

கடந்த வருடம், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் உறவினர் மற்றும் அவரது கணவர் மீதான நிதி மோசடி குற்றச்சாட்டுகளை விசாரித்து ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோட்டாபய ராஜபக்சவின் பணிப்புரையை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நிறைவேற்றவில்லை.

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமரின் உறவினருமான நிருபமா ராஜபக்சவும் அவரது கணவர் திருக்குமார் நடேசனும் போலி நிறுவனம் ஒன்றின் மூலம் குவிக்கப்பட்ட சொத்துக்களை மிக ஆடம்பரமான வாழ்க்கை வாழவும், வெளிநாடுகளில் முதலீடு செய்யவும் பயன்படுத்தினர் என்று பண்டோரா பேப்பர்ஸில் வெளிப்படுத்தியுள்ளனர். இதையடுத்து விசாரணை நடத்தப்பட்டதோடு, ஒரு மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் சட்டப் பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்த ரோஹணதீர 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளதாக அப்போது ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அந்த அறிவித்தலுக்குப் பின்னர் திருக்குமார் நடேசன் இரண்டு முறையாவது ஆணைக்குழு முன் அழைக்கப்பட்டார். ஜனாதிபதியின் உத்தரவுக்கு ஒரு மாதத்தின் பின்னர், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ. கே.டி. விஜேரத்ன நவம்பர் 8, 2021 அன்று அறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தார்.

பின்னர், இது தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்திருந்தது. இறுதி அறிக்கைக்கான திகதியை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இன்னும் அறிவிக்கவில்லை என்றும் அப்போது குறிப்பிடப்பட்டது.

"திருக்குமார் நடேசனின் வங்கிக் கணக்கு விபரங்கள் அடங்கிய அறிக்கைகள் பல்வேறு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு அறிக்கைகள் தற்போது கிடைத்து வருவதாக இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்திருந்தார். விசாரணைகள் நிறைவடையாததால், அறிக்கைகள் மற்றும் ஏனைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு இறுதி அறிக்கை வழங்கப்படும் என அப்போது மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நவம்பர் 2021 ஆரம்பத்தில் விசாரணைகள் ஆரம்ப கட்டத்தில் இருப்பதாக ஆணைக்குழுவின் செயலாளர் அப்சரா கல்தேரா ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

பண்டோரா பேப்பர்ஸ் என அழைக்கப்படும் சுமார் ஒரு கோடியே 20 ஆயிரத்திற்கும் அதிக ஆவணங்களின் தரவுத்தளமானது வொஷிங்டனை தளமாகக் கொண்ட சர்வதேச புலனாய்வு பத்திரிகையாளர்களின் கூட்டமைப்பால் (International Consortium of Investigative Journalists) வெளியிடப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசகராக இருந்த பிரித்தானிய குடியிருப்பாளர் இராமலிங்கம் பாஸ்கரலிங்கம், நவம்பர் 2021 தொடக்கத்தில் ICIJ ஆல் நிதி மோசடி குற்றச்சாட்டுக்கு உள்ளானார்.



மாலபேயில் உள்ள HCBT எனப்படும் Horizon College of Business Technology தனியார் பல்கலைக்கழகத்தில் முதலீடு செய்வதற்கும் பிரிட்டனில் சொத்துக்களை வாங்குவதற்கும் அவர் பிரித்தானியாவின் விர்ஜின் தீவுகளில் அவர் நிறுவிய அறக்கட்டளைகள் மற்றும் நிறுவனங்களில் பில்லியன் கணக்கான டொலர்களைப் பயன்படுத்தியதாக பண்டோரா ஆவணங்கள் வெளிப்படுத்தின.

பாஸ்கரலிங்கம் 2008 ஆம் ஆண்டு எந்த அரசாங்க பதவியையும் வகிக்காமல், "தனது சொந்த செல்வத்தைப் பயன்படுத்தி" கல்லூரியை நிறுவியதாக, HCBT தலைவர் உபுல் தரனாகம ICIJ இடம் தெரிவித்தார்.

ராமலிங்கம் பாஸ்கரலிங்கம் மீதான நிதி மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளுக்கு அவர் எந்த பதிலும் அளிக்கவில்லை என ICIJ தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிகளான ரணசிங்க பிரேமதாச, டிங்கிரி பண்டா விஜேதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் ஆலோசகர் பதவிகளை வகித்த பாஸ்கரலிங்கம் தொடர்பில் பண்டோரா பத்திரிக்கைகளில் வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்வதாக தெரியவில்லை.

பண்டோரா பேப்பர்ஸ் ராஜபக்சக்களின் சகோதரி நிருபமா மற்றும் அவரது கணவர் மற்றும் பாஸ்கரலிங்கம் ஆகியோர் மீது ஆதாரத்துடன் குற்றஞ்சாட்டுக்களை ஐ சி ஐ ஜே சுமத்தியிருந்தது. ஆனால் அந்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வேண்டிய அரசு அதைப் புறந்துள்ளுவது மேலும் நிதி மோசடிகள் இடம்பெறவும், ஊழலை செய்துவிட்டு தப்பித்துக் கொள்ள முடியும் என்கிற எண்ணத் தோற்றத்தை ஏற்படுத்தும் என்று செயற்பாட்டாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.




117 நாடுகளைச் சேர்ந்த 600ற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் 90 அரச தலைவர்கள், உலகின் பணக்காரர்கள் மற்றும் அதிகாரப் படைத்தவர்கள் உட்பட 300ற்கும் மேற்பட்டவர்களின் நிதி பரிவர்த்தனைகளை ஆய்வு செய்துள்ளனர். நிருபமா ராஜபக்சவும் அவரது கணவர் திருக்குமார் நடேசனும் போலி நிறுவனம் ஒன்றின் மூலம் குவிக்கப்பட்ட செல்வத்தை மிகவும் ஆடம்பரமான வாழ்க்கைக்கு பயன்படுத்தியுள்ளமை அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பல நாடுகளில் மோசடி வழிகள் மூலம் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை நாட்டிற்கு மீண்டு கொண்டு வந்து அது பொதுமக்களிடம் சேர்த்து நாட்டை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டுமென்று பன்னாட்டு வல்லுநர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அவ்வகையில் இலங்கையிலிருந்து ஊழல் நடவடிக்கை மூலம் சேர்க்கப்பட்ட பெருந்தொகையான பணத்தை முறையான விசாரணைகள் மூலம் நாட்டுக்கு கொண்டுவர முடியுமானால், அது பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இலங்கைக்கு பேருதவியாக இருக்கும்.

ஆனால் அது செய்யப்படுமா என்பது தான் மிகப்பெரிய கேள்வி?

Sapphire Banquet & Catering
--------------------------
Specializing in Videography & Photography
- Anniversary Party
- Family Get-together
- Birthday Party
- Graduation Party
- Bridal Shower
- Religious Ceremonies
- Engagement Party
- Wedding Showers - and more...
SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# தமிழர் நிலங்கள் தொடர்ந்து பவுத்த – சிங்கள பேரினவாதிகளால் அபகரிக்கப்பட்டு வருகிறது

- கனடா நக்கீரன்

நாடு சுதந்திரம் பெற்ற 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை தள்ளப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் இப்போது தமது மண்ணையும் வழிபாட்டுத் தலங்களையும் காப்பாற்ற தெருவில் இறங்கி போராடத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

1948 ஆம் ஆண்டில் நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து காணாத மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும், தமிழர் நிலங்களைப் பறிக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. இலங்கையின் பணவீக்க விழுக்காடு ஓகஸ்ட் மாதத்தில் 70.2 விழுக்காடாக உயர்ந்தது என்று உத்தியோகபூர்வ தகவல்கள் வியாழக்கிழமை தெரிவிக்கப்பட்டன. பணவீக்கத்தின் காரணமாக, 2021 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது உணவு விலைகள் 84.6 விழுக்காடு அதிகரித்துள்ளன. பணவீக்கத்தால் பாதிக்கப்பட்ட உலக நாடுகளின் பட்டியலில் இலங்கை சிம்பாவே மற்றும் கியூபாவுக்கு அடுத்த இடத்தில் அதாவது மூன்றாவது இடத்தில் உள்ளது.

மண்ணெண்ணை விலை உயர்வாலும் அதற்கான தட்டுப்பாட்டு காரணமாகவும் சமூகத்தின் அடிமட்ட மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக வேளாண் மக்களும் மீனவர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். மூன்று நேரம் சாப்பிட்டவர்கள் இரண்டு நேரமும் இரண்டு நேரம் சாப்பிட்டவர்கள் ஒரு நேரமும் சாப்பிட்டு அரைப்பட்டினியோடு வாழ்கிறார்கள். தமிழ்மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் பசி, பட்டினியோடு வாழ்கிறார்கள்.

இனவாத, மொழிவாத மற்றும் மதவாதம் காரணமாகவே சிறிலங்கா ஒட்டாண்டி நாடாக மாறிவிட்டது. உலக நாடுகளிடம் பிச்சா பாத்திரம் ஏந்தி நிதியுதவி அளிக்குமாறு கெஞ்சி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் ஆட்சியாளர்கள் இனவாத, மதவாதத்தை பின்னுக்குத் தள்ளிவிட்டு சகல மக்களின் ஆதரவோடு நாட்டை மீள் கட்டியெழுப்ப அரசு பாடுபடும் என்றுதான் பலர் எதிர்பார்ப்பார்கள். ஆனால் இந்த நெருக்கடியிலும் அரசு இனமத வாதத்தைக் கையில் எடுத்துத்துள்ளது.

கடனில் மூழ்கி ஒட்டாண்டியாகப் போய்விட்ட நாட்டின் பொருளாதாரத்தை மீள் கட்டியெழுப்ப எல்லோரும் பாடுபட வேண்டும் என சிறிலங்கா அரசின் சனாதிபதி விக்கிரமசிங்க அழைப்பு விடுகிறார். புலம்பெயர்ந்த தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என கேட்கிறார்.



அதே நேரத்தில் அரசு தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வட கிழக்கில் உள்ள இந்து ஆலயங்களை சுற்றியுள்ள நிலங்களை ஆக்கிரமித்து வருகிறது. இந்தப் பணியில் பவுத்த குருமார்கள், சிங்கள - பவுத்த வெறியர்கள், இராணுவம், காவல்துறை, தொல்பொருள் திணைக்களம் மும்மரமாக ஈடுபட்டுவருகின்றன. புராதன பவுத்தமத எச்சங்கள் என அடையாளம் காணப்பட்ட நிலங்களை தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பல்வேறு இடங்கள் தொல் பொருள் திணைக்களத்தினால் தொல்லியல் கட்டளைச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் புராதனச்சின்னங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு கடந்த 2013 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16 ஆம் நாள் வெளியிடப்பட்டுள்ளது. அன்றைய தேசிய மரபுரிமைகள் அமைச்சராக இருந்த ஜகத்பாலசூரிய அவர்களின் உத்தரவுக்கமைய குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதில் தொல்பொருள் திணைக்களத்தினால் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேசங்கள் தொல்லியல் சின்னங்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. ஓகஸ்ட் 16, 2013 வெளிவந்த வர்தகமானி அறிவித்தலில் பின்வரும் இடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1) முத்துராசன் கட்டுக்குளம் எனும் இடத்தில் சிதைவடைந்த கட்டிடங்கள்,மதில் அதனை அண்மித்த தொல்லியல் சிதைவுகளும்.

2) கற்சிலைமடு கிராமத்தில் பேராறு கட்டிடதிதைவுகளும் கற்தூண்கள் உள்ள தொல்லியல் சிதைவுகள்.

3) கொட்டியாமலை கிராமத்தில் உள்ள கொடிகச்சி எனும் இடத்தில் உள்ள நீர்வடி வெட்டப்பட்ட குகைகளும் கோபுரமேடும் கட்டிடச் சிதைவுகள்.

4) ஒட்டுசுட்டானில் பண்டாரவன்னியன் கிராமத்தில் அமைந்துள்ள நிதன்பிடிய (புதையல்பிட்டி) தொல்லியல் சிதைவுகள்.

5) கனகரத்தினபுரம் கிராமத்தில் அமைந்துள்ள தொல்லியல் சிதைவுகள்.

6) முத்துராசன் கட்டுக் கிராமத்தில் அமைந்துள்ள பழமையான பேராறு அணைக்கட்டு.

7) மன்னாகண்ணார்(மன்னாகண்டல்) புராதன தொல்லியல் சிதைவுகள்.

8) கட்டுவான் கிராம அலுவலகர் பிரிவில் அமைந்துள்ள தொலிச்சமொட்டை கிராமத்தைச் சேர்ந்த புராதன கட்டிட சிதைவுகள்.

9) ஒட்டியமலை கிராமத்தைச் சேர்ந்த ஒட்டியமலை நீர்வடி வெட்டப்பட்ட குதைத்தொகுதியும் மற்றைய தொல்லியல் சிதைவுகள்.

10) முத்தையன்கட்டு கிராமத்தில் முத்தையன்கட்டு படைப்பயிற்சிப் பாடசாலை நிலத்தில் உள்ள புராதன தாதுகோபுரம், சிலை, மண்டபம், சிதைவடைந்த கட்டிடங்கள்.

11) முத்துராசன் கட்டு கிராமத்தில் அமைந்துள்ள முத்துராசன் கட்டு படைத்தள பயிற்சி பாடசாலையை அண்மித்ததுள்ள மிகப் பழைமையான கட்டிடச் சிதைவுகள்.

12) ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவில் பூமியில் உள்ள தொல்லியல் சிதைவுகள்.

13) கரைதுறைப்பற்று பிரதேசத்தில் செட்டிமலை (செம்மலை) கிழக்குபகுதியில் உள்ள தாதுகோபுர மேடுகளும் ஏனையதொல்லியல் சிதைவுகள்.

14) கரைதுறைப்பற்று பிரதேசத்தில் குமுழமுனை மத்தியில் குமுழமுனை தண்ணிமுறிப்புக் குளம் எனும் இடத்தில் உள்ள கோபுரமேடு, கற்தூண்கள் உள்ள தொல்லியல் சிதைவுகள்.

15) கரைத்துறைப்பற்று பிரதேசத்தில் குமாரபுரம் கிராமத்தில் குமாரபுரம் ஸ்ரீசித்திரவேலாயுதம் முருகன் கோவிலை அண்மித்துள்ள தொல்லியல் சிதைவுகள்.

16) கரைத்துறைப்பற்று பிரதேசத்தில் குமுழமுனை கிராமத்தில் குமுழமுனை பிள்ளையார் கோவிலை அண்மித்துள்ள தொல்லியல் சிதைவுகள்.

17) கரைத்துறைப்பற்று பிரதேசத்தில் தண்ணிமுறிப்புக் குளத்தின் பழைமையான மதகும் அதை அண்மித்த ஏனைய தொல்லியல் தடயங்கள்.

18) கரைத்துறைப்பற்று பிரதேசத்தில் ஆண்டான்குளம் எனும் இடத்தில் அமைந்துள்ள கோபுரமேடும் கட்டிடச்சிதைவுகள்.

19) கரைத்துறைப்பற்று பிரதேசத்தில் தட்டுவன்கொட்டி கிராமத்தில் அமைந்துள்ள கோபுரமேடும் பாதக்கற்கள் உள்ள தொல்லியல் சிதைவுகள்.

20) கரைத்துறைப்பற்று பிரதேசத்தில் கொக்கிளாய் கிராமத்தில் உள்ள வண்ணத்திக்குளம் தொல்லியல் சிதைவுகள்.

21) முல்லைத்தீவு பிரதேசத்தில் அமைந்துள்ள முல்லைத்தீவு பொதுச் சந்தை.

22) மாந்தை கிழக்கு பிரதேசத்தில் உள்ள பாலிநகர் கிராமத்தில் வவுனிக்குளம் சிவபுரம் ஸ்ரீமலை கோவில் பூமியில் உள்ள கற்தூண்கள் உள்ள தொல்லியல் சிதைவுகள்.

23) மாந்தை கிழக்கு பிரதேசத்தில் கிரிசுட்டான் பறங்கிஆறு கிராமத்தில் உள்ள சிதைவடைந்த தாது கோபரம், கட்டிட சிதைவுகள்.

24) மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பாலிநகர் கிராமத்தில் அமைந்துள்ள கொல்லவிளாங்குளம் கிராமத்தை சேர்ந்த நாகதம்பிரான் கோவில் அமைந்துள்ள பூமியில்உள்ள தாதுகோபுரமேடு சிதைவடைந்த கட்டிடமும் கற்தூண்களும் பாதக்கற்கள்.

25) மாந்தை கிழக்கு பிரதேசத்தில் சிராட்டிகுளம் கிராமத்தில் அமைந்துள்ள வெட்டுநீராவி தாது கோபுரமேடு.

26) மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மூன்று முறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள கொம்புஅச்சுக்குளம் கிராமத்தில் உள்ள கட்டிட சிதைவுகள்.

27) மாந்தை கிழக்கு பிரதேசத்தில் வன்னிவிளாங்குளம் கிராமத்தில் பெரியகுளம் கிராமத்தை சேர்ந்த பெரியகுளம் காட்டிற்குள் உள்ள தொல்லியல் சிதைவுகள்.

28) மாந்தை கிழக்கு பிரதேசத்தில் வன்னிவிளாங்குளம் கிராமத்தில் மிகப்பழைமையான செங்கல் மதிலும் அதன் தொல்லியல் சிதைவுகள்.

29) மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பூவரசங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள பூவரசங்குளம் பத்திரகாளி அம்மன் கோவிலில் உள்ள கல்வெட்டும் தொல்லியல் சிதைவுகள்.

30) மாந்தை கிழக்கு பிரதேசத்தில் பாண்டியன் குளம் கிராமத்தில் கருமபுள்ளியான் கிராமத்தை சேர்ந்த பாண்டியன் குளம் சிவன் கோவில் பூமியில் உள்ள கட்டிடச்சிதைவுகளும் அதனை அண்மித்த சகல தொல்லியல் தடையங்கள்.

31) மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விநாயகபுரம் கிராமத்தில் அமைந்துள்ள கோபுரமேடும் அதனை அண்மித்துள்ள கற்தரையில் உள்ள தூண்களில் துவாரங்கள் உள்ள இடமும்.

32) மாந்தை கிழக்கு பிரதேசத்தில் நட்டாங்கண்டல் கிராமத்தில் உள்ளமூன்று முறிப்பு செங்கல்பட்டு கிராமத்தில் உள்ள தாதுகோபுரமேடும் கட்டிடச் சிதைவுகள்.

33) துணுக்காய் பிரதேசத்தில் தென்னியன்குளம் கிராமத்தில் உள்ள வண்ணாரிக்குளம் கிராமத்தை சேர்ந்த வெல்லியாவில்லு தொல்லியல் சிதைவுகள்.

34) முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலாளர்பிரிவில் ஆலங்குளம் கிராம அலுவலகர் பிரிவில் அமைந்துள்ள புராதனதூபியும் கட்டிட சிதைவும்.

35) ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள அம்பகாமம் கிராமத்தில் இரணைமடு வட்டகாலிகுளம்,குளத்திற்கு கிழக்கே உள்ள சிதைவுகள் மேடும் அதனை அண்மித்த தொல்லியல் சிதைவுகள்.

மேலே அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் சில படையினரின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றதுடன் அங்கு புத்தர் சிலைகள் வைத்து பவுத்த வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே பாணியில் கிழக்கு மாகாணத்தில் குச்சவெளி, திரியாய், தென்னமரவடி, கிளிவெட்டி போன்ற இடங்களில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் புராதன பவுத்த தொல்லியல் சின்னங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவான நெடுங்கேணி, ஒலுமடு, பாலமோட்டை கிராமத்தில் இருந்து கிட்டத்தட்ட 3 கிமீ தொலைவில் உள்ள வெடுக்குநாறி மலை அமைந்துள்ளது. சுமார் 3000 ம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த மலையானது பல வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டு காணப்படுகின்றது. பண்டய காலத்தில் நாகர்கள் இங்கு வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன. முந்நூறு மீற்றர் உயரமான வெடுக்குநாறி மலை அடிவாரத்தின் கீழ் தமிழ்ப் பிராமிய கல்வெட்டுக்கள் மற்றும் வட்டெழுத்துக்கள் போன்றவற்றைக் காணமுடியும். மலையின் உச்சியில் ஆதிலிங்கேஸ்வரர் எனும் சிவனுடைய இலிங்கம் அமைந்துள்ளது. இந்தக் கோயில் உள்ள பிரதேசம் புராதன பவுத்த தொல்லியல் சின்னங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் போயில் போலவே கடந்த ஆண்டு முல்லைத்தீவு குருந்தூர்மலை ஆதி ஐயனார் ஆலயத்தில் சூலம் வைத்து வழிபாடு செய்த இடம் திடீரென்று சிறிலங்கா இராணுவத்தின் உதவியுடன் அகற்றப்பட்டு அந்த இடத்தில் வெளியில் இருந்து கொண்டு வரப்பட்ட புத்தரின் சிலை வைக்கப்பட்டது. பின்னர் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் வழிபாடு நடத்தப்பட்டு தொல்லியல் ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்போது அங்கே பாரிய விகாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது. நீதிமன்றம் விகாரை கட்டும் பணியை நிறுத்தச் சொல்லியும் அதனை மீறி அங்கே விகாரை கட்டி முடிக்கப்பப்பட்டு பவுத்த பூசைகள் நடந்துள்ளன.

இதற்கும் மேலாக விகாரையைச் சுற்றியுள்ள 632 ஏக்கர் வயல் நிலங்களைக் கையகப்படுத்த தொல்பொருள் திணைக்களம் படாதபாடு பட்டு வருகிறது. குருந்தூரில் இடம்பெற்றுள்ள நில ஆக்கிரமிப்புக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். நேற்றைய நாள் (செப்தெம்பர் 22) மக்கள்போராட்டத்தை ஏற்பாடு செய்த இரத்தினராசா மயூரன் மற்றும் துரைராசா இரவிகரன் ஆகியோர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களும் எதிர்ப்புப் போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள்.



ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தர் நாயனரால் பாடல்பெற்ற திருக்கோணேசுவரர் ஆலயத்தை சுற்றியுள்ள 340 ஏக்கர் நிலம் 1970, 1980 களிலே 340 ஏக்கர் தொல்பொருள் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டது. அதிலே 18 ஏக்கர் காணிகள் திருக்கோணேசுவரர் ஆலயத்துக்கு ஒதுக்கப்பட்டன. ஆனால் இன்று தொல்லியல் திணைக்களம் சிங்களவர்களுக்கு 68 கடைகள் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது. ஏற்கனவே சிங்களவர்களது கடைகள் நடைபெற்று வருகின்றன. அந்தக் கடைகள் திருகோணமலை நகரசபையின் கட்டுப்பாட்டில் இல்லை.

ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லை. தமிழர் நிலங்கள் தொடர்ந்து பவுத்த - சிங்கள பேரினவாதிகளால் அபகரிக்கப்பட்டு வருகிறது!




26

# வாழ்தல் இனிது

என் இதயமே, தொடரும் உன் கதைக்கு முடிவில்லைத்தானே. அதனால் இப்போதைக்குச் சுருக்கமாகச் சிலவற்றை நாங்கள் நினைவு படுத்துவது நல்லது. இதயமே, உனக்குப் பிரச்சினைகள் வரும்போது வெளிப்படும் அறிகுறிகள் பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தாலும் மீண்டும் இங்கு பட்டியல் இடுவது பயனுள்ளதாகும்.

1. நெஞ்சு வலி - (Chest Pain) (நடு நெஞ்சில் எரிவு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும்)
2. வியர்த்தல் - (Sweating)
3. மூச்சு திணறல் - (Shortness Of Breath)
4. வழமைக்கு மாறான தாளம் தப்பிய இதயத் துடிப்பு - (Abnormal And Irregular Rhythm)
5. களைப்பு - (Tiredness)
6. மயக்கம் - (Fainting)
7. உடம்பின் கழுத்து, தாடை, தோள்மூட்டு, வயிற்றின் மேல் பகுதி, தொண்டை போன்ற பாகங்களில் வலி (Pain In Neck, Jaw, Upper Abdomen, Throat...)
8. நெஞ்சில் இறுக்கம், நெஞ்சின் மேல் பாரம் வைத்து அழுத்துவது போல உணர்தல் - (Tightness And Feeling Pressure)
9. வாந்தி வருதல் - (Vomiting)
10. உடல் குளிர்ந்து போதல் - (Chilling)

நெஞ்சு வலியை உணர்ந்தால் - இவைபோன்று எந்த அறிகுறிகள் தென்பட்டாலும் 911 - அம்புலன்ஸை உடனும் அழைப்பதோடு முன் பாதுகாப்பாக அஸ்பிரின் (Asprin) எடுப்பதும், ஏற்கனவே இதயப் பிரச்சினைகள் இருந்து அதற்காக வழங்கப்பட்ட நாக்குக்கு கீழ் அடிக்கும் நைட்ரோக்ளிசரின் (Nitroglycerin Spray) இருந்தால் அதனை அடிப்பதும் நல்லது.

பின்வரும் அறிவுறுத்தல்கள் பொதுவாக எல்லோர்க்கும் நல்லது என்றாலும் என் இதயமே, உன்னைப்போல் தப்புத் தப்புத்தாளங்கள் போடும் (எறித்மியா) இதயங்களைக் கொண்டோர் சிறப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

படபடப்பும் பதட்டமும் கூடாது (Anxiety). அதேபோல அளவுக்கு மீறிய உற்சாகமும் (Excitement) நல்லதல்ல. இவர்கள் மன அழுத்தங்களுக்கு (Stress) உள்ளாகாமல் இருக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பங்களிலும் உணர்ச்சிக் கொந்தளிப்பில் (Nervousness) எழுந்து நின்று கூத்தாடக் கூடாது. பொதுவாக சில சூழ்நிலைகளில் நாங்கள் வைரவ சுவாமியாய், வீரபத்திர சுவாமியாய், ஆங்கார மாகாளியாய் உருத்திர தாண்டவம் ஆடுவதும் உண்டு.

ஆனால் என் இதயமே, அது நல்லதுக்கு அல்ல.

'ஆறுவது சினம்' என்னும் அவ்வையின் ஆத்திசூடி எப்போதும் மனப்பாடமாக இருக்க வேண்டும்.

*தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்*

இந்தக் குறள் எறித்மியாக்காரருக்கு மிகவும் உதவும். கோபத்தைக் குறைத்து எப்போதும் சாந்த சொரூபிகளாய் இருக்க வேண்டும்.

*'கவலைகள் இருக்கட்டும் மறந்துவிடு.*
*காரியம் நடக்கட்டும் துணிந்துவிடு'*

என்ற கண்ணதாசன் வரிகளையும் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

வில்லங்கம் தரும் விடயங்களையும் ஆட்களையும் விட்டு தூர விலகி இருக்க வேண்டும். எறித்மியா நோய் பல்வேறு காரணங்களால் வருகின்றது என்றாலும் தப்புத் தாளங்களை (Pulpitation) அதிகரிக்கும் அகநிலைகளிலிருந்து விடுபடுவது நல்லது என்பதுவே இதன் சாரம்.

என்னைப் பொறுத்தவரையில் எறித்மியா (Arrhythmia) வருவதற்கான காரணங்கள் பலவாக இருந்தாலும் கூட இதயக் குழாயின் அடைப்பும் (Blockage Of Coronory Artery) அதனால் இதயம் ஒழுங்காக இயங்க முடியாமல் போனதன் விளைவுகளுக்கும் முக்கியமான பங்குண்டு. எது எவ்வாறாயினும் இத்தகைய அபாய நிலைமை கண்டறியப்பட்டது எனது அதிர்ஷ்டம் ஆகும். இதனால் மீண்டும் ஒரு மாரடைப்பு தவிர்க்கப்பட்டது.

இதுவரை நடந்தேறிய பல்வேறு சம்பவங்களையும் தொகுத்து நோக்கும் போது எனது அனைத்துப் பிரச்சினைகளுக்குமான மூலம் புரிகிறது.

இதயமே, ஒரே கதை வேறு வேறு சந்தர்ப்பங்களில் வேறு வேறு விதமான தாக்கங்களில் எப்படியெல்லாம் நிகழ்ந்தன என்பதுவே இங்கு இத்தொடரில் இதுவரை சொல்லப்பட்டன.

இதயமே, எல்லா சந்தர்ப்பங்களிலும் 1991 இல் இருந்து இற்றை வரை மாறி மாறி 12 தடவைகள் வந்த உயிராபத்தான பிரச்சினைகள் அனைத்துக்குமான ஆரம்பப் புள்ளி ஒன்றேதான்.

1991 இல் தாயகத்தில் ஏற்பட்ட மாரடைப்பு தான் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான மூலம். அந்த மாரடைப்பால் எனது இதயத்தின் இயங்குதிறன் (functional ability) 20 - 30 வீதம் குறைவடைந்திருந்த போதும் அதற்குப் பின்னால் நான் எவ்வளவு உயிராபத்தான கட்டங்களை எல்லாம் தாண்டி இன்றுவரை பிழைத்துக் கொண்டேன் என்பதை நினைத்த போதும் பிரமிப்பாக இருந்தது.

இதயமே, உனது பெரிய பிரச்சினை கட்டுக்கடங்கா வேகம் (Raising Heartbeat) தாளம் தப்பிய தாளம். (Irregular Rhythm) குருதிச் சுற்றோட்டம் ஒழுங்காக நடைபெறாமல் பாதிப்படையச் செய்தல்.

இத்தகைய குழப்பம் ஏற்படும்போது மூளை உட்பட உடல் அவயவங்கள் பிராண வாயு உட்பட சுத்திகரிக்கப்பட்ட புதிய இரத்தத்தை பெற முடியாமல் போதல். இதே பிரச்சினைதான் எனக்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நடந்தேறின.

சத்திர சிகிச்சையின் (Angioplasty Procedure) பின்னர் அடைப்புக்கள் எடுக்கப்பட்டு ஸ்டென்ட் (Stent) வைக்கப்பட்டதால் இதயமே, நீ இன்னும் கொஞ்சக் காலம் என்னோடு இணங்கி இருப்பாய் என்ற நம்பிக்கையோடு நான் மீண்டும் மிடுக்குடன் இயங்கி வந்தேன்.

ஆனாலும் என் பிரச்சினைகள் முற்றாக முடியவில்லை என்பதை அண்மையில் பாதித்த தப்புத் தாளங்கள் உறுதிப்படுத்தின. இதயமே, உன்னை பற்றிப்பிடித்த இந்த எறித்மியா (Arrhythmia) என்பது நீ நெருப்புத் தணல்களை கட்டிக்கொண்டிருப்பது போலத்தான். அவை சுவாலைவிட்டு எரிய முற்படும் போதெல்லாம் நீறூற்றி அணைக்கும் தோழனாக உன்னோடு ICD இருக்கின்றான். இதுவே எனக்குள்ள ஆறுதல். இதுபோன்ற மருத்துவ அறிவியலை நாம் போற்றுவோம். புதிதாகப் பொருத்தப்பட்ட ICD தோழன் இனிமேல் உன்னை கண்ணும் கருத்துமாய்க் காப்பான் என்று நம்புவோம்.

ஒவ்வொருவரும் எங்கள் சொந்த உடல்மொழியை புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக இதயம் சொல்லுவதை அறிவு கேட்க வேண்டும். சிறிதும் உதாசீனப்படுத்துதல் ஆகாது. தாமதப்படுத்துதலும் பேராபத்தை விளைவிக்கும். இவை நான் கற்றுக் கொண்ட பாடங்களாகும்.

எனது பாடங்கள் பிறருக்கு எச்சரிக்கையாக இருந்து அவர்களுக்கு பிரச்சினைகள் வராமல் தவிர்க்க வேண்டும் என்பதுவே எனது எழுத்தின் நோக்கம்.

*காற்றினால் உலைக்கப்பட்டு கழுத்தினைக் குவிந்து சாம்ப*
*நேற்றைய மழைக்கு வந்த நெடும்புல்லோ நாங்கள்*
*வேருக்குள் உறுதி கொண்ட வேம்புகள் மனிதர்கள்*

எனும் மஹாகவியின் கவிதை அடியை மீள மீள நினைப்போம்.

'மருந்து கால் மதி முக்கால்' என்ற பழமொழியின் அர்த்தத்தையும் புரிந்து கொள்ளுவோம். எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் நம்பிக்கையை இழக்கோம். மலையைப்போல நிமிர்ந்து நிற்போம். ஆற்றைப்போல கடந்து செல்வோம். வாழ்தல் இனிது. நலமாய் நீள வாழ்தல் இனிது.

ஆத்மார்த்தமான நண்பர்களினதும் உறவுகளினதும் வாழ்த்துக்கள், பிரார்த்தனைகள் 'வாழ்தல் இனிது' எனும் மந்திரத்தோடு என்னை இன்னும் நீடித்து இயங்க வைக்கும் என்று ஆழ்ந்து நம்புகிறேன்.

இதுவரை இத் தொடரை வாசித்து என் இதயத்தோடு நெருங்கி உறவாடிய அன்பர்கள் அனைவருக்கும் நன்றி.

உயிர் போய் வந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் என்னை உயிர்ப்பிக்க துணை நின்ற எந்தன் துணையாளுக்கும், அக்கறையுடன் உடனிருந்து மருத்துவராயும் மகளாயும் கவனித்த சங்கீதா, மகன் கீர்த்தனன், மருமகன் செந்தூரன், மருமகள் சரோன் ஆகியோருக்கும், 'அம்மப்பா சுகமாகி வருவார்' என்று அம்புலன்சில் நான் நோயாளியாகப் பயணமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மிகுந்த ஏக்கத்துடன் வழியனுப்பி வைத்து மீண்டும் சுகமாகி வருவதில் ஆனந்தித்த என் மூன்று பேரக் குழந்தைகள் ஆறு வயது இசையினி, நாலு வயது நயனி, ஒன்றரை வயது அபிநயா, என்னுடன் மகிழ்விக்கும் ஏதுமறியா ஒருமாதப் பேத்தி நேஹா ஆகியோருக்கும் நன்றி.



அனைத்துக்கும் மேல் இலவச மருத்துவ வசதிகளை எமக்குத் தந்து கொண்டிருக்கும் கனடிய தேசத்துக்கும் - அரசுக்கும், அர்ப்பணிப்போடு கடமையாற்றி எங்களைப் போன்றோருக்கு மீண்டும் உயிர் வழங்கும் மருத்துவர்கள், தாதியினர், அம்புலன்ஸ் பணியாளர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது இதயபூர்வமான நன்றி.



அறிவியலால் மானுடர்க்கு வாழ்வு நீளும்.

நிறைவு.

---





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1015



## உடப்பு காளியம்மன் கோவில் புத்தளம்

அகில உலகிற்கும் தாயாக அம்பிகை போற்றப்படுகின்றாள். இக்காரணத்தினாலேயே அகிலலோக ஜனனி என்ற திருநாமம் அவளுக்குண்டு. அனைத்து உயிர்களையும் தோற்றுவித்து, பேணிக் காத்து வருதல் தாய்மையின் சிறப்பாக விளங்குகின்றது. மனித இனம்போல பறவைகளும், விலங்குகளும் பெற்றெடுத்தவற்றைக் கண்ணும் கருத்தமாகப் பேணி வளர்க்கின்றன. இவற்றிலிருந்து தாய்மையின் சிறப்பை அறியலாம். தாயைத் தெய்வமாகப் போற்றும் மரபு ஆதிகாலத்தில் இருந்தே பேணப்பட்டுள்ளது.

உலகிலே தெய்வ வழிபாடு தாய் வழிபாட்டிலிருந்தே ஆரம்பமாகின்றது. தாயாக விளங்கும் பராசக்தியே பல்வேறு நிலைகளில் உயிர்களைக் காத்து வருதல் கண்கூடு. பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து, யாவற்றிலும் வியாபித்து அணுவுக்கு அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய் ஓர்உருவம், ஒரு நாமமின்ற அருளாட்சி புரிகின்றான் இறைவன். இறைவனை சிவம் என்று மங்கலகரமாகப் பெயரிட்டு அழைப்பது சைவ வமரபு. நெருப்பிலே சூடு போல சிவத்துடன் இரண்டறக் கலந்தவளாகச் சக்தி காணப்படுகின்றாள்.

அன்பாயும் சிவமாயும், அருளாயும், பொலிவாயும், துன்பத்தில் இன்பமாகவும், வறுமையில் செழிப்பாகவும், பேதமையில் பேரறிவாகவும் எல்லா உயிர்களிடத்தும் கருணை கொண்டவளாக அன்னை பராசக்தி விளங்குகின்றாள். தனது காட்சியாலும், உணர்வாலும், திருவருட்பொலிவாலும், பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்தவளாக காட்சியளிப்பவள் அன்னை பராசக்தி. எதிலும் உயிர்கொடுத்து இயக்கும் சக்தியை இந்துக்கள் பராசக்தி எனப் போற்றுகின்றனர்.

உலகிலே அறிவியல் ரீதியாக சடப்பொருள், சக்திப்பொருள் என இருபொருள்கள் காணப்படுகின்றன. சடமும், சக்தியும் இணைந்து செயற்படும்போது செயலும், இயக்கமும் ஏற்படுகின்றது. இக்காரணத்தினாலேயே சிவமின்றிச் சக்தியில்லை, சக்தியின்றிச் சிவமில்லை என்ற கருத்து இந்துக்களிடையே காணப்படுகின்றது. சக்தி வழிபாடு தெய்வ வழிபாட்டிலேயே தொன்மையானது. சிந்துவெளி நாகரிகத்திலே தாய்த்தெய்வ வழிபாட்டின் எச்சங்களைக் காணலாம். வேதகாலத்திலும் சக்தி வழிபாடு காணப்பட்டுள்ளது. மகாபாரதம் மற்றும் புராணங்களிலும் சக்திவழிபாட்டின் சிறப்பை அறியலாம்.

இவ்வாறான சக்தி வழிபாட்டிலே காளியை தெய்வமாக வணங்கும் மரபு, இந்தியாவிலும், இலங்கையிலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் காணப்படுகின்றது. பராசக்தி காலத்தின் தேவையை உணர்ந்து பல்வேறு நிலைகளிலே பல்வேறு வடிவங்களைத் தாங்கி அருள்புரிகின்றாள். இவ்வாறான மகாசக்தியின் பல்வேறு வடிவங்களுள் காளி வடிவமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆதிபராசக்தியின் அம்சமான காளி, தர்மத்தை நிலைநிறுத்தி அதர்மங்களை அழிக்கும் வீரசக்தியாக விளங்குகின்றாள். இவளை என்றும் அழிவில்லாத நித்திய கன்னியாகப் போற்றித் துதிப்பர். சங்க காலத்திலே காளியை "காடு கிழாள்" என்று வர்ணித்துப் போற்றியுள்ளனர்.

ஈழத்தின் பல பாகங்களிலும் காளி வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. இவ்வழிபாடு புத்தளம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் புத்தளம் மாவட்டம், சைவமக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டு விளங்கியுள்ளது. அத்தோடு அமன் வழிபாட்டிற்கும் இப்பிரதேசம் புகழ் பெற்றுக் காணப்பட்டுள்ளது. புத்தளம் மாவட்டத்திலுள்ள உடப்பு கிராமத்தில் மாரியம்மன், காளி அம்மன், திரௌபதை அம்மன், இராக்குரிச்சிஅம்மன் போன்ற தெய்வங்களை வழிபடும் வழக்கு, பெரு வழக்காகக் காணப்படுகின்றது. உடப்புப் பிரதேசத்திலே வாழும் ஒவ்வொரு குலத்தவரும் தமது குலதெய்வமாக ஒவ்வொரு தெய்வத்தைப் போற்றி வணங்குகின்றார்கள்.

உடப்பு காளி கோவில், இப்பிரதேசத்திலே பிரசித்தி பெற்ற கோவிலாகக் காணப்படுகின்றது. செம்பலிங்க உடையார் என்பவர் உடப்புப் பிரதேசக் கோவில்களைப் பற்றித் தனது குறிப்புக்களிலே குறிப்பிட்டுள்ளார். இவரது குறிப்பிலே "உடப்பு காளி கோவில் கி.பி 1853 ஆம் ஆண்டு கொத்தக் கிழவனா-ரால், பேதி வியாதி வராதபடி சாமி வந்து கடல் தண்ணீர் ஊற்றி விளக்கு ஏற்றி கடல் தண்ணீர் மண் குடத்துக்கு வேப்பிலை ... உடனே காச்சி பூத்து ஒரு ... அதிலிருந்த நன்மை செய்து" என்று குறிப்பிட்டுள்ளார். இவரது குறிப்புக்கள் பல இடங்களிலே தெளிவற்றுக் காணப்படுகின்றது.

இவரது குறிப்புக்களிலே உள்ள விடயங்கள் அழிந்து காணப்படுகின்றமையால், இக்கோவில் தொடர்பான பல விடயங்களை அறிய முடியாதுள்ளது. ஆயினும் இவரது குறிப்பின் அடிப்படையில் நோக்கும்போது, ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இவ்வாலயம் வழிபாட்டிடமாகக் காணப்பட்டுள்ளது. வாந்திபேதி மற்றும் கொள்ளைநோய் போன்றவை மக்களைத் தாக்கும் காலங்களில் இவ்வாறான தெய்வங்களை வேண்டி, வழிபாடு செய்து நிவர்த்தி பெறும் முறையிலும் பல அம்மன் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0% வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உனது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077



ALL DEBT SOLUTIONS CR PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577
4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


# இவ்வார ராசிபலன்

## 23-09-2022 வெள்ளி தொடக்கம் 29-09-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** கௌரவம் கூடும் வாரம். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். வாகனத்தில் செலவு ஏற்படும். குடும்பச் சுமைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. நட்பு வட்டம் விரிவடையும். ஆபரணப் பொருள் களவு போகும். அனுகூலச் செய்தி வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல் நலம் சீராகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிடைக்கும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் அன்பு அதிகரிக்கும். திருப்பு முனை ஏற்படும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தாய்வழி ஆதரவு பெருகும். பிள்ளையால் பெருமை சேரும். சச்சரவுகள் அகலும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். வெற்றியும், வெகுமதியும் கூடும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உற்சாகம் மேலோங்கும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வழக்குகள் சாதகமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 9,8,5,4
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,K





**ரிஷபம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். கனிவான பேச்சு ஆறுதல் தரும். கலைகளில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. காரிய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். விறுவிறுப்பான காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்குப் பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். செல்வாக்கு பெருகும். வாயில் தேடி வரன் வரும். ஆசைகள் நிறைவேறும். மங்கள நிகழ்ச்சி நடைபெறும். பிரச்சனைகள் அகலும். செயல்பாட்டில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். வரவு திருப்தி தரும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். புண்ணியக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் பாசம் அதிகரிக்கும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: உச்சிகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,V




**மிதுனம்:** சுபிட்ஷங்கள் பெருகும் வாரம். காரியம் கைக்கூடும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். உறவினரால் உதவிகள் கிட்டும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும். வார்த்தையில் நிதானம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். பருப்பு தானம் பாவம் போக்கும். பொன்னான காலமாக அமையும். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கலை ஆர்வம் கூடும். தனவரவில் மேன்மை உண்டு. நிதி நிலைமை சீராகும். பணப்பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு அகலும். இனிப்பான செய்தி வரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உண்மைகள் வெளிப்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். தொழில் வழி தொல்லை குறையும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. ஆரோக்கியம் சீராகும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். நல்லோர் நட்பு கிட்டும். இயந்திர தொழிலில் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. இனிய எண்ணம் உருவாகும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,3,5
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,E




**கடகம்:** பொருள் வரவு திருப்தி தரும் வாரம். பெருமைகள் கூடும். காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். பெருமைகள் சேரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தடைகள் விலகும். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை காணப்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகன செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொல்லைகள் குறையும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். புகழ்ச்சி அதிகரிக்கும். உஷ்ணம் அதிகரிக்கும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. உலோகத்தொழில் உயர்வு தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். நிர்வாகச் செலவுகள், வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப் பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்துபோகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 7,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**சிம்மம்:** புதிய வாய்ப்புக்கள் தேடி வரும் வாரம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதாரம் மேன்மை தரும். குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். வாழ்வில் வளம் உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இலக்கிய ஆர்வம் கூடும். காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். அரசியல் ஆதாயம் தரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தடைகள் விலகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வறுமைகள் அகலும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். உழைப்பில் கவனம் தேவை. மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. முகப்பொலிவு கூடும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நீதி தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**கன்னி:** எதிரிகள் உதிரியாகும் வாரம். புதிய சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன் பிறப்புக்கள் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசு துறையில் ஆதாயம் உண்டு. தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேக பலம் கூடும். வேண்டாத விஷயங்கள் விலகும். உடல் நலம் சீராகும். புதிய கடன் வாங்க நேரிடும். மனக்குழப்பங்கள் தீரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிக்கை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,M




**துலாம்:** சாதனை படைக்கும் வாரம். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேச பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்துணர்ச்சியோடு செயல்படுவீர். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உடல் ஆரோக்கியம் சீராகும். செய்த்தொழில் லாபம் தரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். மெத்தனப் போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோதைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலை விலகும். பாராட்டுக்கள் கூடும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். திருமண வாய்ப்பு தேடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திருப்பு முனை ஏற்படும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,G




**விருச்சிகம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் வாரம். தங்க நகைகள் சேரும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும். வியாபார விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு உண்டு. கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோக பலம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பொறுப்புக்கள் கூடும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமானம் திருப்தி தரும். மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. புதிய முயற்சிகள் தள்ளிப்போடவும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். ஆனந்தம் குடிக்கொள்ளும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். உடல்நலம் மேம்படும். கணினித்துறையில் ஊதிய உயர்வு உண்டு. சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: சூர்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P

*(தொடர்ச்சி 25 பக்கம்)*

# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** கடன் சுமை குறையும். பெண்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் அபிவிருத்தி அடையும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிணி நீங்கும். திருப்தி ஏற்படும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். சகோதரியினால் நன்மை உண்டு. ஊக்கம் அதிகரிக்கும். கல்வி ஆர்வம் கூடும். திருமண வாய்ப்பு கூடி வரும். குதூகலம் தாண்டவமாகும். பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். காதல் எண்ணம் ஏற்படும். வழக்குகளில் செலவு ஏற்படும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். பொன்னான தருணம். வளமான வாழ்வு அமையும். உலோகத் தொழில் லாபம் தரும். தாய் நலனில் கவனம் தேவை. நிதிப் பற்றாக்குறை நீங்கும். வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். மனிதநேயம் மிகுதியாகும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். பதவி வாய்ப்பு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 4,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,J




**மகரம்:** பொன், பொருள் சேரும் வாரம். மருத்துவச் செலவு உண்டு. மங்களச் செய்தி வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தனவரவுகள் தடைப்படும். திடீர் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் இருக்க வேண்டும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். அன்றாட நாட்கள் மன மகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோ'ம் உண்டாகும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் கூடும். மனோ தைரியம் கூடும். மனதில் இருந்த தேவையில்லா பயங்கள் நீங்கும். இறை விழிப்புணர்வு கூடும். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்துக் கொள்வீர்கள். சமூக செயலில் ஈடுபடுவீர். புது தொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். குதூகலம் தாண்டவமாகும். நன்மைகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். நட்பு பெருகும். வராத கடன் வந்து சேரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். தொழிலில் மந்த நிலை காணப்படும். சந்தோஷம் அதிகமாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கும்பம்:** கலகலப்பான வாரம். வியாபாரம் விருத்தியாகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். மனவேதனை குறையும். உடல் ஆரோக்கியம் குறையும். வசதிகள் கூடும். லாபம் திருப்தி தரும். உறவால் பண விரயம் ஏற்படும். பொருளாதாரம் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகமாகும். நல்லவர் நட்பு கிட்டும். வசதிகள் கூடும். ஆடை, அணிகலன் சேரும். கடவுள் பிரார்த்தனை கைகொடுக்கும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்யம் சீராகும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். ஒற்றுமை அதிகரிக்கும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். முகப்பொலிவு கூடும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைபேசி தகவல் அலைச்சல் தரும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். புதுமையை விரும்புவீர்கள். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**மீனம்:** மங்களச் செய்தி வரும் வாரம். விருந்தினர் வருகை உண்டு. பொறாமைகள் விலகும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு உயரும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். பணவரவு அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் நன்மை தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவிகளுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். பேச்சில் பணிவு தேவை. தொழில் அபிவிருத்தி அடையும். பழையக்கடன் வசூலாகும். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. திடீர் பயணம் உற்சாகம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். வம்பு தும்புகள் ஒழியும். பாதிப்புக்கள் அகலும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். மகிழ்ச்சியான செய்தி வரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தன்னம்பிக்கை அதிகமாகும். புகழும், பொருளும் பெருகும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கை கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 4,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,C




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# நூலாசிரியர்களின் 'பணம் காய்க்கும் மரம்' பட்டுவிட்டது



நக்கீரன்

மலேசியாவின் பாரம்பரிய தலைநகரத்தில் நூல் வெளியீடு-நூல் அறிமுகம் உள்ளிட்ட தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கும் கலை-பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கும் "ஆஸ்தான அரங்க"மாகத் திகழ்வது துன் சம்பந்தன் மாளிகையின் அடித்தளத்தில் அமைந்துள்ள டான்ஸ்ரீ டத்தோ கே.ஆர்.சோமா அரங்கம்தான். இதை மறுப்பார் என எவரும் இருப்பார் என நினைக்கவில்லை.

அந்த அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் இலக்கிய மாலைப் பொழுதில் இலக்கிய இன்பம் நாட வந்தவர்கள் எல்லாம் பேரரங்கத்தில் அமர்ந்துவிட, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மட்டும் பரிதவிப்பு மேலிட சிற்றரங்க வாயிற்பகுதி-யில் காத்திருந்தனர்.



அது ஒரு நூல் வெளியீட்டு விழா. நூலாசிரியர் மட்டும் மகிழ்ச்சி ரேகையும் ஒருவித ஐய ரேகையும் கலந்து முகத்தில் இழையோடிய வண்ணம் வெளியில் வந்துவந்து எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தார். சிறப்புப் பிரமுகர்-நூல் வெளியீடு செய்பவர்-தலைமையுரை ஆற்றுபவர் என்றெல்லாம் முப்பரிமாணமிக்க ஒருவரை எதிர்பார்த்துதான் விழா நாயகனுமான அவர் காத்து நின்றார்.

நூல் வெளியீட்டு விழாக்களில் வழக்கமாக காணப்படும் இலக்கிய ஆர்வலர்கள், தமிழ்ப் பற்றாளர்கள், பத்திரிகை நண்பர்கள், மஇகா கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேச மாநில-தொகுதிப் பொறுப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் என அனைவரும் பலகாரங்களையும் சுவைநீரையும் சுவைத்த பின்னர் அரங்கத்தினுள் அமர்ந்துவிட்டனர்.

அலுவலகப் பணி முடிந்து, கோலாலம்பூர் பயணிகள் மாலை வேளையில் வழக்கமாக சந்திக்கும் போக்குவரத்து நெரிசலில் சிக்கி, நிகழ்ச்சிக்கு சற்று பின்னால் வந்தவர்கள், பலகாரத் தட்டுகளும் தேநீர்க் குடுவையும் இருந்த இடத்தைதான் முதலில் நாடினர் ஆனால், அங்கிருந்தவர் "எல்லாம் முடிந்துவிட்டது" என்று சொன்னதைக் கேட்டு சற்று ஏமாற்றம் அடைந்து, பின்னர் சமாளித்து-சுதாரித்துக் கொண்டு, அப்படியே சுற்றி இருந்தவர்களை-யும் மெல்லமாக ஒரு நோட்டம் விட்டபடி, மொத்தத்தில் பலகாரமும் தேநீரும் கிடைக்காத ஏமாற்றத்தை மறைக்கமுடியாமல் அரங்கத்திற்குள் சென்று அமர்ந்து கொண்டிருந்தனர்.

பலகாரமும் தேநீரும் தீர்ந்துவிட்ட நிலையில், பின்னர் ஏன் அவர் காத்துக் கொண்டிருந்தார் என்றால், விழாவின் சிறப்புப் பிரமுகருக்காக சிறப்பாக பரிமாறப்பட்டு மூடிவைக்கப்பட்டிருக்கும் தட்டுகளும் காலியான பின் அவற்றையும் ஒருசேர எடுத்துக் கொண்டு செல்வதற்காகத்தான்.

இரண்டு-மூன்று பேர் மட்டும் கையில் அச்சிட்ட துண்டுக் காகிதங்களுடன் தனியாக உட்கார்ந்து கொண்டிருந்தனர். தமிழ்த் தாய் வணக்கப் பாடலை அடுத்து வரவேற்புரை முடிந்ததும் நிகழ்ச்சிக்கு வந்து அமர்ந்திருப்பவர்களின் கையில் கொடுத்து, "இவ்வளவு வெள்ளி கொடுத்து இந்த நூலைப் பெற்றுக் கொள்கிறேன்" என்று உறுதி பெறுபெறுவதற்கான சீட்டுத்தாள்கள் அவை.

நாடாளுமன்ற கூட்டம், இலக்கிய நிகழ்ச்சி, திருமணம் உள்ளிட்ட எந்த நிகழ்வாக இருந்தாலும் காலம் தப்பாமல் கலந்துகொள்ளக் கூடிய துன் ச.சாமிவேலனார் அன்றும் சரியான நேரத்திற்கு வந்தார். அதில் கலந்து கொண்ட பொதுமக்களும் கட்சியினரும்தான் மிகமிக சீக்கிரத்தில் வந்துவிட்டனர்.

அந்த நேரத்தில் அவருக்கு நாட்டின் உயரிய விருதான "துன்" பட்டம் வழங்கப்படவில்லை. டத்தோஸ்ரீ பட்டம் மட்டும் கொண்டிருந்ததால், "வணக்கம் டத்தோஸ்ரீ, வாங்க டத்தோஸ்ரீ" என்ற முகமன்மொழி நாற்புறத்தில் இருந்தும் ஒலிக்க, புன்னகை தவழ்ந்த முகம்-கூப்பிய கரங்கள் என அனைவரின் அன்பையும் ஒருசேர ஏற்றுக் கொண்ட டத்தோஸ்ரீ சாமிவேலு, நேராக நிகழ்ச்சி அரங்கிற்கு செல்ல முயன்றார்.

"பலகாரம் தயாராக இருக்குங்க டத்தோஸ்ரீ" என்று சொல்லி அவரை இடைமறித்தார் நூலாசிரியர். சிறப்பு மேசைக்குச் சென்ற அவர், அடுக்கி வைக்கப்பட்டிருந்த நால்வகைப் பலகாரங்களில், பாசிப் பயிற்று உருண்டைகளில் மட்டும் ஒன்றே ஒன்றை எடுத்துச் சாப்பிட்ட சாமிவேலு, எடுத்த எடுப்பிலேயே, இந்த உருண்டையில் கலந்துள்ள தேங்காய்ப்பூ, சாறு பிழியப்பட்ட சக்கை என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.



எனக்கு பெருவியப்பாக இருந்தது; நாட்டில் நீண்ட சாலைகளையும் அகன்ற பாலங்களையும் தட்டி தட்டி கட்டி எழுப்பும் ஓர் அமைச்சர், உணவு விடயத்திலும் இத்துணை சமர்த்தராக இருக்கிறாரே என்று எண்ணிப் பார்த்தேன்.

அரசியலில் தன்னை அண்டி நின்றவர்களை எப்படி தாய்க் கோழியைப் போல பாதுகாத்தாரோ, அதைப்போல தமிழிலக்கிய வட்டத்திலும் தனக்கு ஆதரவான எழுத்தாளர்களுக்கு பாரி மன்னனைப் போல விளங்கினார் சாமிவேலு.

ஓர் எழுத்தாளர், தன் நூல் வெளியீட்டு விழாவிற்கான தேதியை அவரிடமிருந்து பெற்றுவிட்டால், அந்த எழுத்தாளர் கரைசேர்ந்தார் என்று பொருள்.

மஇகா 2-ஆம் கட்ட, 3-ஆம் கட்ட தலைவர்களின் சட்டைப் பையில் கை வைக்காத குறையாக அவர்களிடம் கேட்டுக்கேட்டு பெற்று, குறைந்தது அரை இலட்சமாவது வசூலித்து சம்பந்த எழுத்தாளரிடம் ஒப்படைப்பார்.

ஒருமுறை மஇகா தலைமையகத்தின் நேதாஜி அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட நூல் வெளியீட்டு நிகழ்வின்போது, கடுமையான இடைநில்லாத மழை மாலை 7:00 மணிக்கு தொடங்க இருந்த நிகழ்ச்சி, எட்டு மணியைத் தொட்ட பின்னும் வெறும் 12 பேர்தான் வந்திருந்தனர். அப்போதுகூட, சொந்தப் பணத்தைப் போட்டு 25 ஆயிரம் வெள்ளியை வழங்கி, தன்னை நம்பிய எழுத்தாளரை கண்கலங்காமல் காத்தவர் சாமிவேலு.

அரசியலில் கடும்போக்காளராக வாழ்ந்த சாமிவேலு, இலக்கிய மேடையில் ஒருகாலும் அரசியலைக் கலக்கமாட்டார். அந்தக் கண்ணியத்தை கடைசிவரைக் காப்பாற்றிய அவர், நூல், நூலாசிரியர், சமுதாயத்தைப் பற்றி மட்டுமே பேசுவார்.

ஒரு சில எழுத்தாளர்கள் தங்களுக்கு ஏதேனும் பணமுடை ஏற்பட்டால், உடனே சாமிவேலு தலைமையில் ஒரு நூல் வெளியீட்டு விழாவை நடத்தினால் மீட்சி பெறலாம் என்ற நம்பிக்கையை மலேசியாவில் வாழ்கின்ற தமிழ் எழுத்தாளர் சமூகத்தில் ஏற்படுத்திய கோமகனைப் போன்ற சாமிவேலனாரின் மறைவு, நாட்டின் அரசியல் தளத்திற்கு மட்டுமல்ல; தமிழ் இலக்கிய வட்டத்திற்கும் இழப்பாகும்.


87 வயதான சாமிவேலு, அறிஞர் அண்ணவின் பிறந்த நாளான செப்டம்பர் 15-இல் மறைந்தார். மலேசியத் தமிழர்களையும் இந்திய சமுதாயத்தையும் ஒரு தலைமுறைக் காலத்திற்கு அரசாங்கத்தில் பிரதிநிதித்த அவர், அரசியல் களத்தில் ஏற்படும் வெம்மையைத் தணித்துக் கொள்வதற்காகவே இலக்கிய நிகழ்ச்சிகளில் விரும்பிக் கலந்துகொண்டார்.

மலேசியத் தமிழ் எழுத்தாளர்களுக்கு பணம் காய்க்கும் மரமாகத் திகழ்ந்து வந்தார் தமிழ் இன-மொழி உணர்வாளரான துன் சாமிவேலு.

வாழ்க சாமிவேலு புகழ்!
வளர்க மலேசியத் தமிழர்கள்!!

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# குருந்தூர் மலைப் பகுதியில் வலிந்த நில அபகரிப்பிற்கு எதிராகப் போராடியவர்கள் கைது



இலங்கையின் வடக்கே முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்தூர்மலையில், தமிழர்களின் நிலங்கள் தொல்லியல் பூமி அல்லது பிரதேசம் என்ற போர்வையில் வலிந்து நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கு போராட்டத்தை ஏற்பாடு செய்த குமுளமுனை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் ரட்ணராஜா மயூரன் மற்றும் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் புதன்கிழமை (21) மாலை பொலிசாரால கைது செய்யப்பட்டனர்.

குருந்தூர் மலைப்பகுதியில் 619 ஏக்கர் நிலத்தை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயலும் செயல்பாட்டிற்கு எதிராக இன்று கவணஈர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது. இந்த போராட்டங்களை முன்னின்று ஏற்பாடு செய்த ரவிகரன் மற்றும் மயூரன் ஆகியோர் மாலையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.



கைது செய்யப்பட்டுள்ள தாங்கள் இருவரும் வெள்ளிக்கிழமை (22) காலை நீதிமன்றில் நிறுத்தப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் பொறுப்பதிகாரி தம்மிடம் தெரிவித்தார் என்று ரவிகரன் கனடா உதயனிடம் தெரிவித்தார்.

தொல்லியல் திணைக்களத்தின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

குருந்தூர் மலையில் நீதிமன்ற உத்தரவையும் மீறி கலகமுவ சாந்தபோதி தேரர் தலைமையில் பெரிய பௌத்த விகாரை ஒன்று வேகமாக கட்டப்பட்டு வருகிறது. அங்கு தமிழர்கள் யாரும் செல்ல முடியாதபடி இராணுவம் தடுப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் கட்டுமானத்திற்கு தேவையானவையும், பௌத்த குருமாரும், இராணுவத்தினரும் சென்றுவர முடிகிறது.





இலங்கையிலேயே ஒப்பீட்டளவில் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே இராணுவப் பிரசன்னம் மிகவும் அதிகமாக உள்ளது.

# அன்பின் தொனி - 664

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**பொய்யான தேவர்களின் விக்கிரகங்கள்**

**11. காமோகஷ் / மோளோகு** - Chemosh / Molech

அப்பொழுது சாலொமோன் எருசலேமுக்கு எதிரான மலையிலே மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம் மோன் புத்திரரின் அருவருப்பாகிய மோளோகுக்கும் மேடையைக் கட்டினான். இப்படியே தங்கள் தேவர்களுக்குத் தூபங்காட்டிப் பலியிடுகிற அந்நியஜாதியாரான தன் ஸ்திரீகள் எல்லாருக்காகவும் செய்தான். **- 1 ராஜாக்கள் 11: 7-8**

அவர்கள் என்னைவிட்டு, சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், மோவாபியரின் தேவனாகிய காமோசையும், அம்மோன் புத்திரரின் தேவனாகிய மில்கோமையும் பணிந்துகொண்டு, அவன் தகப்பனாகிய தாவீததைப்போல என் பார்வைக்குச் செம்மையாய் இருக்கிறதைச் செய்யவும், என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளவும், அவர்கள் என் வழிகளில் நடவாமற்போனபடியினால் அப்படிச் செய்வேன். **- 1 ராஜாக்கள் 11: 33**

நீ உன் சம்பத்தையும் உன் பொக்கி'ங்களையும் நம்புகிறபடியினாலே நீயும் பிடிக்கப்படுவாய், அப்பொழுது கேமோஷ் சிறையாக்கப்பட்டுப்போம், அதின் ஆசாரியரும் பிரபுக்களும் ஏகமாய்ச் சிறைப்பட்டுப்போவார்கள். **- எரேமியா 48: 7**

மோவாபே, உனக்கு ஐயோ! கேமோஷ் விக்கிரகத்தையடுத்த ஜனம் அழியும், உன் குமாரரும் சிறைபிடிக்கப்படுகிறார்கள், உன் குமாரத்திகளும் சிறைபிடிக்கப்பட்டுப்போகிறார்கள். **- எரேமியா 48: 46**

**12. வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டி** - Golden Calf

நான் பார்த்தபோது, நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியை உங்களுக்கு உண்டாக்கி, கர்த்தர் உங்களுக்கு விதித்த வழியைச் சீக்கி ரமாய் விட்டு விலகினதைக் கண்டேன். **- உபாகமம் 9: 16**

அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியைத் தங்களுக்கு உண்டாக்கி: இது உன்னை எகிப்திலிருந்து கொண்டு வந்த உன் தெய்வம் என்று சொல்லி, கோபமூட்டத்தக்க பெரிய அக்கிரமங்களை செய்திருந்தாலும். **- நெகேமியா 9: 18**

அவர்கள் ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியையுண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள். தங்கள் மகிமையைப் புல்லைத் தின்கிற மாட்டின் சாயலாக மாற்றினார்கள். **- சங்கீதம். 106: 19-20**

**13. மெரொதாக்** - Merodach

பாபிலோன் பிடிபட்டது, பேல்வெட்கப்பட்டது, மெரொதாக் நொறுங்குண்டது, அதினுடைய சிலைகள் இலச்சையடைந்தது, அதினுடைய விக்கிரகங்கள் நொறுங்கிப்போயின என்று ஜாதிகளுக்குள்ளே அறிவித்துப் பிரசித்தம்பண்ணுங்கள், இதை மறைக்காமல் கொடியேற்றி விளம்பரம்பண்ணுங்கள். **- எரேமியா 50: 2**

**14. நேபோ** - Nebo

பேல் பணியும், நேபோ குனியும், அவைகளின் விக்கிரகங்கள் க ா ட் டு மி ரு க ங் க ளு க் கு ம் நாட்டுமிருகங்களுக்கும் சுமையாகும், நீங்கள் சுமந்தசுமைகள் இளைத்துப்போன மிருகங்களுக்குப் பாரமாயிருக்கும். அவைகள் ஏகமாய்க் குனிந்து பணியும், சுமைகளை அவைகள் தப்புவிக்கமாட்டாது, அவைகள் தாமே சிறைப்பட்டுப்போகும். **- ஏசாயா 46: 1-2**

**15. நிகுஸ்தான்** - Nehushtan

அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண் கலச்சர்ப்பத்தை உடைத்துப்போட்டான், அந்நாட்கள்மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள், அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். **- 2 ராஜாக்கள் 18: 4**

**16. வலைகள், பறிகள்** - Net and Drag

அவர்களெல்லாரையும் தூண்டிலினால் இழுத்துக்கொள்ளுகிறான், அவர்களைத் தன் வலையினால் பிடித்து, தன் பறியிலே சேர்த்துக்கொள்ளுகிறான், அதினால் சந்தோ'ப்பட்டுக் களிகூருகிறான். ஆகையால் அவைகளினால் தன் பங்கு கொழுப்புள்ளதும், தன் போஜனம் ருசிகரமுள்ளதுமாயிற்று என்று சொல்லி அவன் தன் வலைக்குப் பலியிட்டுத் தன் பறிக்குத் தூபங்காட்டுகிறான். **- ஆபகூக். 1: 15-16**

**17. சந்திர சூரிய நட்சத்திரங்கள்** - Sun, Moon, Stars

உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். **- உபாகமம் 4: 19**

தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் விட்டுவிட்டு, இரண்டு கன்றுக்குட்டிகளாகிய வார்ப்பித்த விக்கிரகங்களைத் தங்களுக்கு உண்டாக்கி, விக்கிரகத் தோப்புகளை நாட்டி, வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்து கொண்டு, பாகாலைச் சேவித்தார்கள். **- 2 ராஜாக்கள் 17: 16**

**18. நிஸ்ரோக்** - Nisroch

அசீரியா ராஜாவாகிய சனகெரிப் பிரயாணப்பட்டு, திரும்பிப்போய் நினிவேயில் இருந்துவிட்டான். அவன் தன் தேவனாகிய நிஸ்ரோகின் கோவிலிலே பணிந்துகொள்ளுகிறபோது, அவன் குமாரராகிய அத்ரமலேக்கும் சரேத்சேரும் அவனைப் பட்டயத்தினால் வெட்டிப்போட்டு, ஆரராத் தேசத்திற்குத் தப்பி ஓடிப்போனார்கள், அவன் குமாரனாகிய எசரத் தோன் அவன் பட்டத்திற்கு வந்து அரசாண்டான். **- 2 ராஜாக்கள் 19: 37**

**தொடரும்...**



# ஜீவன் முக்தி 593

## திருடப்பட்ட ஆனந்தம் மீட்கப்பட வேண்டும்

உங்கள் வாழ்க்கையிலும் அலைந்து கொண்டிருக்கிற ஜீவான்மாவுக்கு ஞானகுருநாதன் புத்தியை அறிமுகம் செய்து வைத்தால் அதனுடைய தேவையைத் தெரிந்துகொண்டு அதன்வழி வாழ ஆரம்பிப்பீர்கள்.

பல்வேறு சத்யங்களின் மூலமாக உங்களின் புத்தியைப் பலமாக்குவதுதான் உங்களுக்குச் செய்யப்பட வேண்டிய முதல் உதவி.

ஞான குருநாதனால் மட்டும்தான் ஜீவான்மாவிற்குப் புத்தியை அறிமுகப்படுத்த முடியும். இங்கு ஞானகுருநாதன் புத்தியை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்.

அப்படியென்றால் உங்களுக்குள் இருக்கிற தெளிவை உயிர்ப்பிக்கிறார். உங்களுக்குள் தெளிவு எப்போது உயிர்ப்பிக்கப்படுகிறதோ அப்போதுதான் உங்களுக்கு முதன்முதலில் புரியும். “ஆஹா நம்மிடம் இருந்த ஆனந்தத்தை யாரோ தூக்கிக்கொண்டு போய்விட்டார்களே” என்று!

சுக்ரீவனின் மனைவியான ஆனந்தம் களவாடப்பட்டிருக்கிறது. வாலி எடுத்துக்கொண்டு போய்விட்டான். அதேபோல தம்முடைய வாழ்க்கையின் சாரமான சீதையை மீட்கத்தான் பரமாத்மாவை மீட்கத்தான் ராமர் புறப்படுகிறார். ஜீவான்மா எப்பொழுது தம்முடைய பாகமான பரமாத்ம அனுபூதியை இழந்துவிட்டோம் என்று உணர்கிறதோ அப்பொழுதுதான் தனியே அந்தக் காட்டிலே சிக்கித் தவிக்கிறது என்பதையும் தெரிந்து கொள்கிறது. உடனே சத்குருவை அனுமனை ஜீவான்மா தேடுகிறது.

சீதான் பரமாத்மா. எப்போது தம்முடைய பரமாத்ம ஸ்வரூபத்தோடு இருந்த தொடர்பை இழந்துவிட்டதாக ஜீவாத்மா நினைக்கிறதோ அப்போதுதான் காட்டிலே அலைகிறது.
சத்குருவைத் தேடுகிறது. சத்குருவை நாடுகிறது.

அனுமன் நினைத்திருந்தால் அந்த விநாடியே பறந்து சென்று பரமாத்மாவைக்கொண்டு வந்து ஜீவாத்மாவோடு சேர்த்திருக்க முடியும். எப்படியானாலும் கடைசியில் அவர்தான் செய்தார். கடைசியில் பார்த்தால் அவரால்தான் மொத்தமுமே நடந்தது.

ஆனால் உடனடியாகச் செய்யவில்லை. அனுமன் ஜீவாத்மாவைப் பக்குவப்படுத்துகிறார். தயார்படுத்துகிறார்.

எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக இணைத்துத் தயார்படுத்துகிறார். புத்தியாகிய சுக்ரீவனை அறிமுகப்படுத்துகிறார்.

புத்திக்கு ஜீவான்மா தேவை என்பதையும் ஜீவான்மாவிற்கும் புத்தி தேவை என்பதையும் இருவருக்கும் உணர வைக்கிறார் சத்குரு அனுமன்.

அனுமன்தான் இரண்டுபேரும் ஒருவருக்கு ஒருவர் எப்படித் தேவைப் படுகிறார்கள் என்பதை உணர வைக்கிறார்.

உடனடியாகப் புத்தி - ஜீவான்மா சுக்ரீவன் - ராமன் இரண்டு பேருமே ஒரு முடிவுக்கு வருகிறார்கள். புத்தி சொல்கிறது “நான் தொலைத்த ஆனந்தத்தை எனக்கு மீட்டுக் கொடுங்கள்”.

ஜீவாத்மா சொல்கிறது: “நீ தொலைத்த ஆனந்தத்தை உனக்கு நான் மீட்டுக் கொடுக்கிறேன். நான் தொலைத்த பரமாத்மாவை மீட்டுக் கொள்வதற்கு நீ எனக்கு உதவி செய்”.

இரண்டுபேருமே ஒப்புக் கொள்கிறார்கள். உடனடியாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனந்தத்தைத் திருடிக்கொண்டு சென்றவன் யார்? “வாலி அகங்காரம்தான் அது!”.

## புத்தி கண்ட ஆனந்தம்

இருவரும் வாலியை அழிப்பதற்கு அவையில் உட்கார்ந்து திட்டம் தீட்டுகிறார்கள்.

“இந்த அகங்காரத்துக்கு மட்டும் எப்போதுமே பெரிய சக்தி உண்டு.

நேரடியாக அதை எதிர் கொண்டீர்கள் என்றால் அது இன்னமும் அதிகமாக வளர்ந்துகொண்டே போகுமே தவிர அழியாது.

அதை மறைமுகமாகத்தான் அழிக்க முடியும். அதைத்தான் தியான நுட்பம் என்று சொல்வது.

“நேரடியாக அகங்காரத்தை அழிக்க முடியாது. மறைந்து நின்றுதான் நீங்கள் அழித்தாக வேண்டும்” என்று பலத்தையும் பலவீனத்தையும் ஞான சத்குருநாதர் விளக்குகிறார். அதாவது நுட்பத்தை தீக்ஷையாகக் கொடுக்கிறார்.

தீக்ஷை நடைபெறுகிறது. இங்கு ஞான சத்குருதான் ஜீவாத்மாவிற்கு தீக்ஷை அளிக்கிறார்.

அப்போது சொல்கிறார் “புத்தியையும் அகங்காரத்தையும் மோ தவிடு”. பட்டறிவையும் அகங்காரத்தையும் மோதவிடுவது.

பல நேரத்தில் பக்தர்களிடம் சொல்வதுண்டு. “நான் உங்களிடம் பேசுவதற்குக்காரணமே நீங்கள் உங்களுக்குள் பேசாமல் இருக்க வேண்டும் என்தற்காகத்தான்”.

வேறு ஒன்றும் இல்லை. நான் சும்மா இருந்தால் நீங்கள் உள்ளே பேசிக்கொண்டே இருப்பீர்கள்.

நான் பேசும்பொழுது அந்த வார்த்தைகளைப் பார்த்து உங்களுடைய மனம் இந்த வார்த்தைகளோடு சண்டை அடித்துக்: கொண்டிருக்கும். அப்போது நான் என்ன செய்வேன் என்னுடைய வேலையை உங்கள் உள்ளுக்குள் கவனித்து விடுவேன். நான் உங்களுக்குள் செய்ய விடுவேன்.

இங்கும் அதுதான் நடக்கிறது. பட்டறிவாகிய சுக்ரீவனை அனுப்பி அகங்காரமான வாலியை மோத விடுகிறார்.

இரண்டுபேரும் அவர்களுடைய வேலையைச் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

மோதிக்கொண்டு இருக்கிற நேரத்திலேராமர் ஜீவாத்மா அமைதியாகத் தம்முடைய வேலையை முடித்துவிடுகிறார். சத்குருவின் வழிகாட்டுதலில் இனிமையாக நடக்க வேண்டியது நடந்தேறுகிறது.

அதாவது நேரடியாக அகங்காரத்தோடு மோத முடியாது. வாலியும் சுக்ரீவனும் எதிரெதிராகப் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதில் ஒரு முக்கியமான பிரச்சினை முக்கியமான ஒரு விஷயம் என்னவென்றால் புத்தியும் அகங்காரமும் பார்ப்பதற்கு பெரும்பாலும் ஒரே மாதிரிதான் இருக்கும்.

வாலியும் சுக்ரீவனும் ஒரேமாதிரிதான் இருக்கிறார்கள். இப்போது “வாலிக்கு துணை செய்வதா? சுக்ரீவனுக்கு துணை செய்வதா?” என்று ஜீவாத்மா தடுமாறிப் போய் விடுகிறது.

முதல்நாள் போரில் கதைப்படி ராமாயணத்தின்படி ராமர் யார்மீது அம்பு விடுப்பது என்று தெரியாமல் அம்பெய்வதை விட்டு விடுகிறார். நிறுத்தி விடுகிறார்.

சுக்ரீவன் வாலியிடம் சரியான உதை வாங்கிக்கொண்டு திரும்பி விடுகிறான்.

வந்து ராமர் காலில் விழுந்து “என்ன அய்யா! ‘நீ போ நான் பார்த்துக் கொள்கிறேன்!’ என்று சொல்லி அனுப்பினீர்கள். பின்னால் வருவீர்கள் நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள் என்றுதானே நிம்மதியாய் தைரியமாய்ப் போனேன்.

என்னை அனுப்பி விட்டு என்ன செய்து கொண்டிருந்தீர்கள். நான் உதை வாங்கியதைத்தான் பார்த்துக்கொண்டு இருந்தீர்களா?” என்று கேட்கிறார்.

ராமர் சொல்கிறார் “நான் என்னப்பா செய்வது? உனக்கும் அவனுக்கும் வித்தியாசமே எனக்குத் தெரியவில்லை”.

ஒரு மிகப்பெரிய உண்மை என்ன வென்றால் புத்திக்கும் அகங்காரத்திற்கும் வித்தியாசம் தெரியாது.

இப்படி புத்திக்கும் அகங்காரத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் ஜீவான்மா தடுமாறுவதைத்தான் குழப்பம் என்று நாம் சொல்கிறோம் அதாவது மனக்குழப்பம்.

அப்போது உடனே ராமர் அனுமனை நோக்கித் திரும்புகிறார் தீர்வுக்காக!

அங்கு சத்குரு வருகிறார். சத்குரு வந்து அதற்கு ஒரு அருமையான தீர்வு கொடுக்கிறார் “புத்திக்கு ஒரு மாலை அணிவித்து அனுப்புங்கள்.

அப்படியென்றால்தான் இருவரும் சண்டை போடும்பொழுது சுக்ரீவன் யார் என்று தெரிந்து கொள்ளலாம். மாலை இல்லாத ஆளை நாம் நேரில் கவனித்துக் கொள்ளலாம்” என்று சொல்கிறார்.

அதனால்தான் சக்திக் காப்பையும் மாலையையும் தியானம் செய்பவர்கள் அணிந்துகொண்டே இருக்கிறார்கள். இவர் நம்மவர் இவர்கள் சுக்ரீவன்கள். இவர்கள் காப்பாற்றப்பட வேண்டியவர்கள். இவர்கள் ஜீவன் முக்தியை வேண்டியவர்கள் என்பதை உணர்த்தத்தான் 24 மணி நேரமும் கழுத்தில் மாலை அணிந்து இருக்கிறார்கள்.

புத்தி உள்ளவர்கள் என்று அவர்களுக்கே சொல்லிக்கொள்வதற்காகத்தான் மாலை போட்டுக்கொண்டே சமுதாயத்திற்கு திரும்பிச் செல்கிறார்கள்.

மாலை போன்ற ஒன்று இல்லா விட்டால் சமூகப் பிராணியான மனிதனால் தம்மைத்தானே விழிப்புணர்வோடு தற்காத்துக் கொள்வது இயலாது.

இப்படி ஏதோ ஒரு வகையில் “நான் தியானம் செய்கிறவர்” என்ற நினைவூட்டுதல் நமக்கே இல்லாவிட்டால் நம் ஜீவன் குழம்பிவிடும். அதற்கு மாயையும் நிஜத்தையும் பிரித்துப் பார்க்கத் தெரியாது.

இப்படி யார் மேல் அம்பு பாய வேண்டும் யாரைக் காக்க வேண்டும்” என்ற தெரியாமல் போய்விடுவதனால்தான் அனுமன் சத்குருநாதன் மாலை அணிவித்து அனுப்புகிறார்.

அப்போதிலிருந்துதான் தீக்ஷை பெற்ற சீடர்களுக்கு மாலை போடுவது ஆரம்பித்தது போல! சுக்ரீவனுக்கு மாலையை அணிவித்து இரண்டாவது நாள் போருக்கு அனுப்பு கிறார்கள். இரண்டாவது நாள் போரில் இன்னொரு அருமையான கருத்து மறைந்து நின்று ஏழு ஜரா மரங்களைத் துளைத்துச் செல்லுமாறு அம்பைச் செலுத்துகிறார் ராமன்.

நிர்வாண சரீரத்திலே ஒளிந்துகொண்டு ஏழு சரீரங்களையும் துளைத்துச் செல்லும் ஞானசக்தியை ஜீவான்மா வெளிப்படுத்துகிறது.

சத்குருநாதன் கொடுத்த தியான நுட்பத்தை உபயோகம் செய்து அனுமன் கொடுத்த ஆலோசனையின் பேரிலே ஏழு மரங்களுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு அந்த அனுமன் கொடுத்த தீக்ஷையாகிய கருத்துகளை உள்வாங்கி தம்முடைய சங்கல்பமாகிய அம்பை ராமர் எய்கிறார்.

அந்த அம்பு சென்று அகங்காரமான வாலியை அழித்து விடுகிறது. வாலி மோக்ஷம் நிகழ்கிறது.

நிர்வாண சரீரத்தில் இருந்து உங்களின் சங்கல்பம் என்ற அம்பு வெளிப்பட்டால் மட்டும்தான் அகங்காரம் என்ற வாலியை அழிக்க முடியும். நீங்கள் வேறு எந்தச் சரீரத்தில் இருந்தீர்கள் என்றாலும் அகங்காரத்தை எதிர்கொண்டவுடன் உங்களின் பாதி சக்தி அகங்காரத்திற்குப் போய்விடும். அகங்காரத்தை ஒன்றும் செய்ய முடியாது.

வேறு ஒன்றுமில்லை “இந்தத் தியானம் செய்யுங்கள்” என்று நான் உங்களுக்குச் சொன்னவுடனேயே உங்களின் அகங்காரம் என்ன செய்யும்?

உங்கள் அகங்காரம் செய்யும் முதல் வேலை தியானம் செய்வதற்காக உங்களுக்குள் எழும் உற்சாகத்தில் பாதியை எடுத்து விடுவதுதான்.

அகங்காரம் பேசும். “எத்தனையோ முயற்சி செய்து பார்த்து விட்டேன். அதெல்லாம் ஒன்றும் முடியவில்லை” என்று காரணம் சொல்லும். அப்படியென்றால் என்ன அர்த்தம்? முயற்சிக்கு முன்பாகவே உங்களுடைய சக்தியில் பாதி அகங்காரத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு விடுகிறது.

வாலி என்றால் என்னவென்றால் நீங்கள் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பாகவே “இதைச் செய்தாலும் உருப்படாது” என்று ஒரு தெளிவான முடிவுக்கு வந்துவிடுகிறீர்கள் இல்லையா? அதுதான் வாலி.

“நான் தொட்டு ஏதாவது உருப்பட்டு இருக்கிறதா? நான் எல்லாம் போய் இதைச் சாதிக்க முடியுமா?” என்று உங்களின் மனம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே சலித்துக் கொள்கிறது பார்த்தீர்களா “அதுதான் வாலி”. அதுதான் அகங்காரம்.

அந்த வாலியை நேரடியாக எதிர் கொள்ள முடியாது. அதனால் ஏழு சரீரங்களுக்குப் பின்னால் நிர்வாண சரீரத்திலே ஒளிந்துகொண்டு அந்த ஆன்ம ஞானநிலையிலே இருந்து ஜீவான்மா வானது சங்கல்பம் என்ற சக்தியான அம்பை எய்கிறது.

சத்குருவின் தீக்ஷையின்படி இந்தச் சங்கல்ப அம்பு எய்யப்பட்டது என்றால் நேராக அடித்து அகங்காரம் அழிகிறது. ஆனந்தம் மீண்டும் புத்திக்கு அளிக்கப்பட்டு விடுகிறது.

அதுதான் வாலி மோட்சம்.

அகங்காரம் அழிந்த விநாடியே ஆனந்தம் புத்தியை அடைகிறது.

ராமன் அனுமனைப் பார்த்தது சுக்ரீவனை நண்பனாக்கிக்கொண்டு வாலியை அழித்தது என்பதுவரை ஆரோக்கியப் பயணம்.

அதற்குப் பிறகு ஆரம்பிப்பதுதான் ஆன்மீகப் பயணம்.

## எடுத்துரைப்பதா? இல்லை இடித்துரைப்பதா?

சுக்ரீவன் தன் ஆனந்தத்தைப் பார்த்தவுடனேயே ராமனுக்குத்தான் செய்து கொடுத்த சத்தியத்தை மறந்து விடுகிறான்.

“பரமாத்மாவைக் கொண்டுவந்து உன்னோடு நான் சேர்ப்பேன். ஞானம் அடைய வைப்பேன்” என்ற சத்தியத்தை மறந்து என்ன செய்கிறான்? நன்றாக ஜாலியாக சோமரசம் சோமபானம் எல்லாவற்றையும் குடித்துவிட்டு ஆனந்தத்தோடு இனிமையாக வாழ ஆரம்பித்துவிடுகிறான்.

ஞான சத்குருவை வாழ்வில் சந்தித்தப் பின் பல சீடர்களின் வாழ்வில் நிகழும் சம்பவம் இது. ஞான மடைவதற்காக சத்குரு கொடுத்த சத்யங்களை வைத்து தற்காலிகமாக அழிந்துவிடக்கூடிய வாழ்வின் சின்ன சின்ன அம்சங்களில் கிடைக்கும் இனிமைகளில் இலக்கை மறந்து வாழ ஆரம்பித்து விடுவார்கள்.

கதையில் ஆறுமாதம் கழிந்தது. ஒரு ஆண்டும் கழிந்தது. சுக்ரீவன் தன் இலக்கு நோக்கி திரும்புவதாகவே தெரியவில்லை.

(தொடர்ச்சி 29 பக்கம்)

## ஜீவன் முக்தி 593

(28 பக்கத் தொடர்ச்சி...)

ராமர் பார்த்தார் “என்னடா இது? சரி அதிக நாள் மனைவியோடு இல்லாமல் இருந்தான். இப்போதுதான் சேர்ந்து வாழ்கிறான். கொஞ்சநாள் வாழட்டும் பரவாயில்லை என்று சும்மாயிருந்தால் நமக்கு இவன் அளித்த சத்தியத்தையே மறந்துவிட்டானே! என்ன செய்வது?” என்று யோசித்தார்.

நீங்களும் உங்களின் வாழ்வில் பார்த்திருப்பீர்கள் உடல் நலமும் மன நலமும் வந்து விட்டால் போதும் அதன் பிறகு ஜாஸ்தி தியானம் செய்ய வேண்டும் என்று தோன்றாது. அப்படியே நம்முடைய ஆன்மீகப் பாதையில் பெருத்த மந்தத் தன்மை வந்துவிடும்.

“எல்லாமே நன்றாகத்தான் இருக்கிறது. பரவாயில்லை. எல்லாம் நன்றாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது” என்று தினமும் தியானம் செய்வதைக்கூட பல சுக்ரீவர்கள் நிறுத்தி விடுகிறார்கள்.

சில நேரத்தில் ஆஸ்ரமத்திற்குள் வந்து பிரம்மச்சரியம் எடுத்தவுடனே சிலருக்கு இந்த மந்தத்தன்மை வரும். எல்லாமேமுடிந்து விட்டது மாதிரி தோன்றும்”.

ஏனென்றால் வாலி வதம் முடிந்து விட்டது.

இதற்குமேல் உடனடியாக ஒன்றும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

அதாவது உடனடியாக தீர்த்தாக வேண்டிய பிரச்சினை இருந்தால் மட்டும்தான்... தலை பற்றிக்கொண்டு எரிந்தால் மட்டும்தான் ஞானம் அடைய வேண்டும் என்கிற எண்ணமேகூட வரும்.

தலை அணைந்து போய்விட்டதென்றால் “சரி பரவாயில்லை. இரண்டாவது முறை நெருப்புப் பிடிக்கிறவரை சும்மாயிருக்கலாம்” என்று தோன்றும். பலர் இப்படித்தான் ஒருசில தியான முகாம்களுக்கு வந்து உடலும் மனமும் ஓரளவு தேறிவிட்டாலே போதும். தியானம் செய்வதை நிறுத்தி விடுவார்கள். அந்த மாதிரியான சூழ்நிலை சுக்ரீவனுக்கு வந்துவிட்டது.

ஜீவாத்மா பரமாத்மாவோடு சேர வேண்டும் என்கிற எண்ணம் மறந்து புத்தி அந்தச் சுகத்திலேயே இருக்கத் துவங்கி விட்டது. அந்தச் சுகத்திலேயே புத்தி லயிக்கத் துவங்கிவிட்டது. இங்குதான் மந்தத்தன்மை ஆரம்பமாகிறது. ஆரம்பத்தில் பார்த்தீர்கள் என்றால் உங்களுடைய ஆன்மீகத் தேடுதல் உடல்நலம் இல்லாமல் மன நலம் இல்லாமல் அந்த அடிப்படையான சுகம்கூட இல்லாததினால்தான் ஆரம்பிக்கும்.

அந்த அடிப்படை சுகமான ஒரு ஆனந்தம் வந்து...அதாவது வாலி வதம் நடந்து ஆனந்தம் என்ற மனைவி திரும்பி வந்தவுடனே என்ன ஆவோம் நாம்? அப்படியே தேடுதலை நிறுத்தி விடுகிறோம்.

அதற்குமேல் ஞானத்திற்குள் போவது இல்லை. அப்புறம் ஜீவன் முக்திக்கு உழைப்பதில்லை.

இந்த வாலி வதத்தோடு முடிந்த ராமாயணங்கள் பல ராமாயணங்கள்!

பல ராமர்கள் வாலி வதத்தோடு முடிந்துவிடுகிறார்கள். காரணம் சுக்ரீவன் தனது மனைவியை அடைந்ததும் அதன் பிறகு அவன் ஒத்துழைப்பது இல்லை. ஆனந்தத்தை அடைந்ததும் புத்தி ஞானத்தை அடைவதற்காக ஒத்துழைப்பதில்லை.

இப்போது சுக்ரீவன் ஒத்துழைத்தால்தான் அதற்கடுத்து பயணம் துவங்கும். அதற்காக இப்போது சத்குருவான அனுமன் தூது செல்கிறார். கதையைப் பார்த்தீர்கள் என்றால் அனுமார் சுக்ரீவனிடம் தூது போகிறார்.

சுக்ரீவனிடம் சொல்கிறார் “அப்பா நீ செய்வது தப்பு. செய்வது பெரும் தவறு. உனக்கு ஆனந்தத்தைக் கொடுத்ததே நீ உன் சக்தி மொத்தத்தையும் ஒன்றுதிரட்டி ராமருக்கு உதவ வேண்டும் என்பதற்காகத்தான்.

ஒப்பந்தத்தின் ஒரு பாகம் இது. உன்னுடைய பங்குக்கு நீ என்ன செய்ய வேண்டும்? சக்தியை எல்லாம் திரட்டி அவருக்குச் சீதையை மீட்டுத்தர வேண்டும் என்று சுக்ரீவனிடம் அவனுடைய பொறுப்பை உணர்த்துகிறார்.

அப்படியென்றால் என்ன அர்த்தம் என்றால் உடலுக்கும் மனதுக்கும் ஒரு அளவிற்குச் சக்தியைக் கொடுத்துத் தயார் செய்தவுடனே அந்த உடம்பும் மனதும் தன் சக்தியை எல்லாம் ஒன்றாகத் திரட்டி ஜீவாத்மாவை பரமாத்மாவிடம்கொண்டு சேர்க்க வேண்டும். அதுதான் ஒப்பந்தம்.

ஆனால் இந்த உடம்பும் மனதும் புத்திக்கு ஓரளவு ஆனந்தமும் சுகமும் வந்தபிறகு என்ன செய்யும்? “அட இதற்கப்புறம் என்னப்பா செய்யப் போகிறாய்? சும்மா விடப்பா. ஏன் நமக்கு தலைக்கு மீறின வேலையையெல்லாம் எடுப்பானேன் விடப்பா” என்று விட்டு விடும்.

அப்போதுதான் “இடித்து உரைத்தல்” அல்லது “எடுத்துரைத்தல்” இந்த இரண்டு வேலையையும்தான் சத்குருநாதர் செய்வார். சிலபேருக்கு “எடுத்துரைப்பார்” சிலபேருக்கு “இடித்துரைப்பார்”.

இங்கே சுக்ரீவனுக்கு எடுத்தும் இடித்தும் அனுமன் உரைக்கிறார். உரைத்தவுடனே திடீரென்று சுக்ரீவனுக்கு ஓரளவுக்குத் தெளிவு வருகிறது. இருந்தாலும் ஒருபக்கம் மனம் “என்ன செய்யப் போகிறோம்? நமக்குத்தான் நடக்க வேண்டியது நடந்து விட்டதே!”.

அப்போது அனுமன் சொல்கிறார் “நீ இப்போது உதவி செய்யவில்லை என்றால் ராமர் உன்னைச் சும்மாவிட மாட்டார்!”.

கொஞ்சம் பயத்தைக் காட்டிய உடனே புத்தி என்ன செய்கிறது?

விழித்துக் கொள்கிறது. “நாம் ஜீவாத்மாவோடு பரமாத்மாவைச் சேர்க்கிற வேலையை ஞானம் அடைகிற வேலையைச் செய்யாவிட்டால் நாம் இப்போது அடைந்திருக்கிற “ஆனந்தம்” என்ற மனைவி இதே போல் தொடர்ந்து நம்மோடு தங்காது. நிரந்தரமாக இதேமாதிரி இருக்காது” என்ற பயம் வந்தால் மட்டும்தான் புத்திக்கு அதைச் செய்தாக வேண்டும் என்ற கட்டாயம் வரும்.

ஆர்வம் அவசரமாக மாறும்.

Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Family Get-together
- Birthday Party
- Graduation Party
- Bridal Shower
- Holiday Party
- Children's Party
- Religious Ceremonies
- Engagement Party
- Wedding Showers
- and more...

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

# இயக்காமலும் உழைக்கிறார்கள்

- உமா மோகன் -

தருத்திரம் என்று தலைக்கடிப்பான் - என்னை
உபத்திரம் என்றே ஒதுக்கிவிட்டான் - அவன்

படிப்பையும் நன்கு முடிக்கவில்லை - ஒழுங்காய்
உழைக்கவும் எங்கும் போவதில்லை

தூரத்து மாமாவின் துணையோடு வாழ்வு
நேரத்திற்கு நேரம் வீட்டிலே சோறு

தண்டம் என்று தகப்பன் சொல்ல - பேச
வேண்டாம் என்று தாயும் சொல்ல

என்னை ஒரு உதை உதைப்பான்
தன்னை மறக்கவென கடைக்குப் போவான் - பின்

விழுந்தெழும்பி வீடு வந்து - என்னை
திருத்தும் வரை திட்டித் தீர்ப்பான்

ஒண்டுக்கும் உதவேன் நான் என்று
கண்டபடி திட்டியுள்ளான் - இன்றோ

குல தெய்வம் நான் என - அவன்
பல தரம் சொல்லுகிறான் - ஏன்?

கறுப்பில் காசு உழைப்பதற்கு - நல்ல
அமைப்பாய் நானும் உள்ளதனால்

ஓடமாட்டேன் என்றபோதும் - என்னை
உருட்டிக் கொண்டு சென்றிடுவான்

பாதை நெடுக வாகனங்கள் - அங்கும்
தேரைப் போல தள்ளி விடுவான்

பல்லுப் போன தாத்தாவோடும்
மல்லுக்குப் போவான் இவன் - “கொஞ்சம்

விட்டுத்தான் கொடேன்” என்றால் - “தாத்தா!
வீட்டிற்போய் படேன் “என்பான் - சிலசமயம்

நாலுநாள் ஆனாலும் நகராது வரிசையங்கு - உடல்
ஏலாது போகும்போது தான்மட்டும் திரும்பிடுவான்

வெய்யிலிலும் மழையிலும் நானங்கு நனைந்தாலும்
சும்மாவேனும் வந்தங்கு பார்க்கமாட்டான் - எரிபொருள்

வந்திட்டுது என்று விட்டால் வந்திடுவான்
முந்தியடித்து மழு விசையோடு தள்ளிடுவான் - சிலசமயம்

பேச்சும் கேட்பான் , பொருட்படுத்தான் - பின்
நேர்த்தியாய் நிரப்பிவிட்டு நின்மதியாய் வெளிப்படுவான்

முந்நூறு ரூபாக்கு நீளக்குழாய் வாங்கி - யார்
கண்ணுக்கும் படாமல் ஒரு உறிஞ்சு

தாங்கியில் அடித்தது அத்தனையும் - எங்கும்
தேங்காமல் வந்து சேரும் போத்தலுக்குள்

எத்தனை போத்தல்கட்குள் முடியுமோ
அத்தனைக்குள்ளும் எடுத்துவிட்டு நின்மதியாய் மூச்சொன்று

அடுத்தமுறை கொடுக்கும்வரை அசைவில்லை அவனுக்கு - எனக்குள்
எடுத்ததை விற்கவோ தரகர்கள் அவனிற்குப் பலருண்டு

ஊரோடு இருப்பவர்கள் மசியமாட்டார் - ஆனால்
ஊர் பார்க்கப் போனவர்கள் அசையவேணும்

ஆரிட்டைக் கிடைக்கும் கறுப்பில் எண்டு
தேடிக்கொள்ளுவினம் கேட்டதையும் கொடுப்பினம்

சும்மா சொல்லவில்லை லீற்றர் ஒன்று
மெய்யாவே ஐயாயிரப்படி நாலு லீற்றர்

கறுப்பில்த்தான் , பாவம் அக்கா
வெறுத்திருக்கும் ஊர்ப்பயணம்

எனக்கு மட்டும் வாயிருந்தால்
மனச்சாட்சியோடு தடுத்திருப்பேன்

என்ன செய்ய என்னை இயந்திரம் என்கிறார்கள்
என்னை இயக்காமலும் உழைக்கிறார்கள்!


HELPING HANDS
SENIOR CARE
VILLA KARUNA
Santhiyaragam
சந்தியாராகம்
Santhiyaragam
SEASON 4
GOLDEN
SUPER SINGER
2022
Tickets & more information:
416-282-4535
416-200-6971
TICKETS
$50
DINNER INCLUDED
Music By
The WIND
Nothing but music!
SATURDAY, SEPTEMBER 24, 2022
from 4:30PM at
Thamil Isai Kalaa Manram of Ontario
1120 Tapscott Rd #3, Scarborough, ON M1X 1S9


சந்தியாராகம்
Santhiyaragam
VILLA KARUNA
HOME FOR SENIORS
HELPING HANDS
SUPER SINGER 4
தமிழ் FM
MEDIA PARTNER
east FM 102.7
Tamil Mirror
Tamilguide.com
Monsoon
eet tv
Krishna
LIVE TELECAST
Thamilar Senthamarai
STAGE SPONSORS
Value Plus PHARMACY
For all your medical drug needs
AISHKA & Transport Inc
COMPUTEK COLLEGE
Lucgaa
PROGRAM SPONSORS
VIJI ANTONY
416-261-0934
Call us +1 416-291-2838
DEVADAS LAW
TIMES IRON WORKS INC.
JSAREES
Majestic City
Millennium
Nallur Kumaran
OPTIMART
GIFT SPONSORS
Life 100
SRITHARAN THURAIRAJAH
TICKET SPONSOR
KIRUBA GANESH

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL-2022

**Powered by**

5635 Finch Ave E
Unit# 5, Toronto, ON
M1B 5K9, Canada
MAHAANS +1 (647) 704-4597
பாரம்பரிய முறைப்படி மரசெக்கில் தயாரிக்கப்பட்ட நல்லெண்ணை, தேங்காய் எண்ணை, கடலை எண்ணை இங்கு கிடைக்கும்.

**Presented by**

VIBRANT HOSPITALITY GROUP
விழா சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com

**Co-Presented by**

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...
Tasty தமிழா ™

உதயன் விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2022

## 16 வது ஆண்டில்

# கனடா உதயன் சர்வதேச விருது விழா

உலகெங்கும் பேசப்படும் இவ்வருட விழாவில் வழங்கப் பெறவுள்ள

## உதயன் விருதுகளின் பட்டியல்

- UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
- UTHAYAN INTER-COMMUNAL RELATIONSHIP AWARD
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - ONTARIO
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - QUEBEC
- UTHAYAN LEADERSHIP AWARD
- UTHAYAN YOUTH ICON AWARD
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD - SRI LANKA
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD - TAMIL NADU

**Saturday October 15th, 2022 at 6.00 pm**

விருது வழங்கலும் இராசப்போசன விருந்தும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

**Kennedy Convention Centre**
1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
(Kennedy & Lawrence Inter-section)

**For More Information, call 416 732 1608 or 647 762 9512**

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com



Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca





26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS
"Fly with Confidence"
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1381 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 23, 2022

# 'அதிசய மனிதர்' ஈழவேந்தன் ஐயாவுக்கு கனடாவில் எடுக்கப்பெற்ற அகவை தொன்னூறு திருநாள்க் கொண்டாட்டம்



கடந்த 17ம் திகதி வெள்ளிக்கிழமையன்று மாலை கனடா ஸ்காபுறோ நகரில் இடம்பெற்ற ஈழப் பற்றாளர் ஈழவேந்தன் ஐயா அவர்களின் அகவை தொன்னூறு திருநாள்க் கொண்டாட்டம் அவரது அபிமானிக-ளால் ஏற்பாடு செய்யப்பெற்று சிறப்பாக நடைபெற்றது. ஈழப் பற்றாளர் ஈழவேந்தன் ஐயா அவர்களது சிறப்புக்களை எடுத்துக் கூறும் இறுவட்டு ஒன்றும் வெளியிடப்பெற்றது.


அதன் சிறப்புப் பிரதிகளை நண்பர்கள் அபிமானிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் விரிசையில் நின்று பெற்றுக்கொண்டார்கள்.

கண்ணன் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். வாழ்த்துரைகள் மற்றும் சிறப்புரைகள் இடம்பெற்றன. குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து கனடாவிற்கு வருகை தந்திருந்த வா. மு. சே. திருவள்ளுவர் அவர்களும் அங்கு உரையாற்றினார். அவர் தனது உரையில் 'மதிப்பிற்குரிய ஈழவேந்தன் அவர்கள் தமிழ்நாட்டில் தங்கியிருந்த காலங்களில் தொடர்ச்சியாக பயணம் செய்து தமிழகத்தில் இருந்த தலைவர்கள் சந்தித்து தனது தாயக மக்களின்



விடுதலைக்காக ஆதரவைத் தருமாறு நேரில் வேண்டிக் கொண்டவர்' என்றார்.

# ஸ்காபுறோவில் சிறப்புற நடைபெற்ற வா.மு.சே. திருவள்ளுவர் அவர்களின் "உலகவன்" நூல் அறிமுக விழா





தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் "தமிழ்ப்பணி" சஞ்சிகையின் ஆசிரியரும் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் அவர்களின் புதல்வருமான "தமிழ்மாமணி" வா. மு. சே. திருவள்ளுவர் அவர்கள் எழுதிய கட்டுரைகள் அடங்கிய "உலகவன்" நூல் அறிமுக விழா 18-09-2022 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள Bhairavi Music Academy கலா மண்டபத்தில் நடைபெற்றது.

கவிஞர் "அருட்கவி" ஞானகணேசன் நெறிப்படுத்திய இந்த நூல் அறிமுக விழாவில் கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகத்தின் தலைவர் திரு பஞ்சநாதன் மற்றும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் திரு அகணி சுரேஸ் ஆகியோர் சிறப்புப் பேச்சாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

சபையில் கலை இலக்கிய நண்பர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் என ஆர்வலர்கள் கலந்து சிறப்பித்தனர்.

நூலாசிரியர் "தமிழ்மாமணி" வா. மு. சே. திருவள்ளுவர் அவர்கள் தனது பதிலுரைய-ில் தற்காலத்தில் மேற்குலகில் பல நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் தங்கள் பொருளையும் நேரத்தையும் செலவு செய்து கலை இலக்கியத்தையும் நுண்கலைகளையும் கற்பதோடு மட்டுமல்லாது. அந்தத் துறைக-ளில் முன்னின்று உழைக்கும் அறிஞர்களையும் ஆசிரியர்களையும் மதித்து நடக்கின்றார்கள்" என்று புகழாரம் சூட்டினார்.

# மட்டக்களப்பில் நடைபெற்ற நூல் அறிமுக விழாவில் சிறப்பு விருந்தினராக கனடா— விசு கணபதிப்பிள்ளை



கடந்த 17ம் திகத சனிக்கிழமை மட்டக்களப்பில் சார்ள்ஸ் மண்டபத்தில் செங்கலடி மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி செபஸ்ரியன் இக்னேசியஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நான்கு நூல்களின் அறிமுக விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கனடா- உதவும் பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை மேற்படி நான்கு நூல்களின் முதற்பிரதிகளைப் பெற்றுக்கொண்டார்.

மட்டக்களப்பு பெரிய கல்லாற்றைச் சேர்ந்த மறைந்த அருட்பணி கலாநிதி அந்தனிஜான் அழகரசன் அடிகளாரின் நான்கு நூல்களே அன்றைய தினம் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றன.

ஆசியுரையை கல்முனை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஏ. தேவதாசன் வழங்கினார்.

"அன்னை மரியின் ஆரோபண இல்லம்" . அவரின் திராட்சைத் தோட்டத்திலே. புரட்சிக் கிறிஸ்த்து மற்றும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்த்துவின் வாழ்க்கை வரலாறு ஆகிய நான்கு நூல்களே அன்று அறிமுகம் செய்து வைக்கப்பெற்றன.

கனடா உதவும் பொற்கரங்கள் அமைப்பின் ஸ்தாபகர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்கள் இறுவட்டுக்களின் பிரதிகளைப் பெற்றுக்கொண்டார்.

# தியாகி திலீபனின் 35வது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் நினைவுரையாற்றிய தமிழ்நாட்டின் வா. மு. சே. திருவள்ளுவர்



ஸ்காபுறோவில் இயங்கிவரும் "பைரவி" நுண்கலைக் கூடத்தின் நிறுவனர் திரு தியாகராஜா ரவிச்சந்திரன் தனது குழுவினர் மற்றும் பெற்றோர் மாணவ மாணவி-கள் சகிதம் ஏற்பாடு செய்த "தியாகி திலீபன்" அவர்களின் 35வது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு கடந்த வியாழக்கிழமை தொடக்கம் மாலை நடைபெறுகின்றது.



கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் நினைவுரையாற்ற தமிழ்நாட்டின் பேச்சாளர் வா. மு. சே. திருவள்ளுவர் அழைக்கப்பெற்றிருந்தார்.

அவரது உரையும் அஞ்சலிக் கவிதையும் சபையோர் மனங்களை உருகச் செய்தன.

அத்துடன் அன்றைய நிகழ்வின இறுதியில் வா. மு. சே. திருவள்ளுவர் அவர்களது நூலான "உலகவன்" சிறப்புப் பிரதிகளை "பைரவி" நுண்கலைக் கூடத்தின் சார்பில் நான்கு பெற்றோர்கள் பெற்றுக்கொண்டனர். தாயக நினைவு பாடல்கள் அங்கு உணர்வோடு இசைக்கப்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136

